417 த-இ
87

ஓம்

# அழகியது

(பாட்டும் குறிப்புரையும்)

LIBRARY
NO. 260
...TTITURAI

புலவர் பாண்டியனார்

பதிப்பகம்

மெய்கண்டான்

செட்டியார் தெரு, கொழும்பு-11

1965

[பதி... ...யோரது]

800/60
139

~~894·811~~

VALVAI MAHALIR MAHA VIDYALAYAM
LIBRARY
BOOK NO. 260
VALVETTITURAI

810

# அழகியது

(பாட்டுங் குறிப்புரையும்)

## புலவர் பாண்டியனார்

பதிப்பகம்

மெய்கண்டான்

செட்டியார் தெரு, கொழும்பு-11

1965

[பதிப்புரிமை ஆக்கியோரது]

ஓம்:

# முன்னுரை

அழகியதெனப் பெயரிய இப்பாட்டுப்பனுவல் உடன்பாட்டானும் எதிர்மறையானும் அழகென்பதுபற்றிக் கூறு முந்நூற்றிருபத்தேழ் பாடல்களின் றொகுதி. அழகியதென்பது தொகுதியொருமையாதலானே இப்பனுவலகத்துக் கூறப்படுவன அழகியவையாதலொக்கும்.

பாட்டெல்லாம் நெடுவெண் பாட்டுக்களுள்ளே நேரிசை வெண்பா வெனப்படும்.

அழகியவை யெனப்பட்டன அறம்பொருளின்பமென்னு மும்முதற் பொருளினும்படு மொருசாரன.

அவை இதனகத்துத் தனித்தனிக் கோவைப்படச் செல்லாது தாய்த்தாய்ச் செல்லாநிற்கு மாதலின் இது பதினெண் கீழ்க் கணக்குப் போலத் தாய பனுவலென்னும் வகையிற் படுவதாம். தாய்த்தாய்ச் செல்லுதல்- இடையிட்டிடையிட்டுச் செல்லுதல்: மும்முதற் பொருளும் விராய்ச்செல்லுத லென்றவாறு.

பனுவலெல்லாம் பிறத்தற்கு முதலாகலின் அறம் பொருளின்ப மென்னு முறுதிப் பொருண் மூன்றும் மும்முதற் பொருளெனப்படும்.

> "அந்நிலை மருங்கி னறமுத லாகிய
> மும்முதற் பொருட்கு முரிய வென்ப"

(தொல். செய்யுளியல். 102.) எனத் தொல்காப்பியனார் முற்றும்மை கொடுத்தோதியதன் கருத்துணராதார் நான்கென வெண்ணித் தொகுக்கப்பட்டனவற்றுள் இறு

திக்கணின்ற வீடென்பதற்கு முன்னர் நின்றனவாகலின் அறமுதலியவற்றை மும்முதற் பொருளென்றாரெனக் கொள்ப. தொல்காப்பியனாருந் திருவள்ளுவனாரும் உறுதிப்பொருண் மூன்றென்றதல்லது நான்கென்றதிலர். இவர்க்கு வீடு அறமுதலாயினபோலச் செய்யப்படுவதன்றித் துறவறத்தின் விளைவாய் முயற்சியின்றித் தலைப்பட்டுத் தெவிட்டாது முடிவின்றித் துய்க்கப்படா நின்றமைந்து முற்றுப் பெறுதலின் அறத்தின்கணடங்குமென வடக்கி உறுதிப்பொருண் மூன்றெனக் கோடலேதுணிபு.

"பெருநூல் சொன்ன அறத்தினால் விளைவ"தெனப் (சிவப்பிரகாசம். பாயிரம். 7) பிறரும் எடுத்தோதினர்.

இனி உறுதிப் பொருளைச் செய்தியாகக்கொள்ளாது பயனாகக் கொண்ட பிற்றை ஞான்றைச் சான்றோர் ஏனை மூன்றற்குப் பின்னர் இறுதியாகப் பெறக்கடவ பயனாகிய வீடுபேற்றினைச் சிறப்புடைமையின் நான்காவதென இறுதிக்கண் வைத்தெண்ணித் தொகுத்து உறுதிப்பொருள் நான்கெனவுங் கொண்டாரென்க. வடமொழியாளருந் தம் முழு முதனூலை முப்பாலெனப் பொருள்படும் பெயரானும் பண்டை ஞான்று வழங்கி வந்தனரென்பது கேட்கப்படுகின்றது. திருக்குறளின் பாயிரமெனப்படுந் திருவள்ளுவ மாலைச் செய்யுளுட் பெரும்பாலன திருவள்ளுவனார்க்குப் பிற்பட்டெழுந்தனவாதலின் அவை முப்பாலை நாற்பாலெனவுங் கூறுவனவாயின.

தொடர்நிலைச் செய்யுட்குரியவென விதந்தோதப் பட்ட அம்மை முதலாய வனப்பெட்டனுள்ளும் ஏற்புடையன தனிநிலைச் செய்யுள், இணைநிலைச் செய்யுள் தொகைநிலைச் செய்யுளென்னுமிவ் வேனைச் செய்யுண் மூன்றற்கு முரியவாகலின் இத்தொகைநிலைச் செய்யுட்கு அம்மை, அழகு, புலன், இழுமென்மொழியான் விழுமியது நுவலுந் தோல் என்றிவ் வனப்பு நான்கும் வந்தவாறு கண்டு கொள்க

துய்க்கப்படுமழகென வொன்றாக்கி ஒருசார் மும் முதற் பொருளினையும் ஒ வாற்றான் இன்பத்தின்பாற் படுத்துக் கூறுமுகத்தான் உ வையாமாறு கூறப்படுதலின் இந்நூனுதலியபொருள் புறத்திணையேழனுள்ளுங் காஞ்சித் திணையுண் முதுமொழிக்காஞ்சித் துறையெனக் கூறப் படும்.

யாம் இப்பனுவல் யாத்துப் பதிப்பு வெளியீடு செய் தற்கு ஊக்கமளித்துறுதுணை நின்றவர் செந்திற்செல்வன் எனப் பெயரிய உழுவலன்பராவர். இவ்விளஞர் சீமான் எனவுஞ் சீமான் செந்திற் செல்வநாதன் எனவுஞ் செந்திற் செல்வநாதன் எனவும் நாதன் எனவும் அழைக்கப்படுவர். இவர் தென்பாண்டி நாட்டகத்துத் திருநெல்வேலி வளா கத்து இராதாபுரத்தை யடுத்த சௌந்தரபாண்டியபுரம் என்னுஞ் சிற்றூரினர். இந்நாளையிற் பலதுறையிலு முன் னேற்றமுந் தலைமையு மெய்தி மிளிரும் நாடார் மரபி னர். இவர் தந் தாய் தந்தையர் கத்தோலிக்க மதத்தி னராயினும் இவர் தந்தொல்லோர்போலத் திருநீற்றொளி பேணுந் திருவாளராய் அடக்க வொழுக்கங்களை அணியா கப் பெற்று நேர்மைவழாது குறிஞ்சிக் கிழவனாகிய குழ கன்பான் மெய்யன்பு பூண்டொழுகுபவர். பிறர்க்கென வாழ்தலில் ஆர்வமிக்குடைய செந்திற் செல்வன் ஈழம் போந்து பல்யாண்டு வதிந்து வரு முரிமையுடைய தொழி லாளராய் எத்துணைச் சிறு தொழிலாயினும் எய்திய திக ழாதுபற்றி முன்னேறலாமென்னுந் துணிவுகொண் டெவ் வாற்றானு முழைக்குந் திட்பமுடையராய்த் தாளாண்மை வேளாண்மை என்றிவ்விரண்டற்கும் இளஞர்க்கு எடுத் துக்காட்டாவர். இவர் தம் அருமைத் தாய்மொழியாகிய செந்தமிழ் மொழியிலுஞ் செந்தமிழறிஞரிடத்துங் கொண்டிருக்கும் பேரன்பு முத்தமிழ் முதல்வனாகிய முக் கட் பெருமானது திருவருள் வாயிலாக இவர்க்கு வேண் டிய நலம்பலவு மேன்மேல் எய்துவிப்பதாகுக

இவ்வழகியதனை எம்பால் அன்பும் பொறுமையுங் கொண்டு செவ்விதிற் பதிப்பித்து வனப்புற அமைத்துச் சுவடியாக்கித் தந்துதவிய கொழும்புச் செட்டியார் தெரு மெய்கண்டான் பதிப்பகத் தலைவர் திரு. நா. இரத்தினசபாபதி அவர்கட்கும், பதிப்பகச் செயலாளர் திரு. நல்லதம்பி நமசிவாயம் அவர்கட்கும் தொழிலாளர்க்கும் எம் நல்லன்பும் பாராட்டும் வாழ்த்தும் உரியனவாகுக.

இங்ஙனம்
**புலவர் பாண்டியனார்**

இரத்துமலானை
(செம்மலர்த் தோட்டம்)
15—10—65

# உரிமையுணர்த்தல்

## வெண்பா

அழகிய தூயநல் லான்றோர் தமிழில்
அழகிய தென்னுநூ லாக்கம் — அழகியபண்
பீண்டிய தந்தை சிவனார்க் கியற்புலவர்
பாண்டியனார் தந்த படைப்பு.

ஓம்

திருச்சிற்றம்பலம்

# அழகியது

(நேரிசை வெண்பா)

1. ஒன்றினொன் றன்க ணுயரு மழகுதனக்
கென்றுமொன் றெல்லை யிலதென்ப-நன்றும்
அழகனு மெம்பெருமாற் கார்வங்கைம் மிக்கா
ரழகெலா மன்னோ னமைவு

(குறிப்புரை) ஒன்றின் ஒன்றன்கண்-ஒரு பொருளிற் காட்டினு மற்றொருபொருளினிடத்து; ஒன்றன்கணின் என இன்னுருபுங் கண்ணுருபுமுடனின்றுழிக் கண்ணுருபு அன் சாரியையொடு தொக்கு நின்றது; இஃது உருபுருபேற்றல். உருபுருபேற்கு மென்பதூஉம் ஆண்டும் பிறண்டும் உருபு தொகவருமென்பதூஉம்,

> "பிறிது பிறி தேற்றலு முருபுதொக வருதலு
> நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப"

(தொல்-சொல் 100)

எனத் தொல்காப்பியன்கண்வருநூலாற் பெறப்படும். இன் னுருபு உறழ்பொருஉப்பொருட்டு.

எல்லையொன்று மெனமாறி முற்றும்மை விரிக்க. எல்லை-உயர்வினெல்லை; ஒரு தனிச்செம்பொருள்காறுமுயர்ந்து அப் பொருளி னழகிய காட்சிக்கு முடிவின்மையின் அழகு தன் பெருக்கத்துக் கெல்லையுடையதன் றெனப்படும் என்ப அழ

கிய லாராய்ச்சிவல்ல புலவரென எழுவாய் விரிக்க. நன்றும்-மிகவும்; ஏனையெல்லாப் பொருளிற் காட்டினு மழகுடைய னிறைவன். ஆர்வம்-காதல்; கைம்மிக்கார்-அளவிறப்பப் பெருகினர்; பண்பின்வினை பண்பியின்மேனின்றது. கைம் மிக்கா ரென்பதற்குத் தொன்மூதறிஞரென எழுவாய் வெளிப்படநில்லாதாயிற்று; ''அகங்குன்றி மூக்கிற்கரியாருடைத்து'' (முப்பால்: கூடாவொழுக்கம்-எ) என்புழிப்போல.

அழகெலாமொருங்குடைமை எம்பெருமானது திருத் தோற்றமாம். அதனால் நன்று மழகனுமெம் பெருமாற் கார் வங்கைம் மிக்காரென்க.

தனித்தனியழகு தொறும் இறைவன் கூறு வெளிப்படும்.

2. எப்பொரு ளாயினும் யாதானு மோருணர்வை
எப்பொழு தாயினு மீர்க்குங்கா-லப்பொழு
தப்பொரு ளவ்வாற்ற லவ்வுயிர் துய்த்திட
நிற்பது பொற்பு நிலை

(கு-ரை) அவ்வாற்றல்: ஈர்க்குமாற்றல்; அப்பொருளினுடைய அவ்வாற்றலெனவிரியும். பொற்பு-அழகு; நிலை-தன்மை; அவ்வாற்றல் பொற்புநிலையென முடியும்; பொற்பாகிய நிலையென்க.

அழகாவ திதுவென்ற திப்பாட்டு. 2.

3. ஏழினு னுக்கு மிசையேபோ லிட்டுண்டற்
கூழினு னுக்கு முணவேபோற்-பாழில்
செறிபீர்க்கு மைம்புலமொய்ச் சேர்க்கைத் திறனு
ளறிவீர்க்கு மாற்ற லழகு

(கு-ரை) ஏழென்றது ஏழிசையை; அவை பண்ணிசையின் கூறுபாடு; அவையாவன குரல், துதம், கைக்கிளை,

உழை, இளி, விளரி, தார மென்பன. ஏழிசை தம்முள் விரவுதலாற் செவிச்சுவை யுண்டாகும்; முறையான் உப்புப், புளி, காயமும் பிறவுந் தம்முள் விரவுதலால் வாய்ச் சுவையுண்டாகும்; அவ்வாறு தம்முளொன்றனையொன்று கவருஞ், செறிவுடைய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்ற மென்னும் ஐம்புல நுண்டுகள் பல திரண்டமையுமுடம்பு முதலாய கூறுபாடுகளின்கண் உயிர்களின் அறிவைக் கவர்வதோராற்றலே அழகாம். இட்டுண்டற்காக்கு முணவென்றது சிறப்புடைப் பொருளைத்தானெடுத்து மொழிதல். இசையும் உணவும் எடுத்துக்காட்டுக்கள். பாழில்-பாழாதலில்லாத; ஊழ்-முறை. செறிபு-செறிந்து; மொய்-நுண்டுகள்-(அணு) திறம்-கூறுபாடு. இதுவுமது 3

4. இன்றி யமையா தியைந்து பயத்தலே
யன்றி யழகு மமையுமுறுப்—பொன்றி
உலகு முழுது முயிரொன் றுடைத்து
நிலவு முடலென நின்று

(கு-ரை) பயத்தல்-பயன்கொடுத்தல்; உறுப்பு: உலகினுறுப்புக்களாகிய இருதிணை யைம்பால்; அவை தம்முள் ஒன்றனை யொன் றின்றி யமையாது வித்தும் விளைவுமாய்த் தொடர்புற்றுப் பயன் கொடுத்தலே யல்லாமல் அழகும் வாய்ந்துள்ளன.

உலகுமுழுதும் உறுப் பொன்றி நிலவு முடலென நின்று உயிரொன்றனையுடைத்தெனமுடிக்க.

அவ்வுயிராவது கடவுள்.

ஒன்றி: சினைவினை உடைத்தென்னுமுதல்வினையொடு முடிந்தது. 4

5. **இயற்கை யழகு செயற்கை யழகென்**
**றயர்க்கு மவற்றினுண் முன்ன—துயர்க்குந்**
**திறமுறு முள்ளுயிர்தன் சீர்சா லழகு**
**பிறவழ கெல்லாம் பிறிது**

*(கு-ரை) அயர்க்கும்-அயரச்செய்யும்; முன்னது: முன்னின்ற இயற்கையழகு; உயர்க்கும்-உயர்த்துச் சொல்லப்படும்; உள்ளுயிர்: நுண்ணுடம்பு பருவுடம்பு முதலாயவற்றின் வேறுருகுமுயிர். சீர் சால்-மேன்மை நிரம்பிய; பிறிது: செயற்கையழகு; உண்மை உயிர் என்பன உள்ளுயிரெனப் புணரும்; உடம்பகத்துயிரென்றுமாம்.*

*இயற்கையழகு தோற்றமுங்கேடுமில்லாதது. அவையுடையது செயற்கையழகு; அது தெய்வம் புனையுமழகு, மக்கள் புனையுமழகென விருவகைப்படும். மக்கள் புனையுமழகு நோக்கித் தெய்வம் புனையுமழகினை இயற்கையழகென்றலுமுண்டு.* 5

6. **உயிரொன் றிலதே லுயிரல் பொருளெல்லா**
**முயிர்போ லுளவென்ற லென்கொ-லுயிர்தான்**
**உலகெலாந் தன்பொருட் டுண்மையி னம்ம**
**அலகிலா யாணர்த்தே யாம்**

*(கு-ரை) உயிர் இருத்தலான் உலக முண்டென்பது பெறப்படுகிறது.*

*உலகெலாம் உயிரைநோக்கி யியங்கலின் அதற்கு வாயிலாகிய உயிரழகு அலகிலதா மென்க. உண்மையின்-உளதாதலின்; அம்ம: கேட்பிக்கு முரையசை யிடைச்சொல்; அலகு-அளவு; யாணர்-அழகு; ஆம்: அசை.* 6

7. எதிர்வார்க் கருவருப் பீறு துவகை
யெதிர்வான் கிளர்ந்தார்வ மீண்டி-முதிர்வான்
றிருத்தலிற் செவ்வி யழகுடைய ராகுந்
திருத்தகவுஞ் சீர்சா லறம்

*(கு-ரை) எதிர்வார்க்கு-எதிர்ப்படுவார்க்கு; எதிர்வான் கிளர்ந்து-தோன்ற எழுந்து; ஈண்டி-பெருகி; முதிர்வான்-முதிரும்படி; திருத்தலின்: எதிர்வாருள்ளத்தை நன்றாக்குதலின்; செவ்வி-பருவம்; செவ்வி யழகு; யாவர்க்குங்காண்டற் கெளிதாமழகெனினுமாம்.*

*அழகு: செய்யாக் கோலமுஞ் செய்கோலமும்; திருத்தகவு-தக்கநல்லூழுடைமை; நல்லூழாற் றகுதியுடைமை யென்றுமாம்; செய்யாக்கோலம்: இயற்கையழகு.*

ஒருவர் தாம் அழகுடையராதலும் அறமாமாறு கூறப்பட்டது. 7

8. இல்லதில் லாகலி னுள்ளதுண் டென்பார்க்கும்
இல்லவே யுள்ளவெலா மென்பார்க்கும்-நல்ல
பொறியீர்க்கு மைம்புலனின் பொற்பினை வென்ற
அறிவீர்க்கு மவ்வே யழகு

*(கு-ரை) இவ்விருசாராரும் பொருண் முடிபு கூறும் புலவர்.*

*இல்லதில்லாகலின் உள்ளதுண் டென்பார்க்கு உண்மை அழகெனவும் உள்ளவெலாம் இல்பொருளே யென்பார்க்கு இன்மை அழகெனவும் நிரனிறைப் பொருள்கொள்க.*

*அறிவைக் கவருமென்றது உண்மையும் இன்மையும் அழகாதற்கு வித்து விரித்துரைத்தவாறும்.*

*அவ்-அவை; உண்மை இன்மைகள்.* 8

9. உலகு முயிரு மொருங்குதன் பாற்பட்
டிலகி யினிதியல நின்று—நிலவி
விழையு நலம்பயக்கு மெய்யறஞ் சாலத்
தழையு மழகுடைத்துத் தான்

(கு-ரை) தன்பாற்பட்டு: அறத்தின்பாற்பட்டு; இலகி: உள்ளதெனப்பட்டு; இனிது-துன்பமின்றி; இயல-நடைபெற. 9

10. வைகறைப் போழ்து துயிலெழா நிற்புழியுஞ்
செய்துயில் சேர்தலுறு செவ்வியினும்-உய்திதருங்
காதற் கடவுளடி யுட்கொண்டு கைதொழுதல்
ஆதற் கமைந்தா ரழகு

(கு-ரை) செவ்வி-பொழுது; ஆதல்-மேன்மேலுயர்தல்.

11. பாயிருள் சீத்துப் படருங் கதிர்க்கற்றை
மாயிரு ஞாலம் வயக்குதல்—ஆயின்
ஒளிக்கதிர்ப்பி னின்றொருவன் காட்டு மெழினி
யொளிக்கிழித மொக்கு மழகு

(கு-ரை) பாயிருள்-பரந்த இருள்; சீத்து-நீக்கி; படருங்கதிர்-பரவுங்கதிர்; மாயிரு-மிகப்பெரிய; வயக்குதல்-விளக்குதல்; ஆயின்-ஆராயின். எழினி-திரைத்துணி; கிழிதம்-படம். (சினிமாப் படம்); வயக்குதல் அழகெனவியையும். 11

12. வைகறை யாமந் துயிலெழூஉ நன்மக்கள்
செய்செயல் யாவுந் திருவுடைய-தெய்வமு
மன்று முழுது மவர்செயல் கொண்டருளி
நின்று மகிழுமவர் நேர்

*(கு-ரை) திரு: தெய்வ வழகு; திருவுடையனவென முற்று; அன்று முழுதும்-அற்றை நாண்முழுதும்.*

*அவர்செயலை அவர் நேர் நின்று ஏற்றுக் கொண்டு மகிழ்ந்தருளுமென முடித்து இறுதிநிலை பிரித்துக் கூட்டுக.* 12

13. புலரியம் போழ்து துயிலெழா நின்று
பலவுநெஞ் சுள்ளப் படுமுன்—னிலவ
அறம்பொரு ளுள்ளியபி னீன்றார்த் தொழலிற்
றிறம்புத லின்மை திரு

*(கு-ரை) நெஞ்சினுற்பலவும் நினைக்கப்படு முன்னென்க. நிலவ-நெஞ்சகத்து அழுந்திநின்று விளங்க. திறம்புதல்-தவறுதல்.* 13

14. அழகுடையார் மாட்டே யளவொப்ப வுள்ள
பழகுறு பண்புதிரு வாய்மை—விழவுக்
களிநகை காட்சி கடவுளருள் கேண்மை
யிளிவர லின்மை யிவை

*(கு-ரை) அளவொப்ப-அழகினளவோ டொத்தவளவாக; உள்ள-உள்ளன; பழகுறு-இடைவிடாது பயின்ற; பண்பு-அவரவரியல் பறிந்தொத்தொழுகுதல்; திரு-செல்வம்;*

விழவுக்களி-விழாக்களிலுண்டாகுங் களிப்புப் போலுங் களிப்பு; காட்சி-இயற்கையுணர்வு. கேண்மை-நட்புடைமை; இளி-எள்ளப்பட்டெளியராதல்; இவை-இவ்வெட்டும்; அழகுடையார்மாட்டு இவை அளவொப்பவுள்ள வெனமுடிக்க.

பழகுறுவென்னுமடை பண்பு முதலிய வெட்டனெடுந் தனித்தனிக் கூடி நின்று பொருள்படும்.

பெயர்ச்செவ்வெண் இவையெனத் தொகைபெற்றது. ஏகாரம் ஈற்றசை. 14

15. கடவுளைப் போற்றுதல் கையுறை நல்கல்
கடவநோன் பாற்றுதல் கல்வி-கடவுவ
இந்நான்கு மெல்லா வுறுதிக்குஞ் சார்பாகி
யெந்நாளு மீனு மெழில்

(கு-ரை) கையுறை: தக்க பெரியார்க்கு மகிழ்ந்து வணங்கிக் கொடுக்குங்காணிக்கை; கடவ நோன்பு-இன்றியமையாத தவம்; கடவுவ இந்நான்கும்-நடத்துவனவாகிய இந்நாலொழுக்கமும்; உறுதியெல்லாம்-அறம்பொருளின்பமென்பன; சார்பாகி-துணையாய்; இவை இவற்றை நடத்துவார்க்கு எழிலீனுமென்க. 15

16. புலரிப் பொழுதுநீ ராடிப் பொலிவுற்
றலரி வருவிருந்தென் றங்கை-மலரின்
வணங்கிவர வேற்று வழிபா டிறுத்த
லணங்கினருள் கூரு மழகு

(கு-ரை) அலரி-செஞ்ஞாயிறு; இறுத்தல்-கடமை செலுத்தல்; அணங்கினருள்-தெய்வத்தினருள். 16

17. அருள்செய் தவமுனிவர்க் காய வழகு
வெருள்செய் பிறர்தருநோ மேவல்—பொருள்செய்
வினைக்கழகு நேர்மை வினைபுனையு மாட
மனைக்கழகு நல்ல மகவு

*(கு-ரை]* *அருள்: உயிர்கண்மேற்செல்லு மிரக்கம்; இறைவன் றிருவருள் எனினுமாம். வெருள்-அச்சம்; பிறர்: தீயர்; நோ-துன்பம்; மேவல்-மனம் பொருந்துதல். பொருள் செய்வினை-கைப்பொருளீட்டுதலாகிய தொழில்; நேர்மை-மனமொழிமெய்கள் தம்முண் மாறுபடாமை; வினைபுனையு மாடமனை-கட்டிடக் கைத்தொழில் அழகுறவமைந்த மாடமனை; நல்லமகவு-அழகும் நற்பண்பும் அறிவுமுடைய குழந்தைகள்.* 17

18. இளமைக் கழகுபுலன் யாமையின் யாத்தல்
வளமைக் கழகு வணக்கம்—உளமை
யறிவுக் கழகமைதி யல்லலறு முள்ளச்
செறிவுக் கழகு திரு

*(கு-ரை)* *யாமையிற் புலன்யாத்தல்-யாமை போல ஐம்புலவுணர்வையு மிடர் புகுதாவாறடக்குதல்; வளமை-செல்வம்; செல்வமுடைமைக் கழகாவது வணங்கத்தக்காரை வணங்குதல்; உளமை-உண்மை; உண்மையறிவு-மெய்யுணர்வு; அல்லல்-துன்பம்; உள்ளச்செறிவு-நெஞ்சடக்கம்; திரு-தெய்வவழகு; உள்ளச்செறிவுக்கழகு-உள்ளச்செறிவின தழகு; முன்னும்பின்னு மிங்ஙன முய்த்துணர்ந்துகொள்க.*

19. வாய்மைக் கழகதனுன் மன்னுயிர்க் கேடின்மை
தாய்மைக் கழகுதாய் தற்காத்தல்—சேய்மைக்
கழகுசேய் சான்றேரை யார்வமுறு வித்தல்
அழகுநன் மாந்தர்க் கறம்

(கு-ரை) வாய்மை-பொய்யா வாய்ச்சொல்; வாய்மை நிகழ்ந்தது கூறுதலேயாயினும் பிறவுயிர்க்குக் கேடீனுத வழியே கொள்ளப்படுவதாம். அல்லுழி அறமெனக்கொள் ளற்பாலதன்று.

தாய் தற்காவாது தன்னுள்ள மோடியவாறெல்லா மோடுவாளாயின் அவளது தாய்மை பழிக்கப்பட்டுப் பொலி வில்லதாம்.

சேய்மை-பிள்ளையாதற்றன்மை. தன்னைக் காண்டலுஞ் சான்றேர் காதல் கூருமாற்ருன் நல்லறிவு, நற்பண்பு, நற் செயலுடைமை சேயினது தன்மைக் கழகுபயப்பதாம்.

நன்மாந்தர்க் கழகு அறம் 19

20. ஆடவர்க்குப் பெண்டிர்க் கழகுநா ணுங்கழகு
நாடவர்க்குப் பூச னலிவின்மை—காடவர்க்குப்
போவாரை யாட்டாது போக்கலழ கெல்லார்க்கும்
ஈவாரை யேத்த லழகு

(கு-ரை) ஆங்கு-அதுபோல; பூசல்-குழப்பம்; நலிவு: வலியார் எளியாரை நலிதல்; பூசலும் நலிவுமின்மை நாடு வாழ் மாந்தர்க் கழகென்க. காடவர்-காடுவாழ் தொழி லாளர்; போவார்-வழிப்போவார்; ஆட்டாது-அலையா மல்: வழியலையவிடாமல். போக்கல்: செந்நெறிப் போக்கல்; இரவலர்க் கீவாரைப் பாராட்டுதல் புலவர் பொதுமக்க ளெல்லார்க்குமழகு பயப்பதாமென்க. 20

21. உடற்கழகு தூய்மை யுரைக்கழகு வாய்மை
மிடற்கழகு மீதூர்த லின்மை—இடற்கழகு
கற்றுரைக் கண்டுழிக் காதலிற் றாழ்தலிகற்
செற்றாரைத் தீர்த லழகு

(கு-ரை) மிடல்-வலிமை; மீதூர்தல்: வலிமையுடையார் தம்மின்வலி குன்றினார் மேற்சென்றடர்த்தல்; இடல்-கொடுத்தல்; கற்றார்க்கு அன்போடு வணங்கிப் பரிசு கொடுத்தல் வேண்டுமென்ற கருத்தான் இடற்குக் கற்றாரைக் கண்டுழிக் காதலிற் றாழ்தலழகாமென்றவாறு கண்டு கொள்க. இகல்-பகைமை; செற்றார்-பகைவர்; தீர்தல்-பற்றுவிடுதல்; அஃதாவது அவரோடிணங்காமலும் அவரைக் காணாமலும் அவர் சொற் கேளாமலும் அவரியல்பு கூறாமலு மொதுங்கியிருத்தல். 21

22. அன்பரு ளோகை யமைதியிந் நான்குடைமை
மன்பதை யுள்ளத்து மாண்வனப்புப்-பின்பரிவு
செய்யாமை முன்னர்த் தெருளல் வனப்பிடுக்கண்
வையாமை யாண்மை வனப்பு

(கு-ரை) ஓகை-உவகை; அமைதி: இன்பத் துன்பங்களினொத்திருத்தல்; மன்பதை-மக்கட் பன்மை; பரிவு-வருத்தம். பரிவு செய்யாமை-வருந்தாமல்; வினையெச்சமறை. பின்னர் எற்றென்று கவலாதவாறு முன்னர்த் தெருண்டொழுகலும் முன்னர்த் தெருண்டொழுகாமையாற் பின்னர்த் துயர்தலைப்பட்டுழி அதனையுள்ளத்துக்கொண்டு கலங்காமையும் ஆண்மைக் கழகுபயப்பனவாமென்பது. ஆண்மை: வினைமேற் கொண்டு செவ்விதி னடாத்துதலும் அஞ்சாமையும். 22

23. மூக்குச் செவிமிடறு முன்கைகால் பூணணியும்
போக்குத் தொலைத்தல் புனைகூந்தல்·நோக்குக்
கவர்நுத லீடு கவினுடை நாட்பூத்
தவவுநற் றையற் கழகு

(கு றை) போக்கு: பழைய வழக்கு; உடலுறுப்புக்களில் அணிகல மணியும் வழக்கத்தை விட்டொழித்தலுங் கூந்தல் புனைதலும் பிறர் பார்வையைக் கவரும் நெற்றியடையாளமும் அழகுடைய ஆடை புனைதலும் புதுப் பூச் சூடுதலும் நற்பெண்டுக்கு மிகவு மழகு பயப்பனவாமென்பது. மிடறு-கழுத்து; நுதல்-நெற்றி; நுதலீடு-நெற்றியில் இடக்கடவன; தவவும்-மிகவும். 23

24. சுருட்டுப் புகைப்புத் துகட்கார மூச்சல்
சுருட்டு சுருட்பாகு துய்த்தல்—அருட்டுறு
மெச்சிற் படுத்த லியைத லுமிழ்தலிவை
நச்சிற் கெடும்யா ணலன்

(கு-றை) துகட்காரம்-மூக்குப்பொடி; ஊச்சல்-உறிஞ்சுதல்; சுருட்டு சுருள்: வெற்றிலைச் சுருள், பாகு-பாக்கு. அருட்டுறும்-அருவருக்கப்படும்; எச்சிற்படுத்தல்; எச்சிலியைதல்; எச்சிலுமிழ்தலெனக் கூட்டுக. நச்சின்-விரும்பினல். யாண்-அழகு. யாணலன்கெடும்-நல்லழகுகெடும்.

25. முகத்திற் கருள்விழி மூரன் முறுவல்
அகத்திற் கறிவு மலர்ச்சி—நுகத்திற்
பகலாணி போனின்று பாற்படா ராகி
யிகலாமை சான்றோர்க் கெழில்

(கு-ரை) கண்ணு மூரன்முறுவலுமாமென்க. முறுவல்-புன்னகை. மூரல்-புன்னகையரும்பும் பற்கள்; நுகம்: வண்டி நுகக்கோல்; பகலாணி-நுகத்து நடுக்கால்; ஒரு பாற்படாது பொதுவிருப்பவராதலும் யாரொடும் பகை கொள்ளாமையுஞ் சான்றோர்க் கழகாமென்பது. 25

26. வாழ்க்கைக் கழகு கலைநுகர்வு வாழ்க்கைத்
தொழிற்கழகு தற்கிழமை துன்னல்-எழிற்கழகு
பண்புடைமை கல்வி பயின்றுவல் லாரொடு
நண்புடைமை நன்ன ரழகு

(கு-ரை) தற்கிழமை-ஒருவர்க் கடிமையாகாமை; துன்னல்-பொருந்தல்; எழில்-கண்டாருட்குந் தோற்ற முடைமை; பண்பு-அவரவர்தம்மியல்பறிந் தொத்தொழு குதல்; நன்னரழகு-நல்ல அழகு. 26

27. வழக்குத் தொடருமுசா மன்றின் வனப்பு
வழக்கறிஞர் வல்லுந ராதல்—கிழக்கிடு
மக்கள்பா லெஞ்ஞான்றும் வன்சொல் வழங்காமை
மக்களுட் செல்வர் வனப்பு

(கு-ரை) உசாமன்று: முறையிடுவார்தம் வழக்குக் கேட்டாராய்ந்து தீர்ப்பளிக்குமம்பலம். வழக்கறிஞர்: வழக் காமாறெல்லாங் கற்றுத் தேறுதலுடையார்; வல்லுநராதல்: அவற்றை யறிதலோடமையாது மன்றின்க ணெடுத்து விளக்கி நிறுவ வல்லுநராதல்; அவரையுடைமை உசாமன் றுக் கழகுபயப்பதாமென்பது: கிழக்கிடுமக்கள்-கீழாய மக்கள். 27

28. நாட்டுக் கழகுபொது நன்மக்க ளாட்சிதமிழ்ப்
பாட்டுக் கழகு மரபுதழால்—காட்டுக்
கழகென்ப வாறலைப்பா ரின்மை யழகென்ப
வாலருவி வீழ்ச்சி மலைக்கு

*(கு-ரை) மரபு-தொன்றுதொட்டு வரும் பொதுக் சுட்டுப்பாடு; தழால்-தழுவுதல்; வாலருவி-வெள்ளிய அருவி.*

29. உழவர் புலவர் படைஞ ருழைக்கு
மழவர் கலைபயின் மைந்தர்—விழவர்
அவரவர்க்குத் தக்கவா றுடை யணிதல்
அவரவர்க்கு மேய வழகு

*(கு-ரை) உழைக்குமழவர்-தொழில் செய்து பாடுபடுமிளம் பாட்டாளிகள்; விழவர்-விழாவயர்வோர். விழா: திருவிழா, மணவிழா, வெற்றிவிழா, பாராட்டுவிழா முதலாயின.* 29

30. நல்லது செய்தலை யாற்றாமை நண்ணினும்
அல்லதுசெய் யாமை யழகென்ப—வல்லிதின்
எப்பாடு பட்டேனு மில்புறங் காத்தோம்பல்
உப்பாய செவ்வி யுடைத்து

*(கு-ரை) ஆற்றாமை-மாட்டாமை; அல்லது-தீது; வல்லிதின்-இயன்றவாற்றான்; பாடு-துன்பம்; இல்-குடும்பம்; உப்பு-இனிமை; "உப்பாதல் சான்றோர் கடன்" (முப்பால், பொருட்பால். பழமை 2) என்புழிப்போல. செவ்வி-அழகு.* 30

31. பாரி னுயிர்க்கெல்லாம் பள்ளி யுணர்த்திமகிழ்
சீரி னுகர்வித்துச் செய்வித்துச்—சோரிற்
றுயில்வித்து நோயைத் தொலைத்தெழிற்று யாம்
வெயிலுய்த்த வான விளக்கு

*(கு-ரை) பார்-உலகம்; பள்ளியுணர்த்துதல்-துயிலுணர்த்துதல்; மகிழ்சீரின்-மகிழுஞ் சிறப்பொடு; நுகர்வன நுகர்வித்துச் செய்வன செய்வித்து; சோரின்-உடல் களைப்புற்றால்; உய்த்த-செலுத்திய; வெயிலுய்த்தவான விளக்கு: செஞ்ஞாயிறு; வானவிளக்கு உயிர்க்கெல்லாம் பொதுத் தாயாயிருக்குமென முடியும்.* 31

32. தந்தைதாய் தம்மக்கட் சாற்றலள வன்றித்த
முந்தைமுறை நற்செயன் முற்செய்து-வந்தொழுகக்
கண்டுணரு மக்களவை கற்ற லொருதலைமற்
றுண்டுயரு மில்வனப் புற்று

*(கு-ரை) தம் மக்கட்கு. சாற்றல்-விளக்கிக் கூறுதல்; முன்செய்து: தம் பிள்ளைகள் காணச் செய்து; அவை: அந் நற்செயல்களை; ஒருதலை-தப்பாது நிகழ்வது; இல்-குடி; உண்டு-உளதாம்; உயருமில் வனப்புற்றுண்டெனமாறுக. இல் வனப்பு முயர்வு முடையதாமெனக் கருத்துக் கொள்க. மற்று: வினை மாற்றிடைச் சொல்.* 32

33. துறவுங் கலையுந் தொழிலு மிவையே
உறவும் வறுமை யொழிக்குந்—திறவிதின்
இம்மூன்று மொன்றேனு மில்லா ருளரேல்
அம்மூத்த நாடின் றழகு

(கு-ரை) உறவும்-மிகவும்; திறவிதின் ஒழிக்குமென வியைக்க. திறவிதின்-பலவகையானும்; மூத்த நாடு-உயர்ந்தநாடு; அழகின்றெனமாறுக. 33

34. அறம்புரிதற் கன்றிப் பொருளீட்ட லின்பத்
திறம்புரித லாகாச் சிறப்பின்—அறம்புரிவான்
தற்புக ழாமையொடு தன்னியல்பி னின்றெழுகல்
இற்புக ழெய்து மெழில்

(கு-ரை) இல்-குடிமரபு. இல்லுப்புக ழெய்துதற்கு வாயிலாகியவழ கென்க. 34

35. அறனு முறையு மருகா வொழுக்கத்
திறனு முணர்கல்வி தீற்றிப்—பிறகு
பிறகலை யூட்டுதல் பிள்ளைகட் கென்ப
புறகலாக் கல்லூரிப் பொற்பு

(கு-ரை) அருகா-குறையாத; புறகு-விலக்கப்படுவது; கற்றற்காகா தெனவிலக்கப்படுவது. புறகல்லாத கல்லூரியென்க. பிள்ளைகட்குப் பிறகு பிறகலையூட்டல் கல்லூரிப் பொற்பென வியையும். 35

36. மனையாட்டி துஞ்ச மகவுவளர்ப் போற்கு
மனையாட்டி யின்மை வனப்பு—மனையாட்டி
மாற்றுளைக் கோடல் வனப்பன்று வன்றுய
ராற்றுமை வேண்டா வவற்கு

(கு-ரை) துஞ்ச-சாவ; மனையாட்டியின்மை: மறுமனைவி கொள்ளாமை. மாற்றுளாகிய மனையாட்டி: மனைவியிருக்க மணஞ்செய்து கொள்ளப்பட்ட மற்றொரு மனைவி. வேண்டாதவவற்கென்க. 36

37. காதற் கிழத்தி பொதுமகளென் றுகாமே
ஓத லொழுக்கம் பொருள்வருவாய்—காத
லொழியாப் பிணியிலியை வேட்டடங்கி யுய்தல்
அழியாக் குமரிக் கழகு

*(கு-ரை) வேட்டு-மணஞ்செய்து. ஓதலுமொழுக்கமும் பொருள்வருவாய்த் தொழிலுங் காதலுமிடையறுதவனும் நோயில்லாதவனுமாகிய வொருவனை வேட்டு. குமரி-குமரிப் பெண்: மணப்பருவமங்கை.* 37

38. துனியுங் கவலையுந் தோன்றுது நெஞ்சு
நனியு மகிழ்ந்து நகுதல்—கனியு
மதுவாழ் வறிவாற்ற லின்ப மழகுங்
கதுவாநிற் பிக்குங் கதிர்த்து

*(கு-ரை) துனி-வாழ்க்கைவெறுப்பு. நனியும்-மிகவும். நகுதல்-நகுக. கனியும் அது: இன்சுவை கொள்ளுமச் செயல்; வாழ்வு-வாழ்நாள். கதுவுதல்-பற்றுதல். கதுவா நிற்பிக்கும்-பற்றச் செய்கின்றதாகும். கதிர்த்து-கதிரொளிசெய்து; அது கதிர்த்துக் கதுவாநிற்பிக்கு மெனமுடிக்க. எச்சவும்மை செவ்வெணிறுதிக் கண்ணதாயிற்று.* 38

39. செவ்விதகு காதலர்தாஞ் செய்து மணப்பதிவு
செவ்வியிடைத் தெய்வச் செயலுள்ளிச்-செவ்வியர்முற்
றூர்மாற்றிக் கைப்பற்றித் தாந்தொழுது வாழ்த்துப்பெற்
றூர்சாற்றி யூட்ட லழகு

*(கு-ரை) செவ்விதகு காதலர்-பருவத்தானுமழகானுந் தக்க காதலாடவனும் பெண்டாட்டியும். மணப்பதிவு செய் தெனமாறுக. செல்வியிடை-நல்ல வாய்ப்புள்ள நேரத்தில். உள்ளி-நினைந்து. செவ்வியர்முன்: செவ்விதந்து மணமன்ற மிருந்த சான்றோர் சான்றாக.*

*தார்மாற்றி: தத்தமார்பின் மாலையை ஒருவர் மற்றொரு வர் தோளிலணிந்து. தொழுது: மன்று தொழுது. ஊர் சாற்றி: ஊரிலுள்ள உறவினர் நண்பர் பெரியார்க்கு விருந் தழைப்புக்கூறி. ஊட்டல்: விருந்தூட்டல். 39*

40. வானவரும் வானோர் வணங்கு மொருமும்மை
யேனவருங் கோலஞ்செய் தேமுறுவர்—கானமரு
முற்றத் துறந்தாரு மஃதேயாற் றெற்ற
அழகின்கட் பற்றில்லார் யார்

*(கு-ரை) ஏமுறுவர்-மகிழ்வர். தெற்ற-தெளிவாக. யார்: வினவினைக்குறிப்பு; ஈண்டின்மைக் குறிப்பிற்று. 40*

41. விலங்கும் பிறவுந்தம் மெய்யழகு காட்டி
யிலங்குமாண் பெண்டம்மு ளீர்க்குந்—துலங்கு
மகவு மவற்றையஃ தாயின் மிகவு
முலகினை யாப்ப தழகு

*(கு-ரை) மெய்யழகு-உடலழகு; மெய்ப்பாட்டழகு மாம். உலகு ஈண்டுயிர்கண் மேற்று. யாப்பது: ஒன்றை யொன்றின்றியமையாவாறு பிணித்து நிற்பது. 41*

42. எல்லா வுயிரு மெழிலுடைய வென்றென்றுங்
கொல்லா வகைசூழ்வர் கூர்ந்துணர்வார்-பொல்லா
அவுணரு மாயோ னழகின் மயங்கித்
தவுதல்கை விட்டதூஉஞ் சான்று

(கு-ரை) சூழ்வர்-கருதுவர். அவுணருந் தவு தற்கு நின்றவவர்தாம் மாயோ னழகின் மயங்கித் தவு தலைக்கைவிட்டார். அவ்வவுணர் ஒரு முறை பாற்கடற்கண் மாயோனைக் கொல்லவந்துழி அவர் அவனது கட்டழகு கண டன்புசெய்து கொலை யொழிந்தா ரென்பது தொன்மை: இது

''வாட்டிற லானை வளைத்தார்க ளஞ்ஞான்று
விட்டிய சென்றார் விளங்கொளி-காட்டப்
பொருவறு தன்மைகண் டஃதொழிந்தார் அஃதால்
உருவு திருவூட்டு மாறு''

எனப் பழமொழி வெண்பாவுள் வந்தது.

தவுதல்-கொல்லுதல். தபுதல் தவுதலாயிற்று. 42

43. காலமுங் கைப்பொருளும் வாய்ச்சொல்லுமிம்மூன்றுஞ்
சாலவும் பேணித் தவழ்நந்தே—போலப்
பழுதுபடா வாமாற்றுற் பையக்காத் துய்த்தல்
அழுதுயரங் காக்கு மழகு

(கு-ரை) நந்து-நத்தை; நத்தைதன் கூட்டினுள்ளே மழை நீரைப்பழுதாகாவாறு காத்துப்பயன் கொள்ளும்; அது போலக் காலத்தையுங்கைப்பொருளையும் வாய்ச்சொல்லையும் பழுதாகாவாறுகாத்துப்பயன் கொள்ளல்வேண்டும்.

அழுந்துபரங்காக்கு மழகு, அழுதலைச்செய்யுந்துன்பத்தைத்தடுக்குமழகு; என்றது துன்பங்காப்பதும் அழகியதுமாமென்றவாறு. 43

44. மொழிக்கழகு பாட்டுரைநூன் மூன்றன் பெருக்கம்
பழிக்கலுறு வன்ன பரிசிற்—கழிக்கலுறுத்
தாய்மொழியுங் கொற்ற மொழியுமெனத் தானமைதல்
ஆய்வுகலை யாண்மைக் கழகு

(கு-ரை) ஆய்வுகலை: பயில்வு கலையின் வேருயது. பயில்வு கலையெனினும் இன்கலை யெனினுமொன்று-ஆண்மை-நடத்துதல்; உடைமையுமாம்.

எம்மொழியாயினும் ஒன்றுதானே மக்கட்குக் கல்வி மொழியுந் தாய்மொழியுங் கொற்றமொழியுமாயமையின் அம்மொழிக்கண் ஆய்வுகலைப் பயிற்சி இனிதாய்க் கற்போருள்ளத்தைக் கவர்தலுடையதாம்.

கொற்றமொழி: நாடாட்சிமொழி. அன்னபரிசினெடு வெனவிரிக்க. அன்னபரினெடுதானமைதலெனவியையும். 44

45. குத்து விளக்கேற்றிக் கோதைபல ஞாற்றிநிலம்
பொத்து மிரட்டுப் பொலிவித்து—வித்து
முளைத்த கலனு நிறைகுடமும் வைத்துத்
திளைத்த திருநாட் கழகு

(கு-ரை) ஞாற்றி-தொங்கவிட்டு; நிலம் பொத்தும் இரட்டு-நிலத்தை மூடு முரட்டுப்போர்வைத் துணி. திளைத்தல்-மகிழ்ந்து கொண்டாடியின்புறுதல். 45

46. தொகச்சொல்லி நன்பொருள் கேட்போர்தம் முள்ளம்
புகச்சொல்லிப் பொச்சாப்பு நீத்து-நகச்சொல்லி
மேடைக்க ணஞ்சார் விரையார்மெய்ப் பாட்டொடு
மேடைச்சொற் பெய்த லழகு

*(கு-ரை) தொகச்சொல்லி-சுருங்கச் சொல்லி. உள்ளம் புகச் சொல்லுதல்: நன்கு விளங்கியுட்கொள்ளுமாறு சொல்லுதல். நகச்சொல்லுதல்-மகிழ்ந்தின்புறுமாறு நயம்படச் சொல்லுதல். பொச்சாப்பு-மறதி.*

*மேடைச்சொல்லெனினுஞ் சொற்பெருக்கெனினுஞ் சொற்பொழிவெனினுமொன்று.*

*மெய்ப்பாடு: நகை முதலாகு மெண்வகைக் குறிப்பு.* 46

47. சொற்பொழி வாளர்க்கே யன்றி விழிகொடார்
சொற்பொழி வன்றிச் செவிமடார்-சொற்பொழிவின்
மன்றினின் றேகார் பிணங்கார் மறையிலர்
நன்றினிது கேட்ட லழகு

*(கு-ரை) மன்று-அவைக்களம். பிணங்கார்: எவ்வாற்றானுஞ் சொற்பொழிவை மறுத்தல் வேண்டுமெனக் காழ்ப்புற்றுச் சொற்பூசல்விளையார். மறை: பிறரோடு மறைத்துரையாடல். நன்று இனிதுகேட்டல்-நற்பொருளைச் செவ்விதி னிருந்துகேட்டல். கொடார் முதலான முற்றெல்லா மெச்சமாயின.* 47

48. கல்லுத் திருத்துபு கட்டிடங் கட்டல்போற்
சொல்லுத் திருத்தித் தொடுத்தணிந்து-வெல்லு
மெழுத்தாளத் தக்க வியைபுணர்ந் துய்த்தல்
எழுத்தாளர்க் கேயு மெழில்

*(கு-ரை) திருத்துபு-திருத்தி. சொல்லுத் திருத்துதல்: எழுத்தியல் சொல்லியல் வழுக்களிலவாக வமைத்தல். அணிந்து: தன்மைநவிற்சி, உவமை முதலாய அணிகளையுடை தாக்கி. வெல்லுமெழுத்து: விழுமிய பொருட்படைப்பும் ஒழுகியசொன்னடையுங் குறிப்பெச்சமும் பயனு மெய்ப்பா டும் உள்ளுறையுமென்றிவை முதலாயினவற்றான் மேம்படு மெழுத்தாட்சி.*

*எழுத்தென்றது ஈண்டுத்திட்பநுட்ப முடைய செவ்விய சொன்னடையை யுணர்த்தி நின்ற ஆகுபெயர்.*

*இயைபு: பல வாற்றானும் பொருத்தமுடைமை.*

*கல்லென்பது இனஞ்செப்பல்; மரம் இரும்புமுதலிய கட் டிடவுறுப்புக்களையு முட்படுத்து நிற்றலின்.*

*புலவர்க்கு எழுத்தாளரென்னுமிப்பழஞ்சொற்பிங்கலந் தையுட்காணப்படும்.* 48

49. வேத முதலாய வேற்றுமொழிச் சான்றுரையா
தோது முடன்பா டுரைப்பினுரைத்—தியாதும்
இயல்வழா தெச்சங் கடாவிடை காட்டிப்
பயனொடு தேற்ற லழகு

*(கு-ரை) வேற்று மொழி: ஆரியம் ஆங்கில முதலாய பிற மொழிகள். பிறமொழி நூலுடன்பாடு கூறிற் கூறுதலன்றிப்*

பிறமொழிச் சான்று கூறுதல் செந்தமிழ் நூலுரையாளர்க் காகாது.

இயல்: எழுத்தியன் முதற் செய்யுளியலீறாக வழங்கப்படு மொழியியல்.

எச்சம் கூற்றெச்சங் குறிப்பெச்சமென விருபாற்று.

பயன்: இங்கனங் கூறியதன் விளைவிது வென்றல்.

தேற்றல்: எடுத்துக்காட்டும் அளவையுஞ் சான்றும் பொருந்துமாறுங் காட்டித் தெளிவித்தல். 49

50. ஆசிரிய னன்பிற் பணித்த நெறிநிற்ற
லாசிரியக் கற்கு மவற்கழகா-மாசிரியன்
கற்போனை யையந் திரிபுகெடக் கற்பித்து
நிற்பா னெறிப்படுத்தல் பொற்பு

(கு-ரை) ஆசு-குற்றம். இரிய-கெட. நிற்பான் நிலை நிற்க. நெறிப்படுத்தல்: பிழைத்தற்குரியவாறு நல்வழிப் படுத்தல். 50

51. அயற்சொற் புகாமே யாக்கச்சொல் லாக்கி
யியற்சொற் றிரிசொ லிருசார்-நயச்சொற்
பொதுநடை போற்றி முதுமொழி யோம்ப
லதுதமிழ் மக்கட் கழகு

(கு-ரை) ஆக்கச் சொல்: புதுச் சொல். நயம்-இன்பம். பொதுநடை: தமிழகமெங்கணும் எஞ்ஞான்றும் பொதுவாகிய உலக வழக்குஞ் செய்யுள் வழக்கும். ஓம்பல்: ஓம்புக; வியங்கோள்; தொழிற் பெயரெனினுமாம். 51

**52.** இயலெழுத்து நொய்தி னிழுமென் றயலெழுத்து
வேண்டாச்சொல் வண்மை விழுமியநூல்-பூண்டாளுந்
தூய்மை திருவுடைமை தொன்மை யழகொழுகுந்
தாய்மை யுடைத்துத் தமிழ்

*(கு-ரை) இயலெழுத்து: மக்கள் தம்மியல்பிலொலிக்கு மியற்கையெழுத்தோசை. தமிழ்மொழிக்கண் இயற்கை யெழுத்தல்லதில்லாமையும் ஏனைமொழிக் கணெல்லாம் இயற்கையெழுத்துஞ் செயற்கையெழுத்தும் விராய் வருதலும் இயற்கையெழுத்து நொய்தினிசைக்கப்படுதலுஞ் செயற்கையெழுத்து அரிதின் முயன்றிசைக்கப்படுதலுங் காணப்படும்.*

*அயலெழுத்து வேண்டாச் சொல் வண்மை: தன்னெழுத்தளவில் எப்பொருளையுஞ் சொல்லுந் தன்சொல் வளமுடைமை.*

*இழுமென்றல்: சொற்றொடரெழுத்தெல்லாந் தம்முள் விட்டிசைத்தலின்றி யொழுகுதல்.*

*விழுமியநூல்: அறம் பொருளின்பம் வீடு பயக்கு முதனூல்.*

*பூண்டாளல்-மேற்கொண்டு வழங்கல்.*

*திருவுடைமை: உயர்ந்தோருள்ளங் கவருமழகுடைமை*

53. கவினிறைபல் வேண்மாடங் காண்டக வோங்குங்
குவிநிரைய கொன்னூர்க் கழகாம்-அவிதுகளோ
டியாமை வெரிநிற் கவிந்தகன்று நீண்டொழுகித்
திமை பயவாத் தெரு

(கு-ரை) வேண்மாடம்: அடுக்குமாடி. குவிநிரைய-திரண்ட வரிசையுடைய. கொன்னூர்-பெரியவூர், வெரிந்-முதுகு. 53

54. கட்டுப்பா டொவ்வா தெழுத்தாளல் காலத்தாற்
பட்டுப்போ யொன்றும் பயவாது-கட்டுப்பா
டான்றவெழுத் தாட்சி யழகுடைய தாகற்பாற்
றேன்றவழுத் தோய்த லிகந்து

(கு-ரை) கட்டுப்பாடு: மரபுவழிப்படுதல். எழுத்தாளல்: உரைச் செய்யுண் முதலாயினயாத்தல். பட்டுப்போய்-செத்துப்போய். பயவாது-பயன்கொடாது. ஆன்ற-அமைந்த. தோய்தல்-தீண்டுதல். இகந்து-நீங்கி.

எழுத்தாட்சி வழுத்தோய்த லிகந்து அழகுடையதாகற் பாற்றென்க. 54

55. சொற்செறிவு மேனைப் பொருட்பொலிவுந் துன்றுபு
நற்சுவையு நன்குடைய யாப்பிற்குப்-பொற்புறுஞ்
செப்ப லிசைமுதலாஞ் செய்யுளியல் கோடாமைச்
செப்ப லழகின் சிறப்பு

(கு-ரை) துன்றுபு-நெருங்கி: இடையீடின்றி. சுவை: சொற்சுவை பொருட்சுவைகள். கோடாமை-வழுவாமல். அழகின் சிறப்பு-தனியழகு. 55

56. நல்லிசைச் சான்றோர்தஞ் செய்யு ளுறுப்பெனச்
சொல்லிய வெட்டன் வனப்புளுஞ்—சொல்லிற்
றிரிசொலின் யாத்த லழகென் றிசினோ
பெருமொழி நூலுடை யார்

(கு-ரை) வனப்பாவன: அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன.

திரிசொல்: ஒருபொருள் குறித்த வேறு சொற்களும் வேறு பொருள் குறித்தவொரு சொற்களுமாம்.

பெருமொழிநூல்: தொல்காப்பியன் முதலாயின. என்றிசின்-என்றார். 56

57. எப்பெற்றி யாயினு மேற்றிழி வாயவெலா
மப்பெற்றி யாவு மழகாமால்— ஒப்பெற்றி
பாடற் புலவன் பணிப்புனைவ னேவிய
ஞாடற் கலைஞ னிவர்க்கு

(கு-ரை) ஏற்றிழிவாய வெலாம் எப்பெற்றியாயினும் அப்பெற்றி யாவும் ஒப்பெற்றி அழகாமென வினைக்க. ஏற்றிழிவு: உயர்ந்தனவுந் தாழ்ந்தனவும். எப்பெற்றி-எத்தன்மை. ஒப்பெற்றி-ஒத்த தன்மையாக. புனைவன்-சிற்பம்வல்லான். 57

58. காதிற் கழகு கலைவல்லார் நூற்பொரு
ளோதிற் புகமடுத்த லூறுபடு— தீதில்
விழிக்கழகு கண்ணோட்ட மேற்றொட்டு வந்த
வழிக்கழகு நன்மக்கள் வாய்ப்பு

(கு-ரை) ஊறுபடு தீது-கண்ணூறுபடுதலாகிய தீமை. வழி: மரபுவழி. நன்மக்கள்-நல்ல புதல்வர் புதல்வியர். 58

59. காதன் மனைமக்கள் கேளி ருளப்பட
ஓத லுணர்வொழுக்க முள்ளோரா—ஈதற்
பொருள்வரவோ டத்தகு வாழ்க்கைமுட் டாமை
அருள்வருநல் லில்லிற் கழகு

(கு-ரை) ஓத லுணர்வொழுக்கம்: பன்மொழியும்மைத் தொகை. உள்ளோராக: கடைக்குறை. அத்தகு-அழகு தக்க. அருள்: கடவுளருள். இல்-குடி. 59

60. நாடுகெழு மக்கட்கு நன்று தனிக்கொற்றம்
பீடுகெழு கொற்றம் பெறுமழகு— மாடுகெழூஉ
மேனைநாட் டாண்மை யிகல்காத்துத் தன்னுய்க்கு
மோனையா ளொன்று படல்

(கு-ரை) நன்று: அழகு. கொற்றம்-அரசாட்சி. கெழு-உடைய. மாடு-பக்கம். நாட்டாண்மை-நாட்டரசு. இகல்-பகைமை. காத்து-தடுத்து. தன் உய்க்கும்-தன்னை நடாத்தும். மோனையாள்-தலைமக்கள். ஒன்றுபடல்: தலைவர் தம் முண்முரணொழித்துழைத்தல்.

61. பிறப்புரிமை நாடுரிமை பேணித் தொழில்செய்
சிறப்புரிமை தேட்டத் துரிமை-துறப்பரிய
வாழ்ச்சி மணங்கலை மாந்த ருரிமையிவை
வீழ்ச்சி விளையாமை பொற்பு

(கு-ரை) பிறப்புரிமை: பிறப்புப்பற்றி நாட்டின்கண் வாழ்வதற்கும் இனத்தின்பாற்படுதற்கும் ஒரு குடியாளரது டைமை கோடற்கு முரியராதல்.

நாடுரிமை; பிறர் கொள்ளாதவாறு தந்நாடு தமக்குரிய தாதல்.

தொழில் செய்யுஞ் சிறப்பானுளதாகு முரிமையாவது வேற்றுப் புலத்தினின்றும் வந்து தொழில் செய்துறைதலான் அங்ஙன முறையும் புலத்துப் பிறந்தாரோடொப்பக்கொளற் குரியராதலும் தொழிற் குற்றவூதியங் கோடற்குரியராதலு மாம்.

தேட்டத்துரிமை: நிலம்பொலமாகிய தேட்டமுடைமை பற்றி அஃதிருக்கும் நாட்டில் வாழ்தற்குரியராதல். வாழ்ச்சி யுரிமை, மணனுரிமை, கலையுரிமை மாந்தருரிமையிவை- இம்மாந்தருரிமை. மாந்தருரிமை-மக்கட் பிறப்பிற்கமைந்த உரிமை. வீழ்ச்சி விளையாமை-கேடுண்டாக்காமை. 61

62. அன்பும் விளையு மறிவு மொருங்குயிர்க்
இன்பந் தருமாக்க மீனுவமுன்– றென்ப
எறியுமோன் றுன்ப மிருவினைதேய்ந் தன்பு
மறிவுதா னுத லழகு

(கு-ரை) ஆக்கம்-மேன்மேலுயர்வு. துன்பமெறியு மோன்-பிறவித்துன்பமெல்லாவற்றையுங் கெடுப்போன். அறிவுதான் என்பன ஒரு பொருட்பல் பெயர். அன்பு அறி வல்லதில்லை. அறிவு உயிரல்லதில்லை. 62

63. உள்பொருளோ டில்பொருளென் றேதுமிருசாருள்ளும்
உள்பொருளே யாய வொருதன்மாட்-டுள்பொருளே

யென்னு முலகெல்லா மெஞ்ஞான்று மில்பொருளே
யென்னு முடிபுமோ ரேளர்

*(கு-ரை) நிகழ்வின்கண் உள்பொருளே யாமெனக் காணப்படு முலகெலாந் தன்னிலைக்கண் உள்பொருளே யாயினும் ஒரு தன்மாட்டெஞ்ஞான்று மில்பொருளே யாமென்று துணியு முடிபும் ஓர் அழகாமென முடிக்க.*

*ஒருதன்மாட்டு-தாவென்றேயுளதெனத் தோன்று முயிரின்கண்.*

*எஞ்ஞான்றும்: இறப்பெதிர்வு நிகழ்வென்னு முக்காலத் தினும்.* 63

64. எம்மொழியி னுயினு மாகுக வெஞ்ஞான்று
மம்மொழியிற் கற்ரு ரணிகெழுமச்-செம்மொழியி
னுயிரம் பாற்படுத் தாக்கிய வந்நூற்கும்
பாயிரங் கோட லழகு

*(கு-ரை) அணி: உவமை முதலாயின. கெழுமசிறந் திருப்ப. செம்மொழி: இயல்வரம்பு திறம்பாத மொழி. பாற்படுத்து-கூறுபடுத்து: கிளைப்படுத்து. பாயிரம் பிறர் கூறுவதென்பதுபற்றிக் கோடல் வேண்டுமெனப்பட்டது.* 64

65. பிறப்புப் பிணிமூப்புச் சாக்காடு நாளு
முறப்புணரு முள்ளக் கவலை-யறப்பெரிதும்
நோற்றுத் துறந்து நுனித்தாய்ந் தவாவறுதல்
போற்றத் தகுமழகு போன்ம்

*(கு-ரை) நாடோறும் வந்து கூடுமுள்ளக் கவலையென்க. நுனித்து ஆய்ந்து-நுணுகியாராய்ந்து. போன்ம்: ஒப்பில் போலி.* 65

66. புலவிக் கழகு கலவி புணையுங்
கலவிக் கழகு புலவி-குலவிப்
புணர்தற் கழகு பிரிதலாற் றுமை
யுணர்தற் குணர்த்த லழகு

*(கு-ரை) புலவி-காதற்பிணக்கு. கலவி-காமப்புணர்ச்சி. புணர்தல்: நட்புக் கூடுதல். குலவி-கொண்டாடி. உணர்தற்கு: நூற்பொருளைக் கற்றுணர்தற்கு. உணர்த்தல்: பிறர்க் கெடுத்துரைத்துணர்த்துதல். ஊடலுணர்தற் பொருட்டு ஊடலுணர்த்துதல் அழகெனினுமாம்.* 66

67. இடங்கழி காம மெழுந்தார்க்கு வேட்ட
மடங்கிளர் மாதராள் வாய்கண்-டொடங்கி
இழுக்குப் படுமுடலோ டின்னுத கோலத்
தழுக்குப் படித லழகு

*(கு-ரை) வேட்ட-அவாவிய. இடங்கழி காமம்: கையிகந்து காமமீதூர்தல். இன்னுத கோலம்: அருவருக்கத்தக்க ஒப்பனை.* 67

68. நெற்றிக் கழகுதிரு நீறணித லேற்றுண்ணும்
பெற்றிக் கழகு பிணிற்றுமை-துற்றி
னினிமைக் கழகிறைவற் கீத்துண்ணற் பாடு
தனிமைக் கழகு தவம்

(கு-ரை) ஏற்றுண்ணும்-இரந்து பெற்றுண்ணும். பெற்றி-இயல்பு. பிளிற்றுமை-சினங்கொள்ளாமை. துற்று. உணவு. இறைவற்கு: முழுமுதற்கடவுட்கு. ஈத்து-கொடுத்து. உண்ணற்பாடு-உண்ணப்படுதல். 68

69. மக்கட் பிறப்புரிமை வாழுமெச் சாரார்க்கு
மொக்கக் கருதி யொருங்குதந்—தொக்க
மொழிகலை நாடு தொழிலின மோம்பல்
பழிபுகுதா தாளுமெழிற் பண்பு

(கு-ரை) எச்சாரார்க்கும்-எத்திறத்துக் குழுவினர்க்கும். ஒக்க-பொதுவாக. தொக்க-பலவாய்க்கூடிய. மொழியுங் கலையும் நாடுந் தொழிலும் இனமுமென உம்மைத் தொகை கொள்க. 69

70. புதுமணம் புல்லலுறு மாயிருவர் தம்முட்
கதுமெனக் காமுறுதல் காத்துப்-பொதுமன
மேய்ந்துதம் யாக்கை யளவொடு நாற்றமும்
ஆய்ந்துகைப் பற்ற லழகு

(கு-ரை) கதுமென-விரைய. காத்து-தடுத்து. பொது மனம்-ஒத்தவுள்ளம். ஏய்ந்து-பொருந்தி. அளவு: உயரம் பருமனளவு. நாற்றம்-மோப்ப மணம். ஆய்ந்து: ஒத்த வாற்றை யாராய்ந்து. ஒத்தவழிக்கைப்பற்றலென ஒரு சொல்வருவிக்க. 70

71. ஒறுத்தற் கொறுப்பார்த முள்ளன் புடைமை
வெறுத்தற்கு வென்றி பயத்தல்—பொறுத்தற்
கருளுடைமை யாங்க வதற்குப் புலாலூ
ணொருவுதல்யா ணொன்னு முலகு

(கு-ரை) உள்ளன்புடைமை: ஒறுக்கப்படுவார் மாட்டுள்ளன்புடையராதல். வேண்டாதாரையும் வேண்டாதவற்றை றையும் வெறுத்தொதுங்குதற்கழகாவது அதனினுகுந் துன்பமெல்லாவற்றையும் பொறுத்து அதன்கணிலை நிற்றலாகிய வெற்றியை விளைத்தலென்க. பொறுத்தற்கு: பிழை செய்தாரைப் பிழைபொறுத்தற்கு. அருளுடைமை: பிழை செய்தார் மாட்டிரங்குதலுடையராதல். ஆங்க-அவைபோல. அதற்கு; அவ்வருளுடைமைக்கு. யாண்-அழகு; ஒறுத்தற்கியாண் உள்ளன்புடைமை. வெறுத்தற்கியாண் வென்றிபயத்தல், பொறுத்தற்கு யாண் அருளுடைமை, அதற்கியாண் புலாலூனொருவுதலென யாணென்பது முன்னுங்கூட்டிப் பொருள் கொள்ள நிற்றல் ஒருசிறை நிலைப் பொருள் கோளும் இறுதிநிலை விளக்கணியுமாம். ஒருவுதல்-நீக்குதல். உலகென்ற தீண்டுயர்ந்தோரை. என்னும்: வினைமுற்று. 71

72. ஊட்டந் தருமுணு வுண்ணுத லோய்வுகொளல்
வாட்டந் தவிர விளையாடல்-நாட்டங்
களைவருங் கல்விப் பயிற்சியிந் நான்கு
மிளைஞருக் கீனு மெழில்

(கு-ரை) ஊட்டம்-உரம்: உயிர்ச்சியுர முதலாயின. வாட்டம்: உடலொளியிழத்தலு முடற்சோர்வுமாம். நாட்டம்-ஆராய்ச்சி; குறிக்கோளுமாம். 72

73. மக்க ளடிப்படை வாழ்வுரிமை பேணுதிறன்
மிக்க பலகொற்ற மேவிநட்-பொக்க
வுலகமைதி யூன்றுவா னாக்குமே னின்று
நிலவுமெழில் பூப்ப நிலம்

(கு-ரை) திறல்-வலிமை. கொற்றம்-வேந்து: அரசாட்சி. நட்புமேவி.நட்பமர்ந்து. ஊன்றுவான்-நிலைபெறுத்

*துதற்கு; ஊக்குமேல்-மேற்கொண்டு கிளர்ந்தெழுமாயின். நிலம் எழில்பூப்ப நின்று நிலவுமென்க.*

*நிலம்-உலகம்.* 73

**74. மக்க ளுடற்கண் வனப்பிளமை யாற்றன்மூன்**
**றொக்க வுளவா முளத்தின்கட்-டொக்க**
**இனமெய்ப்பா டாய விவற்றுக் கடவுள்**
**சினமிக்க சூர்மாக்கொல் சேய்**

*(கு-ரை) இனமெய்ப்பாடு-கூட்டமாகிய மெய்ப்பாடு; என்றது வனப்பு முதலிய மூன்றனையும்; மெய்ப்பாடு-உள்ளத்துக் குறிப்புப் புறத்துத் தோன்றுதல்; சூர்மாவைக் கொன்ற சேய்-கடவுண் முருகன்.*

*கடவுள் சேயென எழுவாய் பொருணிலை கொள்க.* 74

**75. இணங்கிக் களங்குழுமும் யாவருந் தம்முள்**
**வணங்கி வதிந்துசொற் பெய்து-பிணங்கி**
**வழுக்கிலுரை யாட்டிற் பிறர்பிறர்ச் சுட்டி**
**இழுக்குரையா டாமை யெழில்**

*(கு-ரை) களம்-அவைக்களம்; சொற்பெய்து-சொற்பொழிவாற்றி.*

*வழுக்கு இல் உரையாட்டு: தன்கோட் கூறலும் பிறன்கோண் மறுத்தலும்.* 75

**76. நீராடிக் கால்கழீஇ வாய்பூசி நீர்வளாய்**
**ஏரா ரணங்குண்ட வெச்சிலைச்-சோராமே**
**வாய்விருந் தூட்டி வணக்கங்கொண் டன்பரோடு**
**வாய்வாளா துண்டல் வனப்பு**

(கு-ரை) வாய்பூசி-வாயலம்பி; நீராற்றுடைத்து. நீர் வளாய்; உணவை நீரால் வளைத்துச் சுற்றிக் காப்புச்செய்து. ஏர் ஆர் அணங்கு-எழுச்சி பொருந்திய தெய்வம். அணங் குண்ட எச்சில்: தெய்வத்திற்குப் படைத்த மடை. சோராமே-மறவாமல். இனிச் சிந்தாமல் உண்டலெனக் கூட் டிப் பொருள் கொளினுமாம். வாய் விருந்து-வாய்த்த விருந்து; அன்பர்-உறவினரும் நண்பரும்; வாய்வாளாது-யாது முரையாடாமல். 76

77. புதியநா ரேர்மலை யாறுகான் பொய்கை
புதியமா மக்களொடு புட்கள்-புதியவெலாம்
எஞ்சா வுடையுணவு கல்விகெழு வம்பலராய்
அஞ்சா தியல்வார்க் கழகு

(கு-ரை) மா-விலங்கு; எஞ்சா-குறையாத; கெழு, உடைய. வம்பலர்-வழிச் செல்வார்; எஞ்சாத வுடையும் எஞ் சாத வுணவும் எஞ்சாத கல்வியு முடையவம்பலரென்க.

இயல்வார்-செல்வார். புதியவெலாம் அழகுடையன வாமென்பது. 77

78. தன்பொருட் டேனைப் பார்ப்பானுஞ் சாராது
தன்பொருட்டுப் பார்ப்பனன் றேனாய்-அன்பின்
மலர்தூய்த் திருமுன் வணங்குபு கோயில்
பலகாற் பழிச்ச லழகு

(கு-ரை) ஏனை-பிறனொருவனை; பார்ப்பான்-கோயில் வழிபாடு செய்விக்குமையன்; முருகன் கோயில் வேலன் போல்வான். 78

79. பெருமைக் கழகு சிறுதகைமை பேணு
மருமைக் கழகெளிமை யாமால்-பெருமை
சிறந்தாரை யஞ்ச லழகஃ திறந்தாரை
அஞ்ஞாமை யென்ப வழகு

*(கு-ரை) சிறுதகைமை-பணிவடக்கம்.*

*எளிமை-எல்லாரானுங் காணவு முரையாடவும் படுதல்; அஃதிறந்தாரை: பெருமையை நீங்கிச் சிறுமையுடையராயினரை; அழகென்ப வென்க.*

*ஆமும் ஆலும் அசை.* 79

80. விழைவு வெகுளி விடுத்தார்தந் தோற்றம்
விழைவு மிகுக்கு மழகாங்-குழைவு
கனியக் கவினுங் குதலைக் குழவி
முனிவர்ப் பிணிக்கு மழகு

*(கு-ரை) குழைவு-அன்பு. கனிய-பழுக்க. கவினும்-விளங்கும். முனிவர்ப் பிணிக்குமழகு-முனிவரையும் பற்றின் கட்படுத்துமழகுடையது.* 80

81. கொடுப்ப குறையாது கொள்வ மிகாது
நொடுப்ப தழகு நொடையர்க்-கடுப்பவர்பாற்
கைக்கூலி வாங்குங் கயமைசே ணீங்குவது
மெய்க்கோ வினைஞர்க் கழகு

*(கு-ரை) நொடுப்பது-விற்றல்; நொடையர்-விலைஞர். கயமை-இழிந்த கீழ்மை; சேணீங்குவது-தொலையிற் கழிதல்.*

*மெய்க்கோ வினைஞர்-வாய்மையுடைய அரசியலூழியர்.* 81

82. அடிமையாள் வாய்த்த லரிதாத லானுங்
குடிமையா ளெண்பெருகல் கொண்டும்-மடிமைதீர்
வேளாளர் மேன்மேற் கடன்படாக் கூட்டுறவு
வேளாண்மை மேவ லழகு

*(கு-ரை) ஆளெண்-மக்கட் டொகையெண்; மேவல்-மனம் பொருந்துதல்.* 82

83. கள்ளுங் கவறும் பொதுமகளு மேற்றத்தாழ்
வுள்ளு முடைமை யடிமையுங்கட்-டெள்ளு
முதுமக்க ணன்குயர்தற் குற்றதுணை முன்னல்
பொதுமக்க ளாட்சிக்குப் பொற்பு

*(கு-ரை) ஏற்றத்தாழ் வுள்ளுமுடைமை-ஒருவரினொருவர்பால் ஏற்றமுந்தாழ்வுங் கருதுதற்கு வாயிலாகிய கைப்பொருளுடைமை; அடிமை-அடிமைமரபு; கட்டு-களைந்து.*

*ஏற்றத்தாழ்வுள்ளு முடைமையைக் களைதலாவது-அரசியற் கொள்கைகளுள்ளே தனியுடைமைக் கொள்கை பொதுவுடைமைக் கொள்கைகளின் வேறாய நிகருடைமைக் கொள்கை. எள்ளுமுது மக்கள்-இகழப்படும் பழங்குடி மாக்கள். என்றது பண்டுதொட்டுச் சீர்திருத்தமின்றி வாழ்ந்து வருமாந்தரினத்தை; முன்னல்-முன்னிற்றல்.*

*நன்குயர்தற்கு-கல்வியறிவொழுக்கமுடையவராய் ஏனை மேன்மக்களோடொப்பவுயர்ந்து மேன்மக்களாதற் பொருட்டு;*

*உற்ற துணை-பிறர் செய்யுமிடையூறு நீக்கியுதவுந் துணை; உடைமை யடிமை: உம்மைத் தொகை.* 83

84\. முதுமையஞ் செவ்வியை முன்னியார் தாமும்
புதுமையங் கோலம் புனைந்து—முதுமை
மருவுதலில் பெண்டிருளம் வாங்குபவே லம்மா
பொருளுடைமை போலு மழகு

(கு-ரை) முதுமைச் செல்வி-முதுமைப்பருவம்; முன்னியார்-அடைந்தார். புதுமைக்கோலம்-புதுமையொப்பனை. ஈரிடத்தும் அம்முச்சாரியை, உம்மை இழிவு சிறப்பு. முதுமை மருவுதலில் பெண்டிர்-இளம் பெண்டிர்.

வாங்குப வேல்-கவர்வாராயின்; அம்மா: உரையசை. போலும்: அசை; ஐயப்பொருண்மைக் குறிப்பிடைச் சொல்லுமாம். 84

85\. ஆவுதங் கன்றோ டமர்தல் கயந்தலையோ
டோவுத லொல்லாப் பிடிகளிறு—மேவும்
பெடைசேவல் காதற் பிணையல் பிறவன்
புடையார்க் குவப்பா மழகு

(கு-ரை) கயந்தலை-யானைக்கன்று; ஓவுதல்-நீங்குதல்; ஒல்லா-இயலாத; பிடிகளிறு, பெடைசேவலென்பன தனித் தனியும்மைத்தொகை. பிணையல்-இரட்டை; காதலினாகிய இரட்டைகள் பிறவாவன-உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணுங் காதலிற்கலந்த ஆண் பெண்கள்.

காதற் பிணையல் பிறவுமென்னுஞ் செவ்வெணீற்றெச்சவும்மை தொக்கது. 85

86\. நிலைக்களம் பொற்புறச் சாயல் கெழுமக்
கலைக்கள மின்பங் கனிய—வலைக்களந்
தாயபுட் போன்று தடையின் றிடம்பொழுதோ
டாயதொழில் பண்ணுக் கழகு

(கு-ரை) பண்ணிசையினிலைக்களம்-ஒத்திசை; (சுருதி) கீழ்நிலை, இடைநிலை, மேனிலை யெனினுமாம். சாயல்-தனித் தனிப் பண்புலப்படக் கிடக்குமேழிசைக் கோவையியக்கம்; கெழுமசிறந்தமைய; கலைக்களம்: இசைக்கலைவல்லுநரும் இசைச்சுவைஞருங்குழுமிய மன்றம்; வலைக்களந்தாயபுள்: வேட்டுவர் பரப்பியவலை கிடக்குமிடத்தை விட்டுத் தப்பிப் புறந்த புள்; தடையின்மை-வேண்டியவாறினிதியங்கல்; இடம்: அவ்வப்பண்ணுக்கெனவுரிய முல்லைநிலங் குறிஞ்சி நில முதலாயின; பொழுது: அவ்வப்பண்ணுக் கடைத்த பெரும் பொழுது சிறு பொழுதுகள்; தொழில்-மிடற்றுத் தொழிலும் நரம்புளர்தற்றொழிலுங் குழற்றுளை விரல் பணி மாறுதற்றொழிலுமாம். 86

**87.** தூக்கொடு பாணியுஞ் சீருந் தொடர்ந்தொழுக
நோக்குநுதல் கைகா னொடிவனவா—வாக்குறு
பாடலம் பாணோ டுளங்கொளல் கோதைய
ராடலங் கூத்துக் கழகு

(கு-ரை) தூக்கு, பாணி, சீர் என்பன தாளத்தின் கூறு பாடுகள். நோக்கு-கட்பார்வை; நுதல்-புருவம்; நொடி வனவாக-சொல்லுவனவாக; சொல்லுவனபோல உள்ளக் குறிப்பை வெளிப்படுப்பனவாக வென்றவாறு; ஆக்குறு பாடல்-செய்யப்படும்பாட்டு; வாக்குறு பாடலெனினுமாம். வாக்குறு-திருந்திய. பாடற்பாண்-செந்துறைப் பாட்டு; பாடற் பாணோடு கூடியெனவிரிக்க; உளங்கொளல்-காண் போருடைய உள்ளங்களைத் தன்பாற்படுத்தல். கோதையர்-மகளிர்; கோதைபோலு மகளிரெனவே அவர் இயற்கையுஞ் செயற்கையுமாய வழகுடையராதல் வேண்டுமென்பது பெறப்படும். 87

88\. ஆட்சிக் குறிக்கோள் பொருளளவிற் றன்றுகுடி
மாட்சிப் படுமின்ப வாழ்வுடைமை—காட்சி
நலம்பட வேண்டுவன நல்காத வேந்தை
வலம்பட மாற்றல் வனப்பு

*(கு-ரை) நாடாட்சியின் குறிக்கோள் பொருளீட்டுதல ளவிலுள்ளதன்று; அக்குறிக்கோளாவது குடிகள் அறத்தின் பாற்பட்ட இன்பத்தோடு வாழ்தலுடைமையாம். அதனுற் குடிமக்கட்குத் தெளிந்த அறிவினன்மையுண்டாதற்கு வேண்டுவனவற்றைச் செய்யாது பொருளீட்டுதற்குவேண்டு வனவற்றையே செய்து கொடுக்குமாட்சியை வெற்றியுண் டாக மாற்றித் திருத்தியமைத்தலழகென்க.*

*காட்சி-தெளிந்த நுண்ணறிவு; வேந்து-கொற்றம். வலம்-வெற்றி. பட-உண்டாக.* 88

89\. மிடிநோய் மடமை வெரூஉதலிந் நான்குங்
குடிமாட் டொழித்தல் குறிக்கொண்—டொடியாமே
யொண்பொருள் கல்வி மருந்துகாப் பாக்குதல்
பண்படும் வேந்துக் கழகு

*(கு-ரை) மிடி-வறுமை; வெரூஉதல்-அஞ்சுதல்; ஒடி யாமே-தளராமல்; பண்படுதல்-கல்வியறிவொழுக்கங்க ளாலே திருத்தமடைதல்; மயக்க நிரணிறை வந்தது.* 89

90\. பார்ப்படிமை கோனடிமை பள்ளி யடிமையவாச்
சீர்ப்படிமை சிற்று ளடிமையொடு—வேர்ப்படிமை
ஏமாற் றடிமை யிவையின்மை மக்கட்பண்
பாமாற்றுக் காய வழகு

*(கு-ரை) பார்ப்பு-பார்ப்பனர்; ஆரணங்கினைவழுத்திக் கழுவாய் செய்து வினைமுடிப்பிப்போர். பார்ப்படிமை-*

பார்ப்பனர்க்குப் படுமடிமை; அவரவர் தாந்தாமே தத்தமக்குக் கடவுளரை வழுத்திக் கழுவாய் செய்து வினை முடித்துக் கோடல்வேண்டும் என்பது.

கோனடிமை-முடி மன்னற்குப் படுமடிமை; தனித் தலைவனை நீக்கி மக்கடாமே தேர்ந்தெடுத்த தலைவர் குழுவினு லாளப்படல் வேண்டுமென்பது.

பள்ளி-துறவுக்கோலம் பூண்டார் வதியுமிடம்; பள்ளியுடையார்க்குப் படுமடிமை பள்ளியடிமையெனப்படும். ஈண்டுப் பள்ளியுடையார் மதத்தலைவரெனப்படுவார்.

சீர்ப்பு-வாய்ப்பு. அவாவியது கிடைக்குமென்பது பற்றி ஒருவரொருவர்க் கடிமைப்படுதல் அவாச் சீர்ப்படிமையெனப்பட்டது.

சிற்றாளடிமை-கூலிக்கு ஏவலாளாதல்.

வேர்ப்பு-வெகுளி; வலிமிக்காரது சினத்தை யஞ்சி அவர்க்கடிமைப்படுதலுமாகாதென்பது.

ஏமாற்று-வஞ்சித்தல். வஞ்சிக்கப்படுதலுமாம்; வஞ்சித்தலாணுகுமடிமையெனினும் வஞ்சிக்கப்படும் பேதைமையாளுகு மடிமையெனினுமொன்று. 90

91. அன்புக்கு முண்மை யறிவுக்கு மாட்படுத
லென்புக்குட் டோன்று மினியவுயிர்—நன்பிற்
றனக்குத்தா ளுட்படுந் தற்கிழமை யாகி
முனைக்கு முதுமா ணழகு

(கு-ரை) ஆட்படுதல்-அடிமைப்படுதல்; என்பு-உடம்பு; நன்பு-நன்மை; தற்கிழமை அடிமைக்கு மறுதலைச் சொல்; எனவே தன்வயமுடைமையாயிற்று. முனைக்கும்-முதன்மைப்படும்; முதுமாணழகு-பெரிய மாட்சி

*மைப்பட்ட அழகு; பழையமாட்சிமைப்பட்ட அழகுமாம். பழைய அழகு-இயற்கையழகு.* *92*

92. அழகிலவுஞ் சால வழகியவே யாமால்
அழகிலவற் றுக்கேயு மன்பின்—அழகிலா
யாக்கை யுடையவெனும் யாமைக்கு மந்திக்குங்
காக்கைக்குந் தம்பார்ப் பழகு

*(கு-ரை) அழகிலவும் அழகிலவற்றுக்கும் என்னுமும்மை இழிவு சிறப்பு. ஆல்: அசை.*

*யாமைப் பறழுங் குரங்குக் குட்டியுங் காக்கைக் குஞ்சும் பார்ப்பென்றன் மரபு.*

*அன்பின் அழகிலவும் அழகிலவற்றுக்குஞ்சால அழகியவேயாமென்க.* *93*

93. பொறுமை பணிவு புலமைபொரு ளீட்டல்
வறுமையிற் செம்மை வழக்கந்—தறுகண்மை
கற்புடைமை காத்தோம்பல் கள்ளுண்ணு ராதலிவை
யிற்பிறப் பாளர்க் கெழில்

*(கு-ரை) வழக்கம்-ஈகை; தறுகண்மை-அஞ்சாமை; கற்புடைமை: மகளிர்க்குரியது; அதனே அவர் காத்தோம்பலும் ஆடவர் காத்தோம்பலும். இற்பிறப்பு-குடிப் பிறப்பு.* *93*

94. புத்தம் புதுப்போக்கும் பொய்யாப் பழம்போக்குந்
தத்த முணர்விற் றழீஇக்கொண்—டொத்த
அறம்பொரு ளின்பம் வழாதொழுகு மானுத்
திறம்பெரு மக்க டிரு

(கு-ரை) போக்கு: மக்களொழுகலாறு; ஒத்த-அறிஞரெல்லார்க்குமொப்ப முடிந்த. ஆனுத்திறம்-இடைவிடாத கூறுபாடு; பெருமக்களது தெய்வ அழகு. 94

95. பிறர்க்குப் பயன்படும் பேரன்பு நேர்பட்
டிறக்குமவ் யாக்கைநனி யின்னுர்த்—துறக்கு
நிலங்கோலு மாந்தர் நினைத்தொறு மன்னு
ரலங்கோல மெல்லா மழகு

(கு-ரை) எல்லாங்கொடுத்துப் பிறர்க்குத் தாம் பயன்படுதற்குப் பொருட்டாகிய பேரன்பு தலைப்படுதலால் இறத்தற்குரிய தம்முடம்பு வடுப்பட்டினியரல்லராயினுரை நினைக்குந்தொறும் நிலவுலகில் இடங்களைத் தத்தமக்கு வளைத்துக் கொண்டுள்ள மக்கட்கு அவரதலங்கோலமழகாயிருக்குமென்றவாறு. அலங்கோலம்-கோலமல்லாமை: அழகின்மையென்பதாம். அம்முச்சாரியை; ''அலங்கடை'' என்புழிப் போல. (தொல். எழுத்து. க.)

இன்னுர்-எதிர்மறைக் குறிப்பு வினைப் பெயர்; நேர்பட்டின்னுரென முடியும். துறக்கு மக்கள்-பற்றறுதற்குரிய மக்கள். 95

96. கங்குற் கழகு நிலாத்திங்கள் காலைநீண்
மங்குற் கழகு வளர்ஞாயி—றெங்குப்
புகினுமிவர் நல்லரெனப் போற்றும் புரையோர்
முகிலுறையிஞ் ஞாலக் கழகு

(கு-ரை) கங்குல்-இரவு; மங்குல்-வானம்; வளர் ஞாயிறு-இளஞாயிறு. புரையோர்-உயர்ந்தோர்; முகில் உறை-முகில் மழைத்துளி பெய்யும்; ஞாலக்கு: அத்துச் சாரியை தொகுக்கும் வழித் தொகுத்தல்.

போற்றுமென்னும் பெயரெச்சஞ் செயப்படுபொருட் பெயர் கொண்டது. 96

97. முதுமைக் கழகு முழுத்துறவு மன்றிற்
பொதுமைக் கழகுமுறை பூணன்—முதுநூல்
கற்றோர்க் கழகுதெருட் காட்சி யழகென்ப
மற்றோர்க் கவர்கூறும் வாழ்த்து

(கு-ரை) முழுத்துறவு-அகப்பற்றுப் புறப்பற்று முழுதுந் துறத்தல்; மன்று: வழக்குமன்று; பொதுமை: நடுவர் பொதுநிற்றல்; முறை-ஒருபாற்கோடாது வழக்கு முடிவு செய்தல்; தெருள்-தெளிந்த நுண்ணறிவு; அதனல் நுண்பொருள் காண்டலே தெருட் காட்சியெனப்படும். 97

98 கண்ணுத லாடுங் களிக்கூத்தின் கட்டழகை
யுண்ணுதல் செய்கூளி யொண்குழாம்—எண்ணுதல்
நீத்தயர் வுற்று நிவந்த களிப்பினுற்
கூத்தயர் வுற்ற குழைந்து

(கு-ரை) கண்ணுதல்-நம்பன்; உண்ணுதல்-நுகர்தல்; எண்ணுதல் நீத்து-நினைவிழந்து; அயர்வுற்று-மெய்ம் மறந்து. குழைந்து கூத்தயர் வுற்றனவென்க. நிவந்தகளிப்பு-பொங்கியெழுந்த வுவகைமகிழ்ச்சி. 98

99 துறவிக்கென் றுள்ளுந் துவராடைப் பற்றும்
பிறவிக்கு வித்தாதல் பெற்றுற்—றுறவிக்கு
வேண்டுமென் றென்றும் விதந்துகொள் ளாதொழிதல்
வேண்டு மதுபொற்பின் வீறு

(கு-ரை) துறவிக் குரிய தென்று கருதப்படுமென இசையெச்சம் விரித்துக்கொள்க. வித்து-காரணம்; விதந்து கொள்ளுதல்-வகுத்து வரைந்துகொள்ளுதல்.

ஒப்பாற்பின்வீறு-தனிப்பெருமையுடைய அழகு. 99

100 இன்பமுந் துன்பமு மெண்ணத் தளவல்லா
லென்பினு ளைம்புலன்மாட் டில்லையா-லென்பது
தேறுந் தெருளிஞற் செல்லல் கடிந்துமகிழ்
வூறும் பரிசோ ரழகு

*(கு-ரை) என்பு-உடம்பு; உடம்பின் கண்ணும் ஐம்புலன் கண்ணுமில்லையென்க. தேறும்-தெளியும்; தெருள்-மெய் யுணர்வு; செல்லல்-துன்பம்; பரிசு-தன்மை; ஓரழகு-தனி யழகு. ஆல்: அசை.* 100

101 உடலழகிற் சாலச் சிறந்த துரவோ
ரடலுறு முள்ளத் தழகு—படர்கொள்
செயிரறுநல் லுள்ளத் தழகிற் சிறந்த
துயிரொருதன் னுண்மை யழகு

*(கு-ரை) உரவோர்-திண்ணிய அறிவுடையோர்; அட லுறும்-வென்றடக்கப்படும்; படர்கொள்செயிர்-துன்பங் கொள்ளுதற்கு வாயிலாகிய காமம் வெகுளி முதலாய குற்றம். உயிரொரு தன்னுண்மையழகு-உயிர்தானொன்றே யிருத்தலினழகு.* 101

102 நோற்றற் கெழிலுயிர்தன் ஞேக்க னுனித்துணரு
மாற்றற் கெழிலோ பிறர்த்தேற்றல்—ஏற்றற்
கிளிவர லின்மை யெழிலஃ திசையோ
டொளியுடைமை மக்க ளுயிர்க்கு

*(கு-ரை) உயிர்தன்ஞேக்கல்: நோற்குமுயிர் புறநோக் கொழிந்து தன்னையே தாஞேக்கி நிற்றல்; நுனித்துணருமாற் றல்: கல்வியறிவால் எப்பொருளையும் நுணுகியுணருமாற்றல்;*

*பிறர்த்தேற்றல்-அதனல் நுணுகிக்கண்ட நுண்பொருள்களை யும் நூனயங்களையும் விளங்கக் கூறிப் பிறரைத் தெளிவித் தல்; ஏற்றல்-இரத்தல்; இளிவரல்-மானக்கேடு; இளிவர லின்மை-மானக்கேடின்றி வழிபாடு செய்யப் பெறுதல்; அஃது: எழில். இசை- புகழ். இசையோடொளியுடைமை மக் களுயிர்க்கு அஃதென்க; ஒளி: தாமுளராகின்ற காலத்து மிக் குத் தோன்றுதல். ஆன்றோர்-உயர்ந்தோர்.* 102

103 படைக்கலஞ் சீர்த்த பகைஞர்க்குப் பண்டு
படைக்கலஞ் சீராதார் பட்டார்—படைக்கல
மென்னகொண் டேற்பா ரவரை எதிர்ப்பார்தொக்
கன்னகொண் டூர்த லழகு

*(கு-ரை) சீர்த்த-வாய்த்த; சீராதார்-வாயாதார்; பட் டார்-தோற்றுவீழ்ந்தார்; தொக்கு-திரண்டு; ஊர்தல்- மேற்செல்லல்.* 103

104 கண்ணோட்டங் கண்ணின் கவினெனினுந் தீமைமுற்
கண்ணோட்ட மின்மை கவினகுங்—கண்ணோட்ட
மில்லாயி னில்லை யுலக மதுமிகுமே
லில்லாகும் வாழ்க்கை யியல்

*(கு-ரை) கண்ணோட்டம்-பயின்றார் சொல்லியன மறுக்க மாட்டாமை; அஃதவர்மேற் கண்ணோடிய வழியுண்டாவ தாகலின் ஆகுபெயராற் கண்ணோட்டமெனப்படும். இயல்: கட்டுப்பாடுடைமை.* 104

105 கல்வியை வல்லார்முற் கல்லார்தங் கட்டழகு
புல்லென் றொழியும் புலனைந்தும்—வெல்லும்
பெருந்தகையார் முன்னர்ப் பிறைநுதன் மூரன்
முருந்தனையார் மொய்யெழில் போன்று

(கு-ரை) புல்லென்று-பொலிவழிந்து; மூரல்-பல். முருந்து-மயிலிறகினடிமுள்; முருந்தனைய மூரலுடைய பெண்டிர்; மொய்யெழில்-செறிந்த அழகு; இடையீடின்றி உறுப்புத்தொறும் நிரம்பிய வழகென்பது.

மொய் யெழில்போற்புல்லென்றொழியுமென முடிக்க.

106 நாட்டுக் கழகு மலையருவி யாறுமலைக்
காட்டுக் கழகு கலைக்கோட்டம்—ஏட்டுக்
கழகுற்ற கல்விக்க ணார்வலர் தொக்க
கழகத்தாற் பேணப் படல்

(கு-ரை) கலைக்கோட்டம்-கல்லூரி, கடவுளர் கோயின் முதலாயின. ஏடு-புத்தகம்; தொக்க-உறுப்பாகத்திரண்ட; உற்ற: உற்றுழிக்காத்த; கழகம்-அவைக்களம்; பேணப் படல்: ஏட்டு நிலையமமைத்துப் பாதுகாக்கப்படுதல். 106

107 எழுத்துக் கெழில்யா தனித்தமி ழாட்சி
வழுத்தும் வடிதமிழ்க்கு முப்பால்—பழுத்துச்
சுவைமுதிரு முப்பாற்குச் சொற்பொருளா ராய்ந்து
நவைதவிரு நல்லா ருரை

(கு-ரை) எழில்-எழில்பயப்பது; யா: அசைச் சொல்; எழுத்தென்றது ஈண்டு எழுத்தாளருடைய கட்டுரை முதலாய படைப்புக்களை; தனித்தமிழ்-பிறமொழிச் சொற்கலப் பும் மரபு நிலை திரிதலுமில்லாத தமிழ்ச் சொன்னடை; ஆட்சி-வழங்குதல்; முப்பால்-திருக்குறள்; சுவை-சொற் சுவை, பொருட்சுவைகள்; நவை-குற்றம்; நல்லார்-கற்றுத் துறைபோயினர்.

முப்பால் எழில்; நல்லாருரை எழிலென எழிலென்ப தனைப் பின்னுங் கூட்டுக. 107

108 ஓவிய மின்னிசை கூத்துப் புனைப்பொடு
பாவியற் பாட்டுமணி பல்கியெழுங்—கோவிய
லாட்சி வளனு மமைதியு மெய்துபு
காட்சிக் கியைந்த களத்து

(கு-ரை) புனைப்பு-சிற்பம்; அணி-அழகு. கோவியல்-அரசியல்; எய்துபு-எய்தி; களம்-இடம்; களத்துப் பல்கியெழுமென முடிக்க. இடமென்றது நாட்டினை. 108

109 திருமறு மார்பன் செழும்பரிமேற் போந்த
திருவழகு காண்டலுஞ் செம்பொன்—றிருடுங்
கொடியானுங் கொல்லாது கோனருளே பாடு
மடியானு மாயுய்ந்தா னன்று

(கு-ரை) திருமறுமார்பன்-திருமால்; பரி-குதிரை; செம்பொன்றிருடுங் கொடியனென்றது திருமங்கையாழ்வாரை; கோன்-இறைவன்.

ஆறலைகள்வனு யிருந்த ஆலிநாடன் கானகத்து நள்ளிரவிற் குதிரைமேல் வந்த திருமாலை அலைக்கப்புக அப்பொழுது அவனழகு கண்டு மெய்யுணர்வும் பேரன்பும் பெருகிக் களவு கைவிட்டுக் கடவுளையே பாடும் ஆழ்வாராயினன்.

110 ஐம்பொறியு மார வமர்பொழுதோ டொன்றிய
ஐம்புலத் தோற்றத் தழகுநுகர்ந்—திரும்பருளார்க்
குள்ளக் கவலை யொழியு முழப்பயர்வு
விள்ளப் பெறுமுவகை மேம்

(கு-ரை) ஆர-நிரம்ப; அமர்பொழுது-மனத்துக்குப் பொருந்திய நேரம் என்றது காலை மாலை முதலாயவற்றை; பொழுதொடு பொருந்திய ஐம்புலத் தோற்றத்தினழகு;

இம்பர்-இவ்வுலகம்; ஒழியும்; பெறும்; மேம் என்பன முற்று; மேம்-மேவும். விள்ளப் பெறும்-நீங்கப்பெறும்; உழப்பயர்வு-தொழின் முயற்சியால் வருங் களைப்பு.

ஆர நுகர்ந்தெனவியைக்க. 110

111 அழகே நயக்குமவர்க் காருயிர்மாட் டெல்லாம்
அழகே யறந்தருமன் பாக்கும்—அழகே
ஒருமுனைப்பாட் டுள்ளந்தந் துண்மை யுணர்வின்
றொருநிலைவீ டார்விக்கு முய்த்து

(கு-ரை) நயக்குமவர்க்கு-விரும்புமவர்க்கு; ஆருயிர் மாட்டெல்லாமழகே நயக்குமவர்க்கென்க; அறந்தருமன்பு-அறத்தைக் கொடுக்குமன்பு; ஒருமுனைப்பாட்டுள்ளம்-புணர்ப்பு நொசிப்புள்ளம்; ஒருநிலைவீடு-வீடுபேறு; உய்த்து: ஒழுக்கத்திற் செலுத்தி; அழகே ஆக்கும்: ஆர்விக்குமென முடிக்க. ஆர்விக்கும்-நுகர்விக்கும். 111

112 அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மைசெம்
பொன்புரையுங் கல்விப் புலமையொடு—வன்புகொடு
முட்டாற்று வார்த முனிவஞ்சா வாண்மையிவை
யுட்டோற்றும் யாண ருயிர்க்கு

(கு-ரை) பொன்புரையும்-பொன்போலும்; புலமை-நூலறிவு; வன்பு-வலிமை; முட்டு-இடையூறு; ஆற்றுவார்-செய்வார்; முனிவு-வெகுளி; உட்டோற்றும்-உள்ளத்துட் டோன்றுகின்ற; யாணர்-அழகு.

113 பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து—பணிசெய்வா
ரெல்லாரு மாகி யவர்க்கெல்லா மொப்பவவை
யில்லாமை யில்லா குக

*(கு-ரை) பிணி-நோய்; ஏமம்-காவல்; அணி-அழகு: பணிபுரிவார்-தொழில் செய்வார்; எல்லாருந் தொழில் செய் வாராகி யெனமாறுக. அவை: பிணியின்மை முதலாயின.*

*இல்லாமையில்லாகுக-உளவாகுக; இல்-இல்லை;* *113*

114 தன்னைத்தா னன்குகற் றுய்ந்து தெளிந்ததற்
பின்னைத்தான் பெட்ப செயினுமற்—றுன்னத்தாற்
செய்யா தொழியினுந் தீர்தலின் றுகுமப்
பொய்யாப் புலமையே பொற்பு

*(கு-ரை) பெட்ப-விரும்புவன; உன்னத்தான்-நினை வோடு. தீர்தல்-நீங்குதல்; அப்பொய்யாப்புலமை: மேற் கூறிய தன்னைத்தானன்கு கற்றுய்ந்து தெளிதல்; பொற்பு-அழகு; மற்று, ஆம், ஆல் என்பன அசை.* *114*

115 தங்கொற்ற மெய்தத் தகுவழிமற் றில்லெனின்
நங்கொற்ற மில்லம்யா மென்றினையார்—அங்கொற்றிச்
சூழ்ந்து பொருது விறல்கோட லல்லது
வீழ்ந்து படுத லழகு

*(கு-ரை) கொற்றம்-அரசியல்; இனையார்-வருந்தாராய்; ஒற்றி-மறைந்தறிந்து; சூழ்ந்து-ஆராய்ந்து; விறல்-வெற்றி; படுதல்-சாதல்.* *115*

116 பண்டு தமிழ்ப்பொருநன் பைந்தலைமேற் பூச்சூடி
மண்டு செருச்செய் மரபினுன்—பெண்டு
துயர்ந்த துயரை மறப்பிக்குங் கோலம்
உயர்ந்த உயிரினு மேல்

*(கு-ரை) பொருநன்-போர் செய்யும் படைமீளி; மண்டு செரு-மேன்மேல்மிக்குவரும் போர்; மரபு-வழக்கம்;*

பெண்டு-காதன்மனைவி; துயர்ந்த-துன்புற்ற; கோலம்: பூச் சூடிய செயற்கையழகு.

117 அணியிழை பூண்ப தழகென்பா ரென்க
அணியிழை தம்மை யணிவார்க்—கணியாய
ஆக்க வுணர்வை யடூஉம் புலாலுடலி
னேக்கமே நோக்க முறும்

கு-ரை அணியிழை-அணியும் அணிகலம்; அணியாய-அழகு செய்வதான; ஆக்கவுணர்வு-மேன்மேலுயர்தலைக் கொடுக்கு நல்லறிவு; அடூஉம்-கொல்லும்; உறும்-மிகும்; அணியிழை அடூஉம் என வியைக்க. அணிகலமணிவார் யார்க்கும் புலாலுடலினேக்கமே இடைவிடாத நோக்கமாயிருக்கும். 117

118 கலையுணர்விற் காணுங் கலைஞரு நில்லா
நிலையுந தெற்றென் குநருந்—தலையன்பு
நேர்ந்தாரும் யார்மாட்டு மேற்றிழிவு நேரார்மற்
றார்ந்தாரா வின்ப வழகு

(கு-ரை) தெற்றென்குநர்-தெளிந்துணர்பவர்; நிலையில்லாதவற்றையும் நிலையுடையவற்றையும் பிரித்துத் துணிந்துணர்பவரென்றவாறு; தலையன்பு-மூவகையன்புகளுண் முதலாவது; நேரார்-உடன்படார்; ஆராவின்ப வழகு ஆர்ந்து யார்மாட்டும் ஏற்றிழிவு நோராரென்க.

இம்மூவரும் யாரையும் ஒரு நிகராக நோக்குபவர். 118

119 தீவிய தூயதனிச் செந்தமிழின் செவ்வியே
பாவிய பன்மொழியும் வெல்கிற்கும்—ஓவிய
தூய்மையதேற் பன்மொழிக்குந் தோற்றிழிந் தன்னை
மாய்குவதே யாகும் வனப்பு

(கு-ரை) தீவிய-இனிய; செவ்வி-நிரம்பிய வழகு; பாவிய-பரந்த; ஓவிய-ஒழிந்த. ஓவிய தூய்மையதேல்-தூய்மை நீங்கியதேயாயின். வனப்பு மாய்குவதேயாகும்-அழகு கெடுவதேயாகும். செந்தமிழென எழுவாய் இசையெச்சம் 119

120 இயற்கை யழகு தலைப்பட்டார்க் கேனைச்
செயற்கை யழகு செறுப—இயற்கை
யழகுடையார்க் கல்லதூஉம் வேண்டாவாம் வேண்டின்
அழகதூஉ மற்றப் படும்

(கு-ரை) செறுப-வெறுப்பர். அல்லது: செயற்கை யழகு. அழகதூஉ மென்றது இயற்கையழகினை; அற்றப் படும்-மறையும்.

"உமிழ்சுடர்க் கலன்க ணங்கை யுருவினை மறைப்பதோரார்
இமிழ்திரைப் பரவைஞால மேழைமை யுடைத்து மாதோ"

எனவரும் இராமாவதாரச் செய்யுட் பகுதி ஈண்டு நினைக்கத் தக்கது. 120

121 கல்வியொடு செல்வங் கடல்சூ ழுலகெங்கும்
பல்வகையு மொப்பப் பகைநீக்கி—ஒல்வகையா
னெல்லாரு மெய்தலா மாதலி னின்றினூஉங்
கில்லாத செவ்வியுள தின்று

(கு-ரை) ஒப்ப-ஒப்பாக; பகை: கீழோர் கல்வி செல்வ மெய்தாமைக்குத் தடையாயிருப்பன. ஒல்வகையான்-இயன்ற வகையால்; இன்றினூங்கு-இற்றைக் காலத்துக்கு முன். செவ்வியது-அழகுடையது. உலகம் எழுவாய் 121

122 திங்கட் டொடக்கத்துக் கோளெல்லாஞ் சென்றுறினும்
இங்கட் புதுப்படைப் பெத்துணையு—நங்கண்
மருளச்செய் தாலுமினி வாளா வதிந்துதற்
றெருளற்கட் டாராத் திரு

*(கு-ரை) திங்கள்-திங்களுலகம்; கோள்: செவ்வாய், வெள்ளி, வியாழன் முதலாய கோண்மீனுலகு. சென்றுமீளி னும்-ஏவுகணை வானூர்தியாற் கடந்து செல்லினும் என்க. இங்கண்-இவ்வுலகத்தில்; கண்மருள-கண்வியப்ப; நங்கண் மருளப் புதுப்படைப் பெவ்வளவுஞ் செய்தாலுமென்க; வாளா வதிந்து: பற்றுமவாவுமின்மையின் எண்ணஞ் சொற் செயல்களொழிந்து தங்கி; தற்றெருளல்-தன்னைத் தெருளல்; தனிநிலையுயிராகிய தன்னைத்தான் ஐயந்திரிபு மயக்கங்கெடக் கேட்டாராய்ந்து தெளிதல்; தன்னைத்தெருளுதற்கண்ணது; ஆராத்திரு-தெவிட்டாத பேரின்பச் செல்வவழகு; பிற செயற்கட் பெறுமின்பமெல்லாம் நீர்க்குமிழிபோல நிலையில் லாதவை. எனவே அவ்வியத்தகு செயல் கண்டாரெல்லாம் அழிவில்லாது நிலைபெறுமமைதி வாயாதவராவர். அதனால் அச் செயலெல்லாம் முடிவிற் பயனற்றவையேயாய் முடியும்.* *122*

123 இயற்கைப் புணர்ச்சி யெதிர்ப்பாட்டின் கண்ணே
இயற்கையூழ் கூட்ட வெழூஉ—மியற்கைநற்
காதலன் கண்ணெதிர் நோக்கலுங் காதலி
பைய நகுதலுமோர் யாண்

*(கு-ரை) யாண்-அழகு.* *123*

124 முச்சாரார் மாட்டு முனிவின்றி யொப்புநின்
றச்சால்பிற் றீராத வாண்மையும்—எச்சாரும்
பாவம் பழிநாணும் பான்மையுஞ் சான்றோர்க்கு
மேவு மணியென்னு மேல்

(கு-ரை) முச்சாரார்-பகைவர், நண்பர், நொதுமல ரென்னுமிம் முத்திறத்தார்; ஒப்ப-பொதுவாக; முனிவு-வெறுப்பு; எச்சாரும்-எவ்விடத்தும்; அணி-அழகு; மேல்: மேலோர். அணியென்று கூறுவர் மேலோரென்றவாறு. 124

125 செய்யு ணயம்படச் செய்யும் புலவர்க்கும்
நையுந் துயராற்று நல்லார்க்கும்—மெய்யுணர்ந்
துன்னந் தகைக்கு முரனுடை மேலோர்க்குந்
தன்னந் தனிமை தகை

(கு-ரை) உன்னம்-எண்ணங்கள்; தகைக்கும்-தடுக்கும்; உரன்-திண்ணியவறிவு; தகை-அழகு. 125

126 சுருக்கம் விளக்க மொழுகிசை சொல்லி
னெருக்கம் விழுப்பமெய்ப்பா டெச்சம்—உருக்கம்
பழுனிய நோக்கமொடு பாவு மரபுந்
தழுவுதல் செய்யுட் டகை

(கு-ரை) விழுப்பம்-விழுமியபொருள்; மெய்ப்பாடு-எண்வகைச் சுவை; எச்சம்: சொல்லெச்சங் குறிப்பெச்சமென் பன. உருக்கம்-நயங்கண்டுள்ள முருகுதல். பழுனிய-முதிர்ந்த; நோக்கம்: நோக்கென்னுஞ் செய்யுளுறுப்பு. பா-செப்பலிசை முதலிய செய்யுளிசை நிரம்புதல். தகை-அழகு. 126

127 கள்ளுணல் பொய்களவு கோட்டமழுக் காறுநோ
யெள்ளுறுங் காம மிவறன்மை—கொள்ளுமிழை
செற்றங் குறளை பயனில்கூற் றுறுக
மடியின்ன கொல்லும் வனப்பு

(கு-ரை) கோட்டம்-நடுவுநிலையின்றி ஒரு பாற்கோடு தல்; இவறன்மை-கடும்பற்றுள்ளம்; கொள்ளுமிழை-

*அணியு மணிகலம்; ஒற்கம்- வறுமை; இன்னவை ஒருவரு டைய அழகைக் கொல்லும்.* **127**

128. குயில்கூங்காத் தீம்புனற் கோட்டு நிலவிற்
பயில்பூம் பசுந்தென்றல் பாவ—மயில்போலு
மாதர் மிடற்றெருடியாழ் வண்டமிழ்ப் பண்மிழற்றக்
காதலற் குண்டோர் கவின்

*(கு-ரை) தீம்புனற்கோடு-இனிய நீரையுடைய பொய் கைக்கரை; பாவ-பரவ; மாதர்-காதலி. கவின-அழகு.* **128**

129 வேட்கையும் பற்றும் விளித்துத்தன் னுண்ணேக்கும்
பூட்கைய பொய்யாப் புலவர்க்கும்—ஆட்களின்
றுன்பந் துரக்குங் கலைஞர்க்குந் தொல்லுலகம்
இன்பஞ் சுரக்கு மெழிற்று

*(கு-ரை) விளித்து-கெடுத்து; பூட்கைய: உண்ணேக்குத லாகிய மேற்கோளையுடைய. பொய்யாப்புலமை-மெய்ப் பொருணூலறிவு; எழிற்று-அழகுடையது.* **129**

130. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனு
லுழந்து முழவே யழகிற்—றுழன்று
விருந்துணவு நல்கி மிடித்தலுஞ் செப்ப
மிருந்தவர்த மின்மையுநல் லேர்

*(கு-ரை) உழந்தும்-வருந்திமுயன்றும்; அழகிற்று-அழகு செய்வது; மிடித்தல்-வறுமைப்படுதல்; செப்பம்-நடுவு நிலைமை; இன்மை-வறுமை; ஏர்-அழகு.* **130**

131 எல்லா முணர்வோனு மெல்லாம்வல் லோனுமா
யெல்லா மருளு மிறைவனை—நல்லார்
அயிர்ப்பிலரா யார்வங்கூர்ந் தாராய்வா ராகி
யுயிர்ப்பொதுமை யுண்ண லழகு

*(கு-ரை) உயிர்ப்பொதுத் தன்மையே இறைவனது தோற்றம்; அயிர்ப்பு-ஐயுறவு; உண்ணல்-நுகர்தல்.* **131**

132. உயிர்ப்பு வளிசெறுத் துண்ணிறீஇ யுள்ளத்
தயிர்ப்பின் றிறைவ னருளோ—டுயிர்ப்பி
ஞெலியெழுத் தோமென் றிடையறு துள்ள
லொலியுயிர்க் கீனு மழகு

*(கு-ரை) உயிர்ப்புவளி-மூச்சுக்காற்று. செறுத்து-அடக்கி. அயிர்ப்பின்று-ஐயமின்றி. உயிர்ப்பினொலி யெழுத்து-மூச்சுக்காற்றினோசையாகிய எழுத்து. அவ்வெழுத்தாகிய ஓம் என்று. உள்ளல்-நீள நினைத்தல். ஒலி யுயிர்-தழைக்குமுயிர். உள்ளல் ஒலியுமுயிர்க்கு அழகினை ஈனுமென முடிக்க.* **132**

133. கல்வி யறிவொழுக்கங் கன்றிய வாழ்க்கையராய்
இல்வறுமை யெய்து மினியர்க்குச்—செல்வர்
கரவாமை யீதலுங் கைகரப்பார் தம்மாட்
டிரவாமை தானு மெழில்

*(கு-ரை) கன்றிய-அடிப்பட்டுப் பழகிய. இல்வறுமை-மனைவறுமை. இரவாமை: அவ்வினியர் சென்றிரவாமை.* **133**

134. ஏனையுயிர்க் காண்டற்க ணின்பப் பிழம்பெனத்
தானமையுந் தன்னுண்மைத் தற்காட்சி—யூனமரு
மன்பென்னுந் தன்பே ரழகென்ப வஃதன்றி
யின்பென்ப தியாதொன்று மில்

(கு-ரை) உயிர்க்காண்டல்-உயிரைக் காண்டல். தன் னுண்மை-தானிருத்தல். ஊன்: உடம்பு. தற்காட்சி பேரழ கென்ப வெனவியையும். அஃதன்றி: அவ்வன்பன்றி. 134

135. வரியெழுத் தோதி வழக்குணர் வாருந்
தெரியாடி காண்குநருஞ் செத்துத்—திரிபின்றிக்
கோயிலுட் புத்தேளி ரல்லாக் குறிப்புட்கொண்
டாயிடைப் போற்ற லழகு

(கு-ரை) வரியெழுத்து நோக்கிப்படிப்பவர்க்குக் கருத்து அவ்வெழுத்தின்மேலின்றி அவற்றாற் குறிக்கப்படுஞ் செய் தியின்மேற் செல்லும். கண்ணாடி பார்ப்பவர்க்குக் கண் கண்ணாடியைப் பார்ப்பினுங் கருத்துக் கண்ணாடியின் மேலின் றித் தம் மேலுளதாகும். அதுபோலக் கோயிலுட் புத்தேளி ருடைய போலிப் பிழம்பைப் பார்ப்பவர் அப்பிழம்பின் மேற் கருத்தின்றி அவற்றாற் குறிக்கப்படும் புத்தேளிர் மேற் கருத்திருத்தல் வேண்டும். அதுவே கோயிலிற் கடவுளரை வழிபடுமாறு.

ஆடி-கண்ணாடி. செத்து-போன்று. புத்தேளிர்- கட வுளர். ஆயிடை: அக்கோயிலில். 135

136. ஆக்குவோற் காலை யளிப்போனை நண்பகலின்
வீக்குவோன் றன்னை விழுசுடரிற்—றாக்கமுறுங்
கங்குலிடை மால்செய் கடவுளை யேனோனைப்
பொங்குபுலர் போழ்துள்ளல் பொற்பு

(கு-ரை) வீக்குவோன்: அழிக்குங் கடவுள். விழுசுடர்: மாலைப்பொழுது. மால்செய் கடவுள்-மறைத்தற்றொழிற் கடவுள். ஏனோன்: அருளற்றொழிற் கடவுள். புலர்போழ்து-வைகறைப்போழ்து. உள்ளல்-நினைந்து தொழுதல். பொற்பு-அழகு. 136

137. எத்துணையுஞ் சால விலம்பாடு நேரினுங்
கைத்துடையார் பின்சென்று காவாமே—தொத்துறுத
லில்லாமே யின்னலு மெய்தாமே தீயசெயல்
கல்லாமே யுய்தல் கவின்

*(கு-ரை) இலம்பாடு-வறுமை. கைத்து-கைப்பொருள். தொத்துறுதல்-அடிமைப்படுதல். தீயசெயல்: களவு முதலாயின. உய்தல்-தப்பி வாழ்தல்.* 137

138. பயின்றார்க்குத் தேனும் பாலும் புளிக்கும்
அயின்றார்க்குப் பொற்பு மதுவே—துயின்றார்க்
குலகுபா ழாகு முடம்புநீத் தார்க்கும்
அலகிலா யாணரெலா மற்று

*(கு-ரை) துயின்றார்க்கு: தாம் பயின்ற உலகினழகிலழுந்தாது புறக்கணித்து மடிந்து தூங்கினார்க்கு. பாழ்: அழகில்லது. அலகு-அளவு. யாணர்-அழகு.* 138

139 ஊர்ப்புறம் பண்ணை யொழுகுநீர்த் தோற்றம்பொற்
பேர்ப்புறம் வித்தி யியங்கலொடு—பார்ப்புற
நாற்புறமுஞ் சூழ நணுகு குறிஞ்சிமுத
னாற்புலமு நாட்டங்கொள் பொற்பு

*(கு-ரை) ஊர்ப்புறம்-ஊர்க்கு வெளியில். பண்ணை-மருதநிலம். ஒழுகு நீர்த்தோற்றம்; வயல்களிலும் வாய்க்கால்களிலும் ஓடுகின்ற நீரது தோற்றம். ஏர்ப்புறம்-உழுகின்ற கலப்பையின் பின். வித்தி-விதைத்து; ஏர்ப்புறம் உழவர் விதை விதைத்துக்கொண்டு செல்லுதல் அழகுடையதாமென்க. பார்ப்புற-காணும்படி. நணுகு-நெருங்கியுள்ள. புலம்-நிலம். நாட்டங்கொள்-கண்ணைக் கவரும்.*

140. காளைக்குஞ் செங்கட் களிற்றுக்குங் கானுறையும்
யாளிக்கும் பொய்கை யெகினுக்கு—மீளிக்குங்
கற்புடைப் பெண்டிர்க்குங் கல்விகெழு சான்றோர்க்கும்
பொற்புடைத் தென்ப நடை

*(கு-ரை) காளை-கொழுத்தஎருது; களிறு-யானை; கான்-காடு; யாளி-சிங்கம்; எகின்-அன்னப்புள்; மீளி-போர் மறவன்; பொற்பு-அழகு; நடக்கு நடை பொற்புடைத்து.* 140

141. துஞ்சினார் தம்மைத் தொடுகுழிப் பெய்துவரின்
எஞ்சினார்க் கில்லொடுசெய் யாண்டைய?—துஞ்சின்
உடல்பலவுந் தீயூட்டி னோயாது மற்றுக்
கடல்சூலவும் வையங் கவின்

*(கு-ரை) துஞ்சினார் தம்மை-செத்தாரை; தொடுகுழி: தோண்டப்பட்ட கல்லறை; பெய்துவரின்-இட்டுப் புதைத்துவரின்; எஞ்சினார்க்கு: இப்பொழுது சாவாது பிற்பொழுது சாவ விருந்தார்க்கு; இல்-மனை; செய்: நன்செய்புன்செய். யாண்டைய: எவ்விடத்துள்ளனவாம்? (ஓரிடத்துமுள்ளன வாகா) என்பது குறிப்பு. துஞ்சின்-இறந்தால்; ஓயாது-குன்றாது; சூலவும்-சூழும். வையங் கவினோயாதென முடிக்க; உலகம் இடுகாடாய்ப் பெருகினால் இருக்கின்றோர்க்குவேண்டுமில்ல மிருத்தற்கும் உழுநிலத்துக்குமிடங் குறைந்துகொண்டு வரும். எல்லாப்பிணங்களையும் புதையாது சுட்டெரிப்பது தானல்லது. இல்லையாயின் உலகம் அழகுகெடும். உம்மை முற்றும்மை. மற்று: வினைமாற்றிடைச் சொல்.* 141

142. ஈனறிவைப் பட்டாள தியாக்கையு மின்றாத
நோன்றிளைத் தார்மெய்ந் நுடக்கமுந்—தோன்றிய
மான முடையார்தம் பட்டினி வாட்டமும்
ஏன மெனலா மெழிற்கு

(கு-ரை) ஈன்று-மகவு பொறையுயிர்த்து. இளைப்பட்டாள்-காவற்பட்டாள். இன்னாத நோன்று-இன்னாதனவாய வெயில் குளிர் பட்டினி முதலாய துன்பங்களைப் பொறுத்துத் தவஞ் செய்து. மெய்ந்நுடக்கம்-உடம்பின் மெலிவு. ஏனம்-கொள்கலம். அழகிற்குக் கொள்கலமெனக் கொள்ளலாம் என்க. 142

143. இல்லா ளடக்கமில ளாமாயி னில்லாளைச்
சொல்லாற் சுடற்க துரத்தற்க—நல்லார்
உதவா திடனொரீஇ யொள்ளியளா யக்கால்
விதவார் பெயர்த லழகு

(கு-ரை) துரத்தற்க: மனையினின்றும் வெளியேற்றற்க. உதவாது-உதவி செய்யாது. இடன்ஒரீஇ: மனையிடத்தை விட்டு நீங்கி. ஒள்ளியலாயக்கால்: மனையாள் அடக்கமுடையவளாய்த் திருந்தி நல்லளாயின். விதவார்: மனையாளை வேறு படுத்தாதவராய். பெயர்தல்: தம்மனைக்கு மீண்டு வருதல்.

144. பெண்மையுங் கற்பும் பெரும்பணிவு மாண்மையுந்
தண்மையு மென்றித் தகவுடையார்—ஒண்மை
பழகுமுறை பண்பன் பருள்வாய்மை யாள
ரழகும் மழகு பெறும்

(கு-ரை) பெண்மை: நாண்மடமச்சம் பயிர்ப்புடைமை கற்பு: கணவன்பாற் கடவுட்டன்மை கொண்டொழுகல். ஆண்மை-அஞ்சாமை. தண்மை-அன்பருளமைதியுடைமை. ஒண்மை-நுண்ணறிவுடைமை. பழகுமுறை-நீதியிற் பழகுதல். பண்பு: அவரவரியல் பறிந்தொத்தொழுகுதல் 144

145. வல்லாற்கு வல்லானை வையமுடைத் தென்றமுது
சொல்லானுந் துன்னு மெளியார்மேற்—செல்லாது
மெல்லியர்போன் மெல்லியலார் மென்மைக்கு
மெய்குழையும்
வல்லியலார் வன்மை வனப்பு

*(கு-ரை) எளியார்-வலியில்லாதார். மேற்செல்லுதல்-தாக்கித் துன்புறுத்துதல். மெல்லியர்போல்-வலியில்லாதார் போன்று காட்டி. மெல்லியலார்-பெண்டிர். வல்லியலார்-வன்மையை இயல்பாகவுடையவர். சொல்லானுமென்னு மும்மை இரக்கத்தானுமெனத் தழுவியதாகலின் எதிரதுதழீ இயவெச்சவும்மை* 145

146. பெண்ணேவல் செய்யாது பெண்ணடிமை கொள்ளாது
பெண்ணேடி வேறு பிரியாது—பெண்ணேய்ந்த
பீடுமேம் பாடுறீஇப் பெண்ணே டிகலாமை
கூடுமேற் கூடு மழகு

*(கு-ரை) பெண் ஈண்டு மனைவி. பெண்ணை அடிமை கொள்ளாதெனவிரிக்க. நேடி-தேடி; வேறு பெண்ணைத் தேடித் தம்பெண்ணைப் பிரியாது. பீடு-பெருமை. பெண் ணேய்ந்த பெருமையை மேம்பாடுறச் செய்து. கூடுமேல்-கிடைக்குமாயின். அது கிடைக்கு மழகெனப் படுமென்க. அழகு கூடுமென முற்றுக்கினுமாம். மிகு மழகு செய்வதெனி னுமாம்.* 146

147. இகலெதிர் கொள்வானை யிற்பழிநா ணுனைப்
புகலடிசி லட்டிடகில் லானை—நகலுரையு
மின்னுனை யையுற வேய்ந்தானை நீடாதில்
லென்னுமே நீத்த லெழில்

*(கு-ரை) இகல்-பகைமை. எதிர்கொள்வானை-மேற் கொள்வானை. இற்பழி-குடிப்பழி. புகலடிசில்-விரும்புமுணவு. அட்டு-சமைத்து. இடகில்லானை-உண்ணக்கொடுக்கமாட்டா தானை. நகலுரையும்-சிரிப்புஞ் சொல்லும். இன்னுனை-இனிய வல்லாதானை. ஐயுற ஏய்ந்தாள்-ஐயப்படும்படி அமைந்தாள். நீடாது-காலந்தாழாது: விரைந்து. இல்-மனையாள். நீத்தல்: விட்டு நீக்குதல்.* 147

148. எனைப்பொருள் மாட்டு மெழிலையே நோக்கி
நினைப்புறு நெஞ்சு நிகழு—மனைப்பரிசின்
அம்மைக்கண் வானத் தழகுடைய ராபவே
இம்மைக்கண் மக்களென் பார்.

*(கு-ரை) அனைப்பரிசின்-அந்தன்மையால். அம்மை-மறு பிறப்பு. வானத்து-வானுலகத்துக்கண்.* 148

149. கல்வியொடு செல்வங் களவென்றி கொற்றமென
நல்வினையி னுய நலமென்ப—வல்விரையும்
வாழ்நாட் பெருக்கம் வடிவழகு நல்வினையை
வீழ்நாட் படாமற் செயல்

*(கு-ரை) களவென்றி: போர் வெற்றி. கொற்றம்-அதிகாரம். என-போல. இவைபோல வாழ்நாட் பெருக்கமும் வடிவழகும் நல்வினையினுய நலமென்ப என முடிக்க. அதனுல் நல்வினையை வீழ்நாட் படாமற் செய்கவென ஒரு சொல் வருவிக்க. வடிவு-திருத்தம். வீழ்நாள்-செய்யாது கழிந்தநாள்.*

150. ஆள்வினை சிக்கன மாகு மிருபாலும்
நாள்வினை யாகி நடைபெறுமேற்—கோள்விளை
வின்றி மனைவாழ் வெழிலுடைத்து நல்குரவே
யன்றிக் கடன்படலு மற்று

*(கு-ரை) ஆள்வினை-இடைவிடாத மெய்ம் முயற்சி. சிக்கனம்: பழுதாய செலவொழித்தின்றியமையாத செலவு செய்தல். இருபாலும்-இருவகையும். நாள்வினை: இடையறு தெப்பொழுது முடையதொழில். கோள்-தீங்கு. நல்குரவு-வறுமை. அற்று-இல்லையாகி. இல்லையாதலாற் கோள்விளை வின்றி மனைவாழ்வு எழிலுடைத்தென்க.* 150

151. மேலுலக மில்லை யெனினும் விருந்துக்கும்
மாலுடைய ராய வறியார்க்கும்—நூலுணரும்
வள்ளற் புலவர்க்கும் வாய்மைத் துறவோர்க்குங்
கொள்ளக் கொடுத்த லழகு

*(கு-ரை) மாலுடையராய: பட்டினி மயக்கமுடையவராய. வள்ளற் புலவர்: நூல்களின் நுண்பொருள்களையும் நயங்களையும் வரையாது வழங்கலின் வள்ளல்களாகிய புலவர்.* 151

152. அஞ்சாது போரின்க ணருயிர் நீத்தலும்
எஞ்சாது செல்வமெலா மீத்தலுந்—துஞ்சாது
மெய்யுணர்விற் றேறலு மேலாய மாந்தர்தம்
மெய்யுயிரின் செவ்வி மிகை

*(கு-ரை) எஞ்சாது-குறையாது. துஞ்சாது: இரட்டுறமொழிதல்; சாவாதுந் துயிலாதும். தேறல்-தெளிதல். மெய்யுயிர்-உடம்பொடு கூடியவுயிர். செவ்வி-அழகு. மிகை-மிகுதி.*

153. பயனில சொல்லாப் பயிற்சியு மீளா
துயலுறு வள்ளி யுணர்விற்—செயலிலர்
வாய்வாளா மாண்பும் பிறர்கோண் மறத்தலு
மாய்வாளர்க் காகு மழகு

*(கு-ரை) மீளாது: உய்தியினின்று மீண்டு வாராது. உயல்: வீடு பெற்றுய்தல். உயலுறுதற்கு வாயிலாகிய வள்ளியுணர்வென்க. வள்ளி: உயர்வற வுயர்ந்த செம்பொருள். வள்ளியையுணரு மெய்யுணர்வாற் செயலில்லாதிருக்கும் பெரியார். பிறர் கோள்-பிறர் செய்யுந் தீங்கு. மறத்தலும்: பொறுத்தற்கு மேற்பட மறத்தலுமென்க. எய்து மழகு: புலனாகுமழகு.* 153

154. எல்லார்க்கு மெல்லா மழகாகா கண்ணுற்று
றெல்லார்க்கு மொத்த வழகொன்றுண்—டெல்லார்
செயலு மொழியு நினைவொடு செல்லா
தயலொன் றிலதா மது

*(கு-ரை) நினைவொடு செயலுமொழியுஞ் செல்லாது மீளு தற் கமைந்ததூஉந் தன்னினின்று ம்வேறென்றுமின்றித் தானொன்றேயிருப்பதூஉமாய அம்முழுமுதற் செம்பொருள், அதுவே அவ்வழகாமெனவிரித்து முடிக்க.* 154

155. ஏனை யழகெல்லா மில்லையெனு மூழியிற்
றுனு மழியாது தானொன்றே—மானச்
செயிரறுநற் செம்பொருளாய் மேன்மேற் சிறப்ப
துயிரொருதா னைய வழகு

*(கு-ரை) மான: எஞ்ஞான்றும் யாண்டுமொப்ப. செயிர்-குற்றம். செம்பொருள்-திரிபில்லாத மெய்ப்பொருள். உயிரொருதானைய-உயிர் தானொன்றேயுள்ளதான* 155

156. செல்வப் பெருக்கஞ் சிறுகியக்கா லில்லுடையார்
செல்வர்ப் பணியாமை செவ்வியது—செல்வமெனுங்
கல்வி தறுக ணிசைமை கொடைகளா
லல்கும் பெருமிதமு மற்று

*(கு-ரை) தறுகண்-அஞ்சாமை. இசைமை-புகழுடைமை அல்கும்-தங்கும். பெருமிதம்—வீரம். அற்று: அத்தன்மையது: அழகு செய்வதென்றவாறு.* 156

157. வரவெதிர் கொள்ள வழிச்செலல் வள்ளல்
புரவெதிர் கொள்ளப் புகழ்தல்—இரவெதிர்
மாந்தர் வரிசை வழங்கப் பெறுதலவர்க்
கீந்த புகழு மெழில்

*(கு-ரை) வள்ளல்-கொடையாளி. புரவு-ஈந்து காத்தல். வரிசை: நன்கு சிறப்புச் செய்தல். வழங்கப்பெறுதல்-கொடுக்கப்பெறுதல். இரவு-இரந்து பெற்றுண்ணுதல். எதிர்-மேற்கொண்ட.*

*எச்சவும்மை செவ்வெணீற்றுக்கண்ணதாயிற்று* 157

158. எப்பிறப்பே யானு மிளமைச் சிறுசெவ்வி
பொற்புடைத்தே யாகிப் பொலிவுறுமாற்-பிற்பிற்
பழுதுறினும் பார்வைக் கினிது வெடிக்குங்
கழுதையின் குட்டிக் கவின்

*(கு-ரை) செவ்வி-பருவம். பொற்பு-அழகு. வெடிக்கும்-துள்ளும். கவின் இனிதெனவியையும்.* 158

159. பெண்டாட்டி யோடானு நட்புப் பிணைந்தநாள்
கொண்டாட்டங் கோட லியல்பாகும்—கொண்ட
இலவலர்வாய் மாட்டு மியல்பாய் மலர்தலுங்
கூம்பலுங் கொள்ளாமை பொற்பு

*(கு-ரை) ஆனும்-ஆயினும். பிணைந்தநாள்-தொடர்ந்த நாள்; விரும்பியநாளெனினுமாம். ''பிணையும் பேணும்பெட்பின் பொருள்'' வென்பது தொல்காப்பியன். கொண்ட: மணஞ் செய்து கொண்ட. இலவலர்வாய்: மனைவி; அன்மொழித் தொகை. மலர்தல்-மகிழ்தல். கூம்பல்-கவலுதல்.* 159

160. கால மறிந்து பிழையாத கண்ணிலி
கோல மழிந்து குரங்காகுங்—காலம்
அறிந்துலகோ டொப்ப வமைந்தொழுகு வார்க்குச்
செறிந்தழகு சேர்த்தன்று வாழ்வு

*(கு-ரை) கண்ணிருந்துங் கண்முன்னுள்ள தற்கால வுலகியல்புகளை யறியாதவன் கண்ணிலியெனப்பட்டான். கோலம்: சிக்கனமின்றி வாழ்க்கைச் செலவு செய்து பகட்டாகிய தோற்றங்கொளல். குரங்காவான்-குரங்குபோல்வான். அமைந்து-போதுமென்றடங்கி. செறிந்து-இடைவிடாது தொடர்ந்து. சேர்த்தன்று-வாய்ந்தது.* 160

161. சேரியும் பல்கித் தெருவுங் கவினியவாய்
மாரியும் வாய்த்து வளம்பெருகி—ஏரிய
மாடம் பொலிதரினும் வன்கட் கொடியர்வாழ்
நாடன் றழகிற்று நைந்து

*(கு-ரை) சேரி: நாட்டுப்புறத்தூர்கள். பல்கி-செழித்துப் பெருகி. தெரு-போக்குவரத்து வழிகள். ஏரிய-எழுச்சியுடைய. நாடு நைதலால் அழகிற்றன்று.* 161

162. குருடனுடைப் பெண்டி னழகும் பொருணயஞ்
சொன்னயந் தேற்றார்பாற் சொல்லிய—நன்னெ
றியற்பா வழகு மிலம்பாட் டிளமைகூர்
வியப்பா மழகும் விழல்

*(கு-ரை) தேற்றார்-அறியாதார். இலம்பாடு-வறுமை. விழல்-பாழ்: சிறிதும் பயனில்லது.* 162

163. பேரழகு வாய்ந்த பெருங்களியாற் பொச்சாப்பு
நேரலுறு மாயி னெறியல்ல—சேரலுறும்
ஆதலா னுள்ளிய ராற்றவழ கெய்தியக்காற்
காதலாற் கொள்ளார் களிப்பு

(கு-ரை) பொச்சாப்பு-மறதி: செயற்பாலவற்றையும் அறியற்பாலவற்றையும் புறக்கணித்தல். நெறியல்ல-தீய செயல்கள். ஒள்ளியர்-நல்ல அறிவுடையவர். ஆற்ற-மிக. காதல்-பெருவிருப்பம். களிப்பு: அளவிறந்த மகிழ்ச்சி. 163

164. பெரிது மழகியெனப் பெட்டுப் பிறள்பால்
அரிது முயன்றுவி யற்றார்த்—தெரிதும்
அழகுகண் டுள்ளுவகை யாராது வேட்டார்க்
கழகுநஞ் சாதலு மாம்

(கு-ரை) பெரிதும்-மிகவும். பெட்டு-விரும்பி. பிறள்: பிறன்மனைவி. அரிது-இடர்ப்பட்டு. ஆராது-பொருந்தாது: முற்றெச்சம். வேட்டார்க்கு-அவாவினார்க்கு. 164

165. யாண்டு மழகல்ல தின்றே லதுதுய்த்தல்
வேண்டு மெனயாரும் வேண்டார்மன்-யாண்டும்
அழகின்மை தானு மமைவதூஉ மன்று
லழகின்மை காட்டு மழகு

(கு-ரை) மன்: ஒழியிசையிடைச்சொல். அழகல்லது-அழகுடையதல்லாதது. அழகல்லதின்றேலென்பது அழகே யிருப்பின் என்றவாறு. அழகின்மையினாலே அழகு விளங்குதலின் அழகின்மை அழகைக் காட்டுவதாம்.

166, சொல்லுச் சுவையொடுபோந் தொக்கு நிரையுற்ற
பல்லுப் பழுதுபடு பொக்கைவாய்க்—கெல்லுற்ற
ஐம்பொறியு மாற்ற லருகினார்க் கஃகவரு
மைம்புலனும் வீயு மழகு

(கு-ரை) தொக்கு-கூடி. நிரை-வரிசை. எல்-விளக்கம், அருகினார்க்கு-தேய்ந்தார்க்கு. அவ் கவருமென்பது அஃகவரு

மெனத் திரிபு புணர்ச்சி யெய்தும்; அவை கவருமென அல்வழித் தொடர். கவருமைம்புலனெனப் பெயரெச்சஞ் செயப்படு பொருட் பெயரொடு முடிந்தது. ஐம்புலனும் அழகு வீயுமென்பது மாடுகோடு கூரிதுபோல முடிந்தது. வீயும்-கெடும். 166

167. வேண்டுமா லம்ம மிளிர்தருநூ லேட்டுக்கும்
ஈண்டுதா ளட்டை யிணைப்பொடு—மாண்டுபதிப்
பெண்ணைப் பொருந்தி யியைந்து தலைப்புக்கள்
கண்ணைக் கவருங் கவின்

*(கு-ரை)* மிளிர்தருநூல்-விளங்கும் நூல். புலவர்களாற் செய்யப்பட்டுப் புகழான் விளங்கும் பனுவலென்றவாறு. நூலேடு-நூலையுடைய ஏடு. மாண்டு-மாட்சிமைப்பட்டு. ஈண்டுதாள்கள் அட்டையிணைப்புக்களொடு மாட்சிமைப்பட்டென்க. ஈண்டுதாள்: பலவாய்த் திரண்டதாள்கள். பதிப்பெண்: மருங்கெண் செய்யுளெண் ணென்பன. தலைப்புக்கள்: நூற்பெயர் முதலாக வருந் தலைப்புக்கள்: கவின்வேண்டுமென விற்பூட்டாக்குக. ஏட்டுக்குங் கண்ணைக்கவருங் கவின் வேண்டுமென முடிக்க.

அம்ம: உரையசையிடைச்சொல். ஆல்: அசை 167

168. உண்மை யுணர்வு களிப்பென் றிவைமூன்றே
வண்மைத் தனியுயிர்தன் மாண்பிழம்-புண்மை
முதலிய காண முறையா னுதலும்
வினையன் பழகுணர்வு வித்து

*(கு-ரை)* வண்மைத்தனியுயிர்-மேன்மேற் பெருகுதலையுடைய தனியுயிர். தனியுயிர்: பருவுடம்பு நுண்ணுடம்பு முதலியவற்றின் வேறாயவுயிர். பிழம்பு-வடிவு. நுதலும்-கருதும். வித்து-காரணம். உண்மைகாண வினைவித்தெனவும்

*உணர்வுகாண அன்புவித்தெனவும் களிப்புக்காண அழகுணர் தல்வித்தெனவும் நிரனிறைப் பொருள்கொள்க. களிப்பு: பேரின்பம்.* *168*

169. இளமைக்க ணேய்பொதியும் யாக்கையுந் தீய
உளமிக்க சூழலு முள்ளார்க்—இளமை
இடங்கழி காம மெழில்கொல்லுந் தக்கார்
உடங்கவர்க் காக்க வுணர்ந்து

*(கு-ரை) பொதிந்த-உள்ளடக்கிய. சூழல்-சற்றுச்சார்பு. தக்கார்: தாய்தந்தையர். ஆசிரியர், தமையன்மார், அரசன் முதலியோர். உடங்கு-உடன். அவர்: இடங்கழிகாமமுடைய இளஞர். தக்கார் அவரை யுணர்ந்து உடன் காக்க வென்பது. எழில்: உடலழகு.* *169*

170. இளமைக்க ணூல்கற்றுக் காளைக்க ணின்பம்
உளமொத்த நல்லாளோ டுண்டு—வளமை
விடலைக்க ணேற்று முதுமைக்கட் சார்பு
விடன்மக்கள் பொற்பின் மிதப்பு

*(கு-ரை) காளை-காளைப்பருவம். உளமொத்த நல்லாளோ டின்பமுண்டென வியையும். விடலைக்கண்-விடலைப்பருவத் துக்கண். நோற்று-தவஞ்செய்து. சார்புவிடல்: ஒருவன் முன் றன்னுள்ள முதலாயவற்றினின்றுந்தான் வேறுதலையுணர்த லாகிய மெய்யுணர்வு. மிதப்பு-மிகுதி.* *170*

171. இடம்பொரு ளேவலு மில்லாளும் வாயாக்
கடம்படு மில்வாழ்வு கைத்துத்—திடம்படத்
தன்னந் தனிவாழ்வு தாங்குதலே யன்றியுயிர்க்
கின்னும் படுமழ கியாது

*(கு-ரை) வாயா இல்வாழ்வென வியையும். வாயாமை: இல்லாமையும் இருந்துந்திருந்தாமையும். கடம்படு மில் வாழ்வு: அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலுந் துற வோர்க்கெதிர்தலுமுதலாய கடமைகள் உண்டாதற்குரிய மனைவாழ்க்கை. கைத்து-வெறுத்து. திடம்பட-நிலையாக. தன் னந்தனி வாழ்வு: துவாத்துறத்தல். இன்னும் படுமழகியாது- இதன்மேலுமுண்டாகக் கடவ அழகுயாதுள்ளது; ஒன்று மில்லை.* 171

**172.** கோல்செம்மை யாயிற் குடிசெம்மை யெய்துமே
நூல்செம்மை யாய நுவலுமே—வேல்செம்மை
யாயவென்றி நல்குமே யத்தகுநா டல்லலொடு
நோய்பொன்றிப் பூக்குமே நோக்கு

*(கு-ரை) கொற்றவன் கோல்வளையாமை யென்பது முட் டாது முறை செய்தல். குடிசெம்மை யெய்துதல்: நாட்டுக் குடிகள் கல்வி செல்வ முதலியவற்ருன் மாட்சிப்படுதல். நூல்கள் செப்பமான பொருள்களைச் சொல்லுமென்க. வேல் செம்மையாய் வென்றி நல்கும்-போர்க் கருவிகள் தப்பாது வெற்றி கொடுக்கும். பொன்றி-கெட்டு. நோக்கு-அழகு. நாடு அழகைப்பூக்கும்.* 172

**173.** கல்வி யறிவொழுக்கம் பெண்பெற்ருன் காதலிக்குஞ்
செல்வம் விழையுந் திருவின்ருய்—தொல்சுற்றங்
கேண்மை விழையு மணுளன்பா லாண்மை
அழகுமசிழ்ந் துள்ளு மணங்கு

*(கு-ரை) கேண்மை-உறவுடைமை. உள்ளும்-நினைக்கும். அணங்கு: மணூட்டி.* 173

**174.** மருகி கொணரும் வரிசைச்சீர்க் கோகை
பெருகி வருமிற் பெரியாட்—குருகிக்
கிழமைகண் டின்புறூஉ மிற்பெரியோன் கேள்வன்
அழகுகண் டின்புறுவ ளுங்கு

(கு-ரை) ஓகை-மகிழ்ச்சி. இற்பெரியாள்: கணவனுடைய தாய். இற்பெரியோன்: கணவனுடைய தந்தை. கிழமை: குடித்தொடர்புடைமை: கேள்வன்-கணவன். ஆங்கு-அது போல. அதுபோலக் கணவன் மனைவியின் அழகு கண்டின்புறுவனென்க. ஆங்கு-அவளிட மெனினுமாம். 174

175. இன்பம் வரவெதிர்கொண் டேனையது காய்தலின்
இன்பப் பிழம்பாகு மென்பவுயிர்—இன்ப
அழகுதேர்ந் தார்வ முறுதலி னீறி
லழகுதா னாகு மது

(குரை) ஏனையது: துன்பம். காய்தல்-வெறுத்தல். பிழம்பு-வடிவம்; திரளெனினுமாம். தேர்ந்து-தேடி. அது: அவ்வுயிர். 175

176. உழப்புடையார் காலடிமே லுற்ற வழகு
கழப்புடையார் தம்முகத்துங் காணு—துழப்பினல்
எய்தா வுறுதியு மில்லைக் கழப்பினல்
எய்தாத கையறவு மில்

(கு-ரை) உழப்பு-முயற்சி. கழப்பு-மடி. காணு து-காணப்படாது. உறுதி-நன்மை. கையறவு-கவலை. உழப்பினல் எல்லா நன்மையுமுண்டாகும். கழப்பினல் எல்லாத்துன்பமுமுண்டாகுமென்பது. 176

177. கைக்குடை யென்றூழ் கரக்கவற் ருயினும்
பொற்புடைத் தாதல் புகழ்பவால்—விற்பனையும்
பல்கிப் பெருகிவரும் பார்வைக்குப் பொல்லாதேற்
சில்கிப் புறக்கணிக்குஞ் சிர்த்து

(கு-ரை) என்றூழ்-வெயில். கரக்க-மறைக்க. வற்ருயினும்-வல்லதாயினும். ஆல், அரோ; அசை. பொல்லாதேல்-அழகில்லாததெனில். சில்கி: பெருகாது சுருங்கி. புறக்கணிக்

குஞ் சேர்த்து: குடைவிலேக்கு வாங்குவாராற் புறக்கணிக்கப் படுந் தன்மையுடையது. 177

178. புல்லனு மாகாப் புலேயர் மகளேனும்
மல்லல் வனப்பொளிரு மங்கையை—நல்ல
குலமைந்தர் கோடல் கடியற்பாற் றன்றென்
றுலக முரைப்பதூஉ முண்டு

(கு-ரை) மல்லல்வனப்பு-வளமான அழகு. மங்கை: மங் கைப் பருவத்தினள். கோடல்: மணஞ் செய்து கோடல். மைந்தர்-இளைஞர் 178

179. நினைதலொடு செய்கை நிகழா திருந்தும்
எனையுலகுஞ் செய்யு மியல்பு—முனைவனே
டெல்லா வுயிரு மினிதுண்டு மெஞ்சாமை
தொல்வாய்மைத் தூயதன் பொற்பு

(கு-ரை) எனையுலகும்-எல்லாவுலகங்களையும். முனைவன்- முதற்கடவுள். உயிர்: ஏனையுயிர். இனிது-துன்பமின்றி. உண்டும்-நுகர்ந்தும். எஞ்சாமை-சிறிதுங் குறையாமை: இருந்த வளவிலிருத்தல். தொல்வாய்மை: தோற்றக் கேடு களும் பிறதிரிபுகளுமில்லாத மெய்ப்பொருள். தூய: பிறி தொன்றனெடுந் தோய்தலில்லாத. இயல்பு, எஞ்சாமை இவ் விரண்டுந் தன்பொற்பென முடிக்க. 179

180. உண்ணும லுண்ண லுறங்கா துறங்குதல்
எண்ணும லெண்ண லெவையேனு—நண்ணுமல்
ஏவாமற் சாவாம லெல்லாந்தா னென்றுதல்
ஆவா வுயிர்க்கோ ரழகு

(கு-ரை) ஆவா: வியப்பிடைச் சொல். ஓரழகு-ஒப்பற்ற அழகு. தானேதானய்த் தனித்துச் சார்பின்றி நிற்கு முயிர்க் கென்க. 180

181. இம்மை மறுமை யெனையவும் பொன்றுமெனுந்
தன்மை துணிந்து தருக்கொழிந்து—புன்மை
பெறுநெஞ்ச மூழிப் பெரியோ னருள்கண்
டுறுமென்ப வோங்கு மழகு

*(கு-ரை) ஓங்குமழ குறுமென்ப வெனமாறுக. நெஞ்ச முறுமென்ப வென்க.* 181

182. நரியொடு நாயு முளைப்பப் பிணந்தின்
றெரியொடு பேயு மெழுந்து—திரிதரும்
ஈமப் புறங்காடு மின்னெழிற்றுப் பிஞ்ஞுகன்
யாமக்கூத் துண்ணு ஞமர்க்கு

*(கு-ரை) உளைப்ப-ஊளையிட. யாமம்-நள்ளிரவு. ஞமர்-நமர். ஞமர்க்கு ஈமப்புறங்காடும் இன்னெழிற்றென முடியும்.* 182

183. எழுதுதல் சொற்பொழி வாற்ற லிரண்டும்
பழுதில வாகிப் பயப்ப—முழுதுஞ்
செயலிற் றெரித்தல் சிறந்த தலைவ
ரியலிற் கவினுடைய தீங்கு

*(கு-ரை) பயப்ப-பயன் கொடுக்க. தலைவர்க்குரிய இயல்புகளுள் அழகுடையது. ஈங்கு-இவ்வுலகத்து.* 183

184. அஞ்சாமை மான மறங்காத்தன் மும்மையும்
எஞ்சாமை யாண்பெண் ணொழிலவ்வே—துஞ்சாமைச்
சீர்த்தி யுடம்புந் திருவு மறுமையும்
ஆர்த்தித் தெருளு மருண்ம்

(கு-ரை) எஞ்சாமை-குறையாதிருத்தல். அவ்வே: அம் மூன்றுமே. ஆர்த்தி-நுகர்வித்து. தெருள்-மெய்யுணர்வு. அருளுமென்பது அருண்ம் என நின்றது. 184

185. அடைக்கலங் காத்தோம்ப லஞ்சாமை யீதல்
உடைக்கடன் வஞ்சியா துய்த்தல்—படைக்குநூல்
கற்றூர்ப் பணிதல் கடைப்படு செற்றூர்ச்
செறுக்குந் திறலார்க் கழகு

(கு-ரை) அஞ்சாமையீதல்: எவ்வாற்றானும் அஞ்சினார்க் கிரங்கி அஞ்சாமையைக் கொடுத்தல்; என்றது அஞ்சற்க வெனத் தேற்றித் துணைநிற்றலாம். உய்த்தல்: கொடுத்தார்க் குக் கொண்டுபோய்க் கொடுத்தல். கடைப்படு செற்றூர்-கீழாய பகைவர். செறுக்குந் திறல்-அடக்கு மாற்றல். இந் நான்குந் திறலார்க் கழகென்க. 185

186. இன்ப மிழிவு பொருளிற் பொருளினுந்
துன்ப முழுதுந் துரப்பதறன்—இன்பம்
பொருள்கெடத் துவ்வாமை பொற்புப் பொருளும்
அருள்கெட வாக்காமை யற்று

(கு-ரை) உறுதிப் பொருண் மூன்றனுள்ளும் அறத்தி னிழிந்தது பொருள்; பொருளினிழிந்தது இன்பம்; அதனாற் பொருள் கெட இன்பந்துவ்வாமை அழகாகும். அறங்கெடப் பொருள் செய்யாமை. அற்று-அத்தன்மையது: அழகாகும். துவ்வாமை-நுகராமை. ஆக்காமை-செய்யாமை. அறத்தின் பொருட்டுப் பொருளை யிழத்தலும் பொருளின் பொருட்டு இன்பத்தையிழத்தலும் அறிவுடையார்க் கமைவனவாம்.

187. பெண்டீர்க் கிருவகைக் காவலும் பேணுங்
கண்டீர் கணவர்க் கழகன்றல்—எண்டீர்
துயரந் தலைத்தலைத் தோன்றுந் துயர்தீர்
துறவல்லா லில்லைத் துணை

(கு-ரை) இருவகைக் காவலாவன சிறைக்காவலும் நிறைக்காவலுமாம். தலைத்தலை-மேன்மேல். பெண்டீர்க் கென்பது தொடைநோக்கி நீட்டும்வழி நீட்டல். கண்டீர்: முன்னிலைப்பன்மை யசைச்சொல். ஆல்: அசை. 187

188. வேட்டங் கடுஞ்சொன் மிகுதெற்றஞ் சூதுபொரு
ளீட்டங்கட் காம மிவையேழுங்—கோட்டமி
லூர்த்தலைவர்க் கில்லாமை யூர்வாழு மாந்தருள
மீர்த்துவகை யீனு மெழில்

(கு-ரை) கோட்டம்-நடுவுநிலையின்றிக் கோடுதல். தெற்றம்-தண்டனை. 188

189. செவ்வி யமையாச் சிறுமியே யாயினுஞ்
செவ்வி புகுவழிச் செவ்வியளாய்—நவ்வி
மருள்விழியாற் கொங்கையான் மைந்தர்தம்முள்ளம்
இருள்புதையச் செய்யாமை யில்

(கு-ரை) செவ்வி யமையா-அழகு வாயாத. செவ்வி புகுவழி-பருவம்புக்க விடத்து. செவ்வியளாய்-அழகுடையவளாய். நவ்வி-மான். 189

190. மடிமை வெரூஉ வருபொருள் வேட்கை
அடிமைப் படுத்துவழூன் றுரும்—அடிமை
குடிமையு மெய்யணி கோலமுந் தேய்த்து
மிடிமையு ளாழ்த்தி விடும்

(கு-ரை) வெரூஉ-அச்சம். மெய்யணி கோலம்-உடம்பை அழகு செய்யு மொப்பனை. மிடிமை-வறுமை. 190

191. தமக்குப் பிறர்செய் தவறுகொண் டுள்வார்
சுமக்குங் கலக்கந் தொலையா—தமக்குநனி
செய்தபஃ றீங்கு மறக்கப் பயின்றூர்க்
கைதக வாற்ற நகும்

(கு-ரை) பஃறீங்கு-பலதீங்கு. ஐதக-அழகுதக. ஆற்ற-மிக. நகும்-மகிழும். நகுமென்பதற்கு உள்ளந் தோன்றுவெழு வாய். 191

192. எண்ண முரைகடந் தியாதுந் திரிபின்றி
உண்ண லுறங்க லொழிந்தொளிர்—திண்ணமுறுந்
தன்னழகே நோக்கி யயரு முயிரழகிற்
கென்னழகு மில்லை யிணை

(கு-ரை) திண்ணமுறும்-உண்மையாகின்ற. அயருமுயிர்; முன்னிலையறிவு கெடுந்தனியுயிர். என்னழகும்-அழகியாதும். இணையாதலில்லை. 192

193. மங்கைப் பருவ வனப்பொன்று காதலன்
அங்கைபற் றுங்கா லழகொன்று—நங்கை
வயிறுவாய்க் குங்கால் வருமழகொன் றொன்று
செயிரறுசேய்ப் பேணுந் திரு

(கு-ரை) அங்கைபற்றல்: வரைந்து கோடல். அது: வனப்பு. வயிறுவாய்த்தல்-மகவுகருக்கொள்ளுதல். செயிர்-குற்றம். சேய்-மகவு. பேணல்-பாதுகாத்து வளர்த்தல். திரு-அழகு. திருவேறு. பேணுங்கால் உண்டாகுந்திரு. 193

194. அறிவு மடக்கமு மற்ற வெறியர்
அறிவரை யெள்ளி யறையுஞ்—சிறியசொல்
ஆய்வாளர் நோன்றுள் ளமைதி வழுவாது
வாய்வாளா நிற்றல் வனப்பு

(கு-ரை) வெறி-மையல். சிறியசொல்: பழிச்சொல். சிறிய சொல்லை நோன்று. ஆய்வாளர்: ஊழ்வினை முதலிய வற்றை ஆராய்தலுடையவர். நோன்று-பொறுத்து. வாய்

*வாளா நிற்றல்: யாதுமெதிர்த்துப் பழித்துச் சொல்லாது நிற்றல்.* **194**

195. பெரியர்தம் பீடுடைமை பேணுவார் மாட்டே
அரியராய்ச் செல்லலு மாங்க—உரியர்
எழுந்துவர வேற்றங் கிருகையுங் கூப்பித்
தொழுந்தகவுந் தூய வழகு

*(கு-ரை) பீடு-பெருமை. ஆங்க-அப்பொழுது. தகவு-தன்மை.* **195**

196. காதலொடு காவன் மனைமாண்பு கற்பென
ஓதலுறு நாற்பண்பு மொன்றற்கொன்—றுதலுடைப்
பொற்புப் பயக்கு முறையாற் புகழோடே
இற்புக்க நல்லார்க் கெனல்

*(கு-ரை) காதல்-அன்பு. காவல்: தம்முள்ளத்தைத் தடுத்து நிறுத்தல்: மனைமாண்பு: இல்லறத்துக்கு வேண்டும் நற்பண்பு நற்செயல்களெல்லாம் நன்குடைமை. இற்பக்க நல்லார்க்கு நாற்பண்பும் புகழோடே முறையான் ஒன்றற் கொன்றுதலுடைப் பொற்புப் பயக்குமெனல் எனக் கூட்டுக. ஆதல்-உயர்தல். உடை-உடைய. எனல்-என்க.* **196**

197. ஏடு பொறிக்கு மெழிற்புக ழென்னும்
பாடு பெறும்பொற் பணிமுன்னர்—மாடு
மிகவுடையார் பூணும் வெறும்பொற் பணியோ
நகவுறலா னென்ப நகை

*(கு-ரை) பொறித்தல்-எழுதுதல். பாடு-பெருமை. பொற்பணி-பொன்னணிகலம். மாடு-செல்வம். நக இகழ்ந்து சிரிக்க. நகவுறலான் நகையென்ப வெனமாறுக. நகவுறலான்-நகப்படுதலான். அணிகலத்துக்கு நகையென்*

னும் பெயர் இகழ்ந்து நகப்படுதலான் வந்ததென்றது தற் குறிப்பேற்றவணி.

நகையென்ப-நகையென்று பெயர் சொல்லுவர். ஓகா ரம் இழிவு சிறப்போகாரம். 197

198. அழகொடு தூய்மை யமைவுழி யெல்லாம்
விழவொடு மேவுவர் விண்ணோர்—அழகொடு
தூய்மையரா யாண்டாண்டுத் துன்னித் தொழுதெழுதல்
வாய்மைகெழு மாந்தர் வழக்கு

(கு-ரை) அமைவுழி-அமையுமிடம். கெழு-உடைய.

199. பெரும்பொழு தாறும் பிழையாது சார
வருந்தொறும் வையமெனு மாதர்-விருந்தயரப்
பல்வேறு கோலம் படைத்தியற் பாவலர்முன்
னல்வீறு காட்டி நகும்

(கு-ரை) நகும்-நகுவள். மாதர் நகுமென வியையும். மாதரென்பது காதலையுணர்த்துமுரிச் சொல்; இது பெயர்ச் சொல்லாய்ப் பெண்பாலொருமை யுணர நின்றது. வையம்-மண்ணகம். அயர-கொண்டாட. வீறு: தனிப்பெருமை.

200. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மொவ்வாமே
அப்பொருண் மெய்ப்பொரு ளாகுமா—றெப்பரிசென்
றுட்பெய் துணர்ந்துநன் குண்மை துணிதலே
ஒட்ப முடைமைக் கழகு

(கு-ரை) ஒவ்வாமே-உடன்படாமல். எப்பரிசு-எப்படி. உட்பெய்து-உள்ளத்தே வைத்து. நன்குணர்ந்தென மாறுக. நன்குணர்தல்: ஐயந்திரிபின்றி அளவைகளானுனர்தல். ஒட்பம்-நுண்ணறிவு. 200

201. ஒய்யா விழும முறுமேனும் யாமிதுமுற்
செய்யா துறூஅ தெனத்தெருண்டு—நையாராய்
நொய்யாரை வெய்யாரை நோவாது நோன்றுநலஞ்
செய்யாத செய்யாமை பொற்பு

*(கு-ரை)* ஒய்யா-போக்கப்படாத. விழுமம்-துன்பம். நையார்-வருந்தாதாராய். நொய்யார்-கீழ்மக்கள். வெய்யார்-கொடியார். நொய்யாரை வெய்யாரையென்பன ஒரு பொருளிருபெயர். நோவாது-வெறுமல். நோன்று-பொறுத்து. நலஞ் செய்யாதவற்றைச் செய்யாமையாவது: தீமை செய்யாது நலஞ் செய்தலாம். 201

202. ஒருவர்மற் றம்மு ளொழுக்க மடியாய்
மருவுமணம் வாடா வனப்பாம்—பொருளழ
கின்ப முறவுடைமை யெண்ணி வரையுமணந்
துன்பம் பெரிதுந் தரும்

*(கு-ரை)* ஒருவர்: ஓராடவனும் ஒரு பெண்டாட்டியும். மருவுதல்; மணம்புணர்தல். வாடா வனப்பாம்-குறையாத அழகு பயப்பதாம். வரைவது- மணஞ் செய்தல். பொருண் முதலிய நான்கும் உம்மைத்தொகை. மன்: அசை. 202

203. நாட்டுத் தலைவரொடு நாட்டுக் குடிகளிடைக்
கூட்டும் வழக்கெனினுங் கோடாது—கேட்டு
முறைநாட்டும் வாய்மை முதுமக்கண் மன்றங்
கறைவீட்டுங் கொற்றக் கவின்

*(கு-ரை)* கேட்டுக் கோடாது முறை நாட்டும் வாய்மை-இருசார் வழக்குங் கேட்டு ஒருபாற் கோடாது முறைமையை நிலைபெறுத்தும் உண்மைச் சொல். கறைவீட்டும்-குற்றங் களைக் கெடுக்கும். கொற்றம்-அதிகாரம். கொற்றக்கவின், கொற்றத்துக்கு அழகு செய்வதாம். 203

204. அழகற் கழகு வியவாமை தன்னைப்
பழகற் கழகென்ப பண்பு—கழகக்
கவற்றுற் கவின்போலக் கைத்துடையான் வாழ்க்கை
இவற்று னிரியு மெழில்

(கு-ரை) பழகல்: ஒருவரோடொருவர் கண்டும் உரையாடியும் உடனிருந்தும் பயிலுதல். பண்பு: அவரவரியல் பறிந் தொத்தொழுகுதல். கழகம்-கவறுடும். கைத்து-கைப்பொருள். கவினழியுமாறுபோல. இவற்று-இவறுதல். இவறுதல்: பொருளாற் செய்வன செய்யாது பொருள் பொதியும் பற்றுள்ளம். இரியும்-கெடும். எழிலிரியும். 204

205. வாய்மை பயிற்சி மருத்துவ நூற்றேர்வு
தூய்மை துணிவு தொகுமருந்து—தாய்மை
வரைந்த பொழுதிடனுள் வன்கருவி மாட்சி
புரைந்த மருத்துவர்தம் பொற்பு

(கு-ரை) பயிற்சி: நோய்தீர்க்கும் பழக்கமான தொழில். தூய்மை: அழுக்கும் நோயுமில்லாமை. துணிவு: நோயாளியினையும் அதற்குரிய மருந்தையும் அதனைக் கையாளுமுறையையும் இன்னவெனத் துணியுந் துணிவு. தொகு மருந்து: மருந்தெல்லாங் குறையாது கையிருப்பிலிருத்தல். தாய்மை: நோயாளியின்பாற் றாய்போலப் பரிவுகொள்ளுந் தன்மை. வரைந்த பொழுதிடம்: மருத்துவஞ் செய்தற் கெனப் பொழுதும் இடனும் வரையறுத்துக்கொள்ளுதல். ஆள்: மருத்துப் பணி செய்யும் உதவியாளர். கருவிமாட்சி: மருத்துவத்திற்கு வேண்டப்படுங் கருவிகள் குறையாது நல்லனவாய் வாய்த்திருத்தல். புரைந்த-உயர்ந்த. 205

206. மருத்துவர் சொல்லும் வழிநிற்ற னோய்ப்பாற்
கருத்துணரத் தேற்றல்செய் காட்சி—வருத்தம்
பொறுத்தல் பணிவு பொருட்கொடை நன்றி
யிறுத்தல் பிணியர்க் கெழில்

(கு-ரை) தேற்றல்செய் காட்சி-தெளிவிக்கும் அறிவு; மருத்துவர்க்குத் தந்நோயினிலைமையை உணருமாறு தெளிவிக்கு மறிவென்றவாறு. நன்றியிறுத்தல்-நன்றி செலுத்தல். பிணியர்-பிணியுடையார். வருத்தம் பொறுத்தல்; மருத்துத் துன்பம் பொறுத்தல். 206

207. வாளா வதிவோர்க்கு வன்குறும்பு செய்ம்மூளைக்
கோளா றுடைய கொடியோரை—மீளா
இடுக்கட் படுத்துக் கெடுத்த லெறுழ்த்தோ
ளடுக்க லணங்கி னழகு

(கு-ரை) வாளா; பிறர்க்கிடையூறு செய்யாது. வன்குறும்பு-வலிந்து தீமை செய்யுங் குறும்பு. செய்ம் மூளை: வினைத்தொகை. எறுழ்-வலிமை. தோளடுக்கல்-தோளாகிய மலையையுடைய. அணங்கு-தெய்வம் என்றது கொற்றவை முதலாய தெய்வமென்றவாறு. அடுக்கலணங்கு; முருகக் கடவுளுமாம். 207

208. ஆடவர்க்கு வாழ்க்கைவினை யாக்கமு மூக்கமும்
நீடளித்துக் காத்து நிலவுமுயிர்—தோடவிழுங்
கூந்தலந் தோகைக் குயிற்குரற் றேமொழி
யேந்தெழிலா ரல்லரோ வீண்டு

(கு-ரை) ஆக்கம்-மேன்மேலுயர்வு. நீடு-நெடுங்காலம்; தொன்று தொட்டென்றவாறு. தோடு-மலர். ஏந்தெழில்-உயர்ந்த அழகு. ஒருவர்க்குத் தாம் வேண்டும் பொருளின் மிக்கதில்லையாகலிற் பெண்டிரெல்லாம் ஏந்தெழிலுடையவராகவேயிருப்பர் அவ்வவாடவர்க்கு. ஆடவர்க் குயிர் ஏந்தெழிலாரல்லரோவென்க. ஈண்டு, இவ்வுலகில். 208

209. உள்ளம் விழைவுறுவ தெத்தகைய தொன்றெனினும்
எள்ள லரிய வெழிலுடைத்தாங்—கொள்ளை
யெழிலுடைத்தே யாய தெனினுமஃ தின்றே
லிழிவுடைத்தே யாகு மிதற்கு

*(கு-ரை)* *விழைவுறுவது-விருப்பமுறுவது. எத்தகையது-எவ்வளவு பொல்லாமையுடையது. கொள்ளை-மிகுதி. அஃது: அவ்விழைவு. இழிவு: எழிலில்லாமை. இதற்கு; இவ்வுள்ளத்திற்கு* **209**

**210. உள்ளங் கவர வுலகுக் கழகுதரும்**
**வள்ள லியல்புடையார் மாதரார்—மெள்ள**
**நடைபயிலு மானனைய நல்லா ரிலரே**
**லுடையதுகொல் பொற்பிவ் வுலகு**

*(கு-ரை) நடைபயிலும்: நடைபழகுவதுபோல நடக்கின்ற. மருண்டபார்வையால்மான் போன்ற நல்லார். நல்லார்-மகளிர். இவ்வுலகு பொற்புடையது கொல் எனக் கொல்லென்பது ஐயக் குறிப்பின்மேல் வந்த இடைச்சொல்.*

*மெள்ள: மரூஉ:*

*நல்லாரிலரேல் உலகு வேறுடைய அழகும் உடையதாகுங் கொல்லோவென்றவாறு.*

*உலகுக்கு அழகினை வழங்கலின் மாதரார் வள்ளன்மையுடையாரெனக் கூறப்பட்டார்.* **210**

**211. கடவுள்பாற் காதலுங் கல்வியும் போற்ற**
**லடர்வுறுங் காம மடர்க்கக்—கடவதா**
**மாதலி னவ்வாற்றுற் காமத்தை யட்டார்க்கே**
**யாதலுண் டாண்மை யழகு**

*(கு-ரை) போற்றல்: பாதுகாத்துப் பெருக்குதல். அடர்வுறுதல்-மண்டி நெருங்குதல். அடர்த்தல்-மண்டி நெருக்குதல். கடவது-உரியது. அட்டார்-வென்றவர். ஆதலுண்டு-உண்டாதலுண்டு.* **211**

212. பிரிந்ததன் கன்றினைப் பெற்றெளிரும் பெற்றம்
பிரிந்ததன் பிள்ளையைப் பெற்றுள்—பிரிந்ததன்
காதற் கொழுநனைக் கண்டபெண் டாட்டியிவர்க்
கோதத் தகுமழகொன் றுண்டு

*(கு-ரை) பெற்றம்-நாகு. அஃறிணையு முயர்திணையு மெண்ணி மிகுதிபற்றி இவர்க்கென உயர்திணையான் முடிந்தன. பிறவழகுகளோடுள்ளதாகலின் அழகொன்றுண் டெனப்பட்டது.* 212

213. மக்களெலா மன்னரு மாதல் வினையெலாந்
தொக்க பொறியிற் றுனைந்தியலல்—ஒக்க
உலகுகலந் தொன்றுத லும்பரோ டொத்த
லிலகுமிவ் வூழி யெழில்

*(கு-ரை) மக்கள்: குடிமக்கள். வினை: தொழின் முயற்சி. பொறி: விசைக் கருவிகள். துனைந்து-மிக விரைந்து. இயலல்-நடைபெறுதல். ஒக்கக் கலந்தொன்று தல்-முழுது மொப்பக் கூடி ஒரு கூட்டமாதல். உம்பர்-வானுலகு. உலகு உம்பரோடொத்தலாவது உலகத்து மக்கள் வேண்டும் நுகர்ச்சிகளை உடனே நினைவிற் பெற்று நுகரும் வானவர்போல வியத்தகு கருவிகளாற் பெற்று நுகர்தல்.*

*உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை; குடிகளா யிருத்தலேயன்றி மன்னருமாயிருத்தலெனப் பொருள்படுதலின்.* 213

214. குடம்பை புனையுங் குருவி குளவி
யுடம்பு சிறிய வுயிரு—மடம்படினு
நல்லணி நச்சி நவிலுங் கலைத்திறம்
வல்லன வோரொன்று வாய்த்து

(கு-ரை) குடம்பை-கூடு. புனையும்-அழகுபடச் செய்யும். உடம்பு சிறிய வுயிராகிய குருவியுங் குளவியு முதலாயின வென்க. மடம்படினும்-அறியாமைப் பட்டிருப்பினும். நல்லணி-நல்ல அழகு. நவிலுங் கலைத்திறம்-பயிலுங் கலைவகை.

நவிலுங் கலைத்திறம் ஒரொன்று வாய்த்து வல்லனவாயுள்ளன. ஒரொன்று-ஒவ்வொன்று. 214

215. உண்ட துலந்து பசித்தல் பசித்துணல்
உண்ட துரன்மிகூஉ மூட்டமா—உண்ட
தளவின் மிகாமையொடு தூய்தாதல் யாக்கை
வளர்வும் வனப்புந் தரும்

(கு-ரை) உலந்து-அற்று: உடற்சாருக மாறிய தொழிந்த கோதுகள் எருவுஞ் சிறுநீர் முதலியனவாகக் கழிந்து வயிற்றில் இல்லையாய் என்றவாறு. உரம்: உடற்கு வேண்டு முணவின் கூறுகள். மிகூஉம்-மிகுவிக்கும்.

216. ஒளியுடைய தற்கே திருவுடைமை யொக்கும்
ஒளியே பொருளுண்மை காட்டும்—ஒளியுயிர்தா
னின்றேற் பிறிதுண்மை யென்னை பெறுமாறிஃ
தொன்றேற் திருமாண் புடைத்து

(கு-ரை) திரு: அழகின்வீறு. பொருளுண்மை-பொருளிருத்தல். பிறிதுண்மை-ஏனைப் பொருளிருத்தல். பெறுமாறு என்னை?-பெறுதலெங்ஙனம்? என்னையென்னும் வினை வினைக் குறிப்பு ஈண்டின்மைக் குறிப்பின்மேனின்றது. இது: இவ்வொளியுயிர்தான். திருமாண்பு: நிரம்பிய வியற்கையழகு. 216

217. இயல்பெழி லாகி யெழில்கண் டுவக்கு
மியல்பிறு லின்னுயி ரெல்லா—மியல்பிற்
கலைவிருந்து கண்டு கவினுலகு செய்யு
நிலையிருந்து போதருமே நீடு

*(கு-ரை)* இயல்பு எழிலாகி-எழிலே தன்றன்மையாகி. கலைவிருந்து: கட்டிடக்கலை, ஓவியக் கலை, இசைக் கலை, கூத்துக் கலை முதலிய புதுப் புதுக் கலைகளே. கண்டு-செய்து. கவினுலகு செய்யும் நிலைமை-உலகை அழகு செய்யு மியல்பு. இருந்துபோதரும்-இருந்து வருகின்றது. நீடு-நெடுங்காலம். நெடுங்காலமிருந்து வருகின்றதென்க.

218. அகவை யிருபத்தைந் தாகாத முன்னர்
அகவை பதிற்றுநான் கப்பான்—மகவுதரு
மெய்யுறு கூட்டம் விழைத லழகன்றன்
மையறு காட்சி மகற்கு

*(கு-ரை)* அகவை: வாழ்நாள் யாண்டு. பதிற்று நான்கு-நாற்பது. முன்னருமப்பாலுமென உம்மைத் தொகையாக்குக. கூட்டம்-புணர்ச்சி. மகவுதரு மெய்யுறு கூட்டம்-இணைவிழைச்சு. மையறு காட்சி-குற்றமற்ற தெளிவுணர்ச்சி. குற்றம்: அறியாமை திரிபையமென்பன. எதிர்வின்கண் நோயும் உடற்றளர்வும் முயற்சி குன்றலும் மக்களுதவி நேராமையு மெய்துதலுணர்ந்தொழுகுவான் மையறு காட்சி மகனெனப்பட்டான். ஆல்: அசை. 218

219. குட்டியுங் கன்று மிளமைமேற் கொள்ளினும்
ஒட்டிய வாற்று னுரைப்பமற்-றெட்டிய
இன்பஞ் சுவையோ டழகு நலனுமொன்
றென்ப வெனினு மது

(கு-ரை) குட்டியுங் கன்றுமென்பன ஈண்டுப் பொரு ளுணர்த்தாது தம்மையுணர்த்தி நின்றன. குட்டியுங் கன்று மென்னும் பெயர்ச் சொற்களென்றவாறு. ஒட்டிய வாற்றன்-உடன்பட்டவாற்றன். உலகம் வழங்கு மரபு பற்றியென்பது. குரங்கின் குட்டியைக் குரங்கின் கன் றென்னுமையும் ஆவின் கன்றினை ஆவின் குட்டி யென்னு மையு மரபு. அதுவென்பது அங்ஙனம் ஒட்டிய வாற்ற னுரைப்ப வென்றவாறு. ஆல்: அசை. 219

220. மனைபுல மற்றும் வனப்புடைய வாகப்
புனையுபு பொற்பு நுகர்த்தல்—நினையப்
பிறர்க்கு வனப்புப் பிறப்பித்த லின்ன
சிறக்குந் திருமா ணறன்

(கு-ரை) மற்றுப்புலமும்-வேறிடங்களும். மனையை யும் வேறிடங்களையும் வனப்புடையன வாகப் புனைந்து அவற்றி னழகைக் காணும் பிறர்நுகரச் செய்தலென்க, நுகர்தலின் பிறவினை நுகர்த்தல்; நுகர்வித்தலாம். புணர் தல் புணர்த்தலாமாறு காண்க. நினைய; மறவாது நினைத்துமகிழும்படி.

பிறர்க்குக் கோலஞ்செய்து அழகுண்டாக்குதலென்க, இன்ன-இவை. மாண்-மாட்சிமைப்பட்ட. 220

221. வாழ விடுவோரே வாழ்வாரென் றோராத
வேழை யுலக மெனுங்கடவுட்—கூழழகு
புல்லெனப் போந்தபுண் புள்ளூர்தி தன்புண்ணை
யொல்லென வீர்ந்தாற்று மோர்ந்து

(கு-ரை) ஏழை உலகமென்னுங் கடவுட்குப் போந்த புண்ணெனவியையும், ஊழழகு-முதிர்ந்த அழகு

புல்லென-பொலிவழிய, போந்த-வந்த; உண்டான புண்ணென்க. புள்ளூர்தி; உலகமெனுமக் கடவுள், தன் புண்ணை; தன்புண்ணாகிய அவ்வேழையை. ஏழை-அறிவில்லாதான். ஒல்லென-விரைய. ஈர்ந்தாற்றும்-அறுத்து ஆற்றுவான். 221

**222.** நாட்பட்ட நண்பர்செய் குற்றமு மாண்டவ
ருட்பட்டார்க் கித்தரு மல்லலும்—கோட்பட்ட
நன்றுசெய் தார்செய்ந் நவையு முனிவின்றி
யென்றுமேற் றுள்ளு மெழில்

(கு-றை) நாட்பட்ட-பழமையான. செய்: நட்புரிமையாற் செய்கின்ற. கோட்பட்ட-கொள்ளப்பட்ட; நவை-குற்றம்; துன்பமுமாம். முனிவின்றி-வெறுப்பின்றி. எழில்: எழிலுடையன. 222

**223.** ஒருவன்செய் யோவியமோ வொண்பொருநுக் கூத்தோ
பொருள்காட்டும் பாட்டோ புனைப்போ—திருவுள
மெண்ணுவதே கொல்லோ விறைவன் கனவுகொலோ
வெண்ணரிய ஞால மிவை

(கு-ரை) ஒருவன்-ஒப்பில்லாதவிறைவன். ஒள்ளிய பொருநுக் கூத்து-நல்ல நாடகக்கூத்து. பொருள்: பாட்டின் பொருள். தன்பொருளைப் பாடுவோரெதிரே புலனுகுமாறும் பாடுவோர்க்கு நுகர்ச்சியுண்டாகுமாறும் புனைந்து செய்யப்படும் பாட்டென்க, திருவுளம்: இறைவனுள்ளம். எண்ணுவது: எண்ணமிட்டுக் கொண்டிருக்குமெண்ணம்.

எண்ணரிய ஞாலமிவை ஓவியமோ? கூத்தோ? புனைப்போ? பாட்டோ? எண்ணமோ? கனவோ? என அளைமறிபாப்புப் பொருள் கோள்வந்தது.

ஓகாரமெல்லாம் ஐயவோகாரம். கொல்; அசை.

224 கோயில் களந்துறை மூன்றுங் குறிக்கொண்டு
சேயிடை தோறுஞ் செலவுகோள்—மாயிரு
ஞாலத் தவர்க்கு நறுந்தூய்மை நல்லுணர்வு
சால வனப்புந் தரும்

*(கு-ரை) களம்: நிலமருங்கு. துறை: புது நன்னீராடல். மூன்றனையுஞ் சிறப்புடைமையாற் குறிக்கொண்டென விரிக்க. எனவே கோயிற்சிறப்புக் களச்சிறப்புத் துறைச் சிறப்பு மூன்றனையும் இலக்காகக் கொண்டென்றவாறு. இலக்காகக் கோடலாவன முறையே தொழுதலும் வதிதலும் புனலாடலுமாம்.*

*களத்திற்குச் சிறப்புத் திருவுடையார் பிறத்தலும் வாழ்தலும் உடனீத்தலு மெய்தியதனையது,*

*துறைக்குச் சிறப்புத் தூய்மையும் வற்றாமையும் நறுஞ்சுவையும் நோய்போக்குதலுமுடைய நன்னீருடைமையினையது.*

*நறுந் தூய்மை-நல்ல தூய்மை: உடற்றூய்மை, உளத் தூய்மை, உயிர்த்தூய்மை யென்பன.*

*வனப்பு மிகுதியாவன: உடலழகு, உளனழகு, உயிரழகென்பன. சாலத்தருமென்க.* 224

225. தன்னுடைய வுள்ளத்துத் தங்குங் கடவுளை
யுன்னுதற் கேற்று லொருவற்கு—முன்னுறு
மொப்பனை வார்ப்பின்க ணும்ப ரருளழகு
மெய்ப்படு மன்றேல் வெறிது

*(கு-ரை) உன்னுதல்-நினைவு கூர்தல். ஏற்றல்-தக்க வாறுயின். முன்னுறும்-எதிர்ப்படும். ஒப்பினைவார்ப்பு:*

கல்லு முதலியவற்றில் வார்க்குங் கடவுளர்கோலம். உம்பர்-கடவுளர். மெய்ப்படும்-வெளிப்படும்: குறிப்புத் தோன்றுதல் அவற்கல்லாற் பிறர்க்கு உம்பருளழ கின்மையின் ஒப்பனைவார்ப்பு வெறிதாகும். ஏற்றால்மெய்ப் படுமெனமுடியும். அன்றேல்: ஏலாதாயின். 225

**226. உண்மை யுணர்வு களிமகிழ் தான்செம்மை**
**யொண்மை யொருமை யுலப்பின்மை—வண்மை**
**முதுதொன்மை தூய்மை முழுமை நறுமை**
**அதுவன்றி யில்லை யழகு**

(கு-ரை) உண்மை முதல் அதுவென்ப தீறாக எடுத்தோதப்பட்ட பெயர் பதினொன்கும் ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி. இவை பதினொன்கும் உயர்திணை மருங்கினிலையினவாயினும் அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்.

களிமகிழ்: மீமிசைச்சொல்; பெரும்பேரின்பமென்பது பொருள். செம்மை-திரிபின்மை. தானென்பது பெயர். ஒண்மை: தன்னையும் பிறவற்றையு மெல்லாம் விளக்கு மொளித்தன்மை. ஒருமை-இரண்டின்மை. உலப்பின்மை-முடிவின்மை; அளவின்மை. வண்மை-பெருக்கம்; அவா வாமை யென்னும் விழுச்செல்வமுமாம். முதுதொன்மை: தொடக்கமுமொடுக்கமு மின்மை. தூய்மை: கலப்பின்மை. முழுமை: எஞ்சாமை; நிறைவு. நறுமை-நன்மை. 226

**227. எல்லா வுயிரினையுந் தன்னுள்ளுந் தன்னையும்**
**எல்லா வுயிருள்ளுங் காணுமவன்—எல்லா**
**வுயிருமொன் றுய்நின்ற வுள்பொருளே தானாய்ச்**
**செயிரறுதன் செவ்வி யுறும்.**

(கு-ரை) உள்பொருள்,-உண்மைப்பொருள். செயிர்-குற்றம்: அறியாமை, அவா, வினையெனவிம் மூன்றுமாம்.

செயிரற்றதன்னென்க. செவ்வி-அழகு. உறும்-மிகும்: முன்னையினு மெல்லையில்லாதவாறுமிக்குத் தோன்று மென்றவாறு 227

228. இளமை முதுமை திணைபா லிடம்போழ்
தளவை முயற்சிபண் பாற்ற-றளர்வுநிலை
துன்பமொ டின்பந் துயில்விழிப் பைம்புலனின்
முன்புற நோக்க லழகு.

(கு-ரை) திணை: உயர்திணை. பால்: ஆண்பால், பெண்பால், பலர்பால். இடம்: தன்மை, முன்னிலை, படர்க்கை. போழ்து: இறப்பு நிகழ்வெதிர்வு' வாழ்நாள் முதலாயவை. அளவை: நெடுமை, குறுமை, பருமை ஒல்லி, திட்பம், நொய்ம்மை யென்பன. பண்பு: ஒண்மை ஆண்மை, மைம்மை யென்னுமிம்மும்மைப் பாற்படு வனவும் புலனுதற்றன்மையுமாம். ஆற்றல்: வன்மை' இயலாமை யென்பன.

விழிப்பென்பதிறுதியாக நின்ற பெயர்ச்சொற்கள் துன்பமொன்றொழியச் செவ்வெண்ணுயின. ஒடு: எண்ணொடு. செவ்வெண ஒடுவெண்ணை இடையிட்டு நின்றது.

எண்ணுத்தொடர் ஒரு சொன்னீர்மைப்பட்டு முன் புறநோக்க லென்பதற்குச் செயப்படுபொருளுணர நின்றது.

ஐம்புலனின்,-ஐம்புலன்போல; ஐம்புலனைப்போல வெனப்பொருள்படுதலின் இரண்டனுருபு ஐந்தனுருபேற்றுத் தொக்குநின்றது. இஃதுருபுரு பேற்றலாம். உருபுரு பேற்பழி இரண்டுருபுமுடனில்லாது முன்னது தொக்கு நிற்றன் மரபு.

ஒருவன் ஐம்புலனை அவற்றுக்குத்தான் வேறாக நின்று அவைதன்னெதிர்தோன்றுவன்வாகக் காண்டல் போலத்

தன் இளமை முதலாயினவற்றையும் அவற்றுக்குத்தான் வேறாகநின்று அவைதன் னெதிர் தோன்றுவனவாகக் கண்டு திரிபின்றியிருத்தலழகென்றவாறு. முன்புற நின்றது. 228

229. இயற்கையோ டேய்வுறு மின்பமோ டேயு
நயக்குறு வாழ்வு நடந்து—பயக்கப்
படிமுறையி னேறிப் பணியாற்றி மெய்ம்மை
அடிமுறையி னுய்த லழகு.

(கு-ரை) ஏய்தல்-பொருந்துதல். நயக்குறு வாழ்வு: உயிரான்விரும்பப்படும் வாழ்வு. நடந்து: தொடர்ந்து நடைபெற்று. பயக்க-பயனீனுமாறு.

படிமுறையினேறிப் பணியாற்றலாவது ஒழுக்கம், உழைப்பு, நோற்பு, மெய்யுணர் வென முறையான் மேன் மேலேறிச் சென்றிறைவன்பணி நடாத்துதலாம்.

மெய்ம்மை அடிமுறையினுய்தலாவது அளவைகளாற் பொருளுண்மை பெற்றுப் பொதுவியல் சிறப்பியல்களாற் பொருளாமாறுணர்ந்து அப்பொருளைப் பெறுதற்கு வேண்டுஞ் செய்திமுறைமைகளையாராய்ந்து அம்முறை யாற் பெற்றபொருளின் விளைவுகளை நுகருமாறு துணிந்து கடைப்பிடித்தல். 229

230. கேட்டலுங் கேட்ட கிளர்வுற்று நாடலும்
நாட்டமுற் றுறுது நற்றுணிவு-கூட்டலும்
வேட்ட துணிவின் விளைவுறலு மிம்முறையாற்
றேட்டந் தெவுத லழகு

(கு-ரை) கேட்டல்: நல்லாசிரியன்பான் மெய்ப்பொரு ளைக் கேட்டல். கேட்ட-கேட்டனவற்றை, நாடல்-ஆராய்

தல். நாட்டம்-ஆராய்ச்சி. ஆனது: அவ்வளவினமையாது. துணிவு கூட்டல்-துணிவு கூடச் செய்தல். வேட்ட-அவாவிய. விளைவுறல்-பயனுகர்தல். தேட்டம்: தேடற்பால மெய்ப்பொருளை. தெவுதல்-கொள்ளுதல். "தெவுக்கொளற் பொருட்டே" என்பது தொல்காப்பியன். (சொல். உரி.) 230

231. கிள்ளை குயில்பூவை கேழ்கிளர் யாழ்குழல்
பிள்ளைப் பொருளிளம் பெண்மணி—வெள்ளை
வளைநற்பண் வல்லார் மழலையிசை யின்பம்
விளைபொற்பு மேவியன மிக்கு

(கு-ரை) மழலையிசை யென்பது கிள்ளை மழலையிசை யென்றாற்போலத் தனித் தனிச் சென்றியையும். இனிய இசையெல்லாம் மழலையிசை யெனப்படும்.

பூவை-நாகணவாய்ப்புள். கேழ்கிளர்-நிறங்கிளரும். குழல்: புல்லாங்குழலும் வேய்ங்குழலும். பிள்ளைப் பொருள்-மக்களாகிய பொருள்.

பெண்மணி: ஒருபொருளுமாம் இருபொருளுமாம். இரு பொருளாகக் கொள்ளுங்கால் மணி அடிக்கும் வெண் கல மணி. வளை-சங்கு.

நற்பண்வல்லார்: மிடற்றுப் பாடலர்.

இன்பம் விளைக்கும் பொற்பென்க.

மிக்கு இன்பம் விளைபொற்பு மேவியனவென மாறுக.

232. என்பு குருதிதோன் மூளை நரம்பிழிவு
முன்பு மறைய முனியாமே—துன்பு
விடக்கொளுயிர் வாழ்வென்னக் காட்டலான் மெய்யன்
புடற்கழகு செய்த லுடைத்து

(கு-ரை) இழிவு: இழிகின்ற எருவுஞ் சிறுநீரும் இழிவான பிறவுமாம். முன்பு-எதிரே. மறைய-புலனுகா தொழிய. முனியாமே-வெறுமல். காண்பார் முனியாமே மறையவென மாறுக. உயிர்வாழ்வு: உயிர்வாழுமிடம்: உயிர்நிலே. என்ன-என்றுணரும்படி 232

233. கல்லார்க்குங் கற்ருர்க்குஞ் செல்வர்க்கு மேனேர்க்கு
மெல்லார்க்கு மீனு மழகெனினும்—இல்லார்
பழகுநற் செல்வர் பணிவுடைமை யன்ருர்க்
கழகின்மே லாய வழகு

(கு-ரை) ஏனேர்: வறியவர். பணிவுடைமை எல்லார்க்கும் அழகீனுமெனினுமென்க. இல்லார்-வறியர்; குடிப்பிறப்புடையாரெனினுமாம். 233

234. இல்ல மெரிப்பதுதா னின்றியமை யாமையிற்
ருெல்லே வினேயோ துயரெனினும்—நல்ல
உணவாக்கி யொட்ப முதவற்கு வேண்டித்
தணவாத பொற்பிற்ருத் தான்

(கு-ரை) இல்லம்-மனே. எரிப்பது-எரிக்கும் நெருப்பு. இன்றியமையாமையின்-இன்றியமையாமைபோல. இன்றியமையாமையினுலெனினுமாம்; உணவாக்குதற்கும் இருள்போக்குமொளி கொடுத்தற்கு மின்றியமையாமையினென்க. தொல்லே-பழமை. வினே: வினேமுயற்சி. உணவு-நுகர்ச்சி. ஒட்பம்: வீடுபேற்றுணர்வு. வேண்டி: இன்றியமையாமையின். தணவாத-நீங்காத. நெருப்பு இல்லமெரித்துக் கெடுக்குமியல்பினதாயினும் உணவாக்குதற்கும் ஒளி கொடுத்தற்கும் வேண்டப்படுமாறுபோல வினே துயரெனினும் நுகர்ச்சிகளேயுண்டாக்கி மெய்யுணர்வு கொடுத்தற்கு வேண்டப்படுமென்க. அதனுல் அது விட்டு நீங்காது செய்யப்படுதற் கமையுங் கவர்ச்சியுடையதென்றவாறு 234

235. வயற்கழகு நெல்லுங் கரும்பும் வளர்தல்
பெயற்கழகு வேண்டுழிப் பெய்தல்—செயற்கழகு
நன்று புகழ்பொரு ணல்க லயற்கழ
கென்று மினியா ருறைவு

(கு-ரை) பெயல்-மழை. ஒருவனுடைய செயலுக்கழகாவது அவற்கது அறம்புகழ் பொருள்களைக் கொடுத்தலாமென்க. நன்று-அறம். அயற்கு: ஒருவர் குடியிருக்குங் குடியிருப்பினயலிடத்திற்கு. உறைவு: குடியிருத்தல்.

236. புனல்வழியே செல்லும் புணைபோ லுயிர்கள்
வினைவழியே செல்லும் விளைவு--நினைபு
நலந்தீங்கு நேரி னடுநின் றிறைவற்
கலந்தொன்றி வாழ்தல் கவின்

(கு-ரை) புணை-தெப்பம். நினைபு-நினைந்து. நடுநின்று-பொதுவிருந்து. 236

237. ஒன்றே திரிபின் றொழிந்தவெண் ணாகியாங்
கொன்றே யொழிந்த வுயிர்பலவா—யொன்றே
பிறிதுபிறி தாகப் பிறங்கித் திரிபிலதாய்ச்
செறிவுறன் மேவுந் திரு

(கு-ரை) ஒன்றே: ஒன்றென்னு முதலெண்ணே. திரிபின்று-திரிபின்றி. ஒழிந்த எண்: இரண்டு மூன்று முதலான அளவில்லா எண்கள். ஆகியாங்கு-ஆயினாற்போல. ஒன்றே: இறைவனாகிய முதலுயிரொன்றே. பிறங்கி-விளங்கி. திருச்செறிவுறன் மேவும்-திருவென்னுமழகு தன்னோடிரண்டற ஒட்டுதலைப் பொருந்தும். 237

238. தூங்கு முயிர்கிடைத் தொல்லுடலுண் மேவவும்
யாங்கு மியங்குதல் யாங்காகும்—ஆங்கு
நனவினுஞ் சான்றென நான்வாளா வுள்ளே
னெனவுனுந் தேற்ற மெழில்

*(கு-ரை) தொல்உடல்: தூங்குமுன்னுள்ள உடல். யாங்கும்-எவ்விடத்தும். யாங்காகும்-எப்படியாகும்: உண்மையில் ஆகாதென்றவாறு. ஆங்கு-அது போல; இன்றி: இயக்கமின்றி. வாளா: ஒன்றுஞ் செய்யாமல். உனும்: உன்னும்; நினைக்கும்.* 238

239. இயங்குந நிற்ப விருதிணைப் பட்டு
மயங்குந மன்னும் பிறப்புள்—வயங்குநன்
மக்கட் பிறப்பே மலரோன் படைப்பிற்குத்
தக்க வழகு தரும்

*(கு-ரை) இயங்குநவும் நிற்பவுமாகிய விருதிணை: இயங்குதிணை, நிலைத்திணை யென்பன. மயங்குந மன்னும் பிறப்பு-மயங்குவனவாய் வாழும் பிறப்பு. வயங்குதல்-விளங்குதல். அறிவு முதலியவற்றால் விளங்குகின்ற நன் மக்கட் பிறப்பென்க. ஏனைமாக்கட் பிறப்பு அஃறிணைப் பிறப்போடொக்கும்.* 239

240. புலரியங் காலைப் பொலந்தா மரைப்பே
ரலரியைப் பூப்பநீ டாழி—மலருமே
செய்யவள் பொற்பச் சிறந்தோர்தங் கைகளொடு
பொய்கைசெந் தாமரைப் பூ

*(கு-ரை) பொலந்தாமரை-பொற்றாமரை. அலரி-பூ. ஆழி-கடல். செய்யவள்-திருமகள். பொலந்தாமரையின் பெரியபூ வென்றது செஞ்ஞாயிற்றினை. ஆழி அலரியைப்*

பூப்பவென்க. பொற்ப-பொலிவு பெற்றுத்திகழ. கைகளும் பொய்கையுஞ் செந்தாமரைப் பூமலருமென முடியும். கைகள் தாமரைப்பூமலருமென்றது ஞாயிற்றைக்கை கூப்பி மலர்த்தித்தொழுதலே. 240

241. எத்திறத் தானு மிறைவன் றிருவழகு
துய்த்தனர் காதற் றெழும்பாளர்—அத்திறத்
தானைக் கடவு ளளப்பில வாக்கியு
மானு தெழுந்தா ரவா

(கு-ரை) எத்திறத்தானும்-எல்லாவகையானும், துய்த்தனர்-நுகர்ந்தனராய்; முற்றெச்சம். அத்திறத்து ஆனைக்கடவுளை-அவ்வகையோடமையாத கடவுளை. அளப்பில-அளவில்லாதனவாக. முக்கணன், திருமால், மலரோன், முருகன், கொற்றவை முதலிய அளவில்லாத கோலமாக. ஆக்கியுமானது: அவ்வாறு செய்தும் அவ்வளவிலமையாது அவா மிகுந்தாரென்க.

காதற் றொழும்பாளர் ஒரு கடவுளைப் பல கடவுளாகக் கொண்டது இறைவன்றிருவழகு துய்த்தற் பொருட்டு. 241

242. காலுறை மெய்ப்பை கவாடி தலைக்கவிப்
பேலுற மெய்ப்படுத் தேர்கோடல்—கோலுறுங்
கொற்றத் தலுவற் குழகர்க் கமைவுடைத்துச்
செற்றஞ் செருக்குச் செறின்

(கு-ரை) காலுறை-காற்சட்டை. மெய்ப்பை-மேற்சட்டை. கவாடி-காலடி முழுதும் புறவடியுட்பட மறைய அணியு மிதியடி. தலைக்கவிப்பு-தலைப்பாகை: தொப்பி முதலாயின. ஏலுற-பொருத்தமாக, மெய்ப்படுத்து-அணிந்து. ஏர்கோடல்-அழகு செய்து கொள்ளல். கோலுறும்: செங்கோலொடு பொருந்தும். கொற்றம்-அரசியல்.

அலுவல்-தொழில். குழகர்-இளஞர். செற்றம்-சினம். செறின்-கெடுத்தால். செற்றத்தையுஞ் செருக்கையுங் கெடுத்தால் என்றவாறு. 242

243. வழியியங்கு மக்கள் வழியெதிருந் தம்முள்
வழிகொடுத்துச் செல்லல் வனப்பு—வழியிடைத்
தீங்குற்றார்க் காவன செய்தன்றிச் செல்லாத
பாங்குற்று ராதலுமப் பண்பு

(கு-ரை) பாங்கு-தோழமை. அப்பண்பு: மேற் சுட்டிய வனப்பென்னும் பண்பு. 243

244. வலியா ரெளியார் வழக்கிடைக் கொற்றம்
வலியா தொருபான் மருவி—நலியா
திருத்த லறனே யெளியார்க்கு மாட்டா
வருத்தந் தணித்தல் வனப்பு

(கு-ரை) வலியாரோ டெளியார்க் குண்டான வழக்கென்க. கொற்றம்-அரசாட்சி. வலியாது-வலிந்து செய்யாது. நலியாது-துன்புறுத்தாமல். இருத்தல்: நடுவிருத்தல். மாட்டா: தம்வழக்கையெடுத்துச் சொல்ல மாட்டாத. வருத்தந்தணித்தல்: அவர் வழக்கை நன் கெடுத்துக்காட்டி அவர்பானின்றுரையாடும் வழக்கறிஞரை அவ்வெளியார்க்குக் கொடுத்துதவலும் அவர்க்குச் சிறந்த பாதுகாப்பளித்தலுமாம். 244

245. உழையவர் காண்புற வெச்சி லுடைமை
விழையுமு ணுண்ணல் விலங்கிற்—பிழைபடக்
காதலியோ டாயினுங் காமக் குறிப்புடைய
ராதலிவை யல்ல வழகு

(கு-ரை) உழையவர்-அருகிலுள்ளவர். காண்புறு-காணுநிற்க. எச்சிலுடைமை-எச்சிலுடையராநிற்றல் விலங்கின்-விலங்குபோல. பிழைபட-குற்றமாக. பிழைபடக் காமக் குறிப்புடையராதலென வியையும். இவை அழகல்லவென்க. இவை: இம்மூன்றும். உடைமை: குறிப்பு வினைத்தொழிற் பெயர்; உடையராதல் என்பதாம். எச்சில்: நால்வகையெச்சின் முதலாயின. நால்வகையெச்சிலாவன: இயக்கமிரண்டு, இணைவிழைச்சு, வாயில் விழைச்செனை ஆசாரக் கோவையிற் கூறப்பட்டன. 245

246. பற்றென்று மின்மையலாற் பற்றற்றாற் பற்றற்கா
றெற்றென்று மில்லை யெழிலதுதான்—றெற்றென்று
தன்னுடைமை யாவையுந் தன்னே டளித்தல்யா
னென்னுடைமை யில்லை யெனல்

(கு-ரை) பற்றற்றான்-இறைவன். ஆறு-வழி. எற்றென்றும்-யாதொன்றும். பற்றற்றானைப் பற்றற்கு வழி பற்றென்றுமின்மையல்லால் எற்றென்று மில்லை யென வியையும். எழில் அதுதான்-அவ்வழகுதான்; என்றது பற்றென்று மின்மையை. தெற்றென்று-தெளிந்து. அளித்தல்-கொடுத்தல்; பற்றற்றாற்குக் கொடுத்தல். இல்லையெனல்-இல்லையென்று துணிந்துணர்தல். யானென்பதுஉம் என்னுடைமையு மில்லையென்க. எழிலதுதான் அளித்தலும் இல்லையெனலுமாம். தன்னுடைமை யாவற்றையுந் தன்னேடளித்தலை வள்ளன்மையெனவும் யான் என்னுடைமை யில்லையெனலைத் துறவெனவுங் கூறுப. பற்றின்மையை அதன்விளைவாக மாட்டிக் கூறியவாறு காண்க. 246

247. உண்டாட் டயர்தலொ டும்பர் விழாவயர்தல்
கண்டா ருவப்பக் கடியயர்தல்—தண்டா
விளையாட் டயர்தல் விருந்தயர்தன் மாசில்
களியாட் டயர்தல் கவின்

*(கு-ரை) அயர்தல்-கொண்டாடுதல். உம்பர்-கடவுளர். கடி-திருமணம். தண்டா-தணியாத.* 247

248. சிறுநோக்குக் காயுஞ் சினனேக்கு வஞ்சக்
குறுநோக்குச் செல்வக் குறும்பு—மறுநோக்கு
மையனேக் கச்ச மருவுநோக் கிவ்வுள்ளச்
செய்யநோக் கன்னே தெறும்

*(கு-ரை) சிறுநோக்கு: பிறரையிகழ்ந்து புறக்கணித்து நோக்கும் நோக்கு. காயும்-சுடும். மையல்-மயக்கம். மையனேக்கு: காம மயக்க முதலியவற்றைப் புலப்படுத்தும் நோக்கு. இவ்-இவை. செய்ய நோக்கு-செவ்விய அழகு. அன்னே, ஐயோ: இரங்கற் குறிப்பிடைச் சொல். தெறும்-கெடுக்கும். செய்ய நோக்கைத் தெறுமென்க.*

249. நிலப்படை விட்படை நீர்ப்படை பூத்துக்
கலப்படை வெல்கொடிக் காட்சி—புலப்படப்
பாணி நடையிற் பணையிமிழ வூர்வலங்
காணி னுடைத்துக் கவின்

*(கு ரை) பூத்து: தத்தங் கோலஞ் செய்து பொலிந்து. கலப்படை-படைக்கலம். (இதனுட் படையூர்திகளுமடங்கும்.) வாள், சோட்டி முதலாயின. பாணி-தாளம். பணை: படை முரசு. இமிழும்-முழங்கும். ஊர்வலஞ் செய்தலென விரித்துச் செய்தலென்பதனெடு பூத்துப் புலப்படவென்னுஞ் செய்தெனெச்ச செயவெனச்சங்களை முடிக்க. நடையில் என்னும் ஏழாவதற்கும் ஊர்வலஞ் செய்தலே முடிக்குஞ் சொல். ஊர்வலஞ் செய்தல் இசையெச்சம்.*

*நிலத்தினின்று பொரும்படை விண்ணிற் பறந்து பொரும்படை நீரிலூர்ந்து பொரும்படையென விரியும்.*

நிலப்படை விட்படை நீர்ப்படை யென்பன உம்மைத் தொகையாய் ஒரு சொன்னீரவாய் ஊர்வலஞ் செய்தலென்பதற்கு வினைமுதலாகும். **249**

250. குற்றங் கொடியாரைக் கொற்றம் பணிக்கலுறுந்
தெற்றந் திறம்பச்செய் சொல்வல்லார்—கொற்ற
மெழில்கெட வுற்ற விரும்பிணி நன்மைத்
தொழில்கெட வந்த சுமை

*(கு-ரை) நாட்டிற் கொடிய குற்றஞ் செய்தாரை அரசியற் கட்டளையிடுந் தெற்றந் தவறுமாறு செய்த சொல் வல்ல வழக்கறிஞர் அரசியலதழகு கெடுமாறு நேர்ந்த பெரிய நோயாய் உலகிற்கு அறச்செய லழியவந்த சுமையாமென்பது.*

*கொற்றம்-அரசியலதிகாரம். பணித்தல்-கட்டளையிடுதல். தெற்றம்-தண்டனை. நன்மைத் தொழில்-அறச்செயல்.* **250**

251. அறிவொடு சால்பு மமைந்தார்கட் கொற்றம்
வெறியற நன்மை விளைக்கும்—வெறிமிகச்
செய்துபொல் லாங்கெல்லாஞ் செய்விக்குங் கொற்ற
முய்தியில் லாதா ருழை

*(கு-ரை) கொற்றம்-அரசியலதிகாரம். வெறி-மையற் களிப்பு. உய்தியில்லாதாருழைக் கொற்றம் வெறிமிகச் செய்து பொல்லாங் கெல்லாஞ் செய்விக்குமென்க.* **251**

252. பல்லுலகு மொன்றித் தொழிற்படும் பான்மையெலாந்
தொல்லுயிர் தற்பெற்றுத் துய்க்கவது—தொல்லுயிர்
நின்றுங்கு நின்ற நிலைகோடா தெய்துத
லென்றுனு மோவா வெழில்

(கு-ரை) துய்க்க-துய்த்தற்பொருட்டாம். அது: அங்ஙனந் துய்த்தலை. எய்துதல்-பெறுதல். என்றும்-எப்பொழுதாயினும். 252

253. காம மிலராயிற் பேடியர் காம
மடங்கல ராயின் வெறியர்—உடங்கதனைத்
துய்ப்பார் துயர்மீளார் துவ்வா தடக்குநர்க்கு
மெய்ப்பால் வனப்பு மிகும்

(கு-ரை) உடங்கு-உடன்: காமம் எழுந்தவுடனென்க. நோய் முதலிய துயரினின்று மீளாரென்க. மெய்ப்பால்-உண்மைக்கண். உண்மைப் பொருளாதற்க ணுளதாகும் அழகு மிக்குத்தோன்று மென்பது. உண்மைப்பொருளாதல்: மெய்யுணர்வெய்துதல். 253

254. அடக்க மொழுக்கம்பா டஞ்சாமை மூப்புக்
கடக்க லரும்பொறுமை கல்வி—கிடக்கலுறும்
வாய்மை செருக்கின்மை வள்ளன்மை தூய்மை
அவைபெருமை நல்கு மணி

(கு-ரை) பாடு-தொழின் முயற்சி. மூப்பு-முதுமைப் பருவம்; இளமைக்கட் காமந் துறத்தலுடைமையுமாம். கடக்க லரு-வெல்லலுதற்கரிய. கிடக்கிலுறும்-நிலைபெற்றுத்தங்குகின்ற. வள்ளன்மை: பலர்க்கும் பலவும் பல காலு முதவுதற்றன்மை. அவை: அப்பதினொன்றும். அணி-அணிகலன். 254

255. மகிழ்ச்சி யுடம்பை வளர்த்தலான் மைந்தர்
மகிழ்ச்சி தருமுணு மாந்தி—மகிழ்ச்சி
யழிக்குஞ் சினம்வேட்கை யச்சமிம் மூன்று
மொழிக்கு மதுபொற் புறும்

(கு-ரை) மைந்தர்-இளைஞர். மாந்தி-உண்டு. பொற்புறும்-அழகு மிகுவிக்கும். 255

256. எருவற்கட் சின்னீ ரிழித்தற்க ணெச்சின்
மருவற்கண் மாந்தும் வகைக்க—ணொருவுமதிக்
கோளார் குழுவின்கட் கூர்ந்தார்கட் கூறுது
வாளாங் கிருத்தல் வனப்பு

(கு-ரை) எருவல்: பவ்வீ கழித்தல். சின்னீர்-சிறுநீர். இழித்தல்-இறக்குதல். எச்சில்: வாயெச்சில் இனைவிழைச்சு முதலாயின. மருவல்-கூடுதல். மாந்தும்வகை-உண்ணும் வகை. ஒருவுமதி-அறிவுநீங்கிய. கோளார்-தீமையுடையார். கூர்ந்தார் கண்: தம்மினு மறிவுமிக்க உயர்ந்தார் குழுவினிடத்து. கூறுது: யாதொான்று முரையாடாமல். குழுவைக்கூர்ந்தாரொடுங் கூட்டிப் பொருள்கொள்க.

257. கடவுளொடு காலமுங் கந்தழியு மொண்மை
யிடவெளியும் வள்ளியு மேனை—யுடலுயிரு
மிவ்வாறு மென்ன விருக்கு மதுவொன்றே
யவ்வாறு நிற்ற லழகு

(கு-ரை) கந்தழி: வள்ளியி னாற்றல். ஒண்மை-அறிவு. ஒண்மையிடவெளி-அறிவுப் பிழம்பாகிய இடவெளி. வெளியென்பது வினை நிகழ்ச்சிக்கிடமாகலின் இடமாகிய வெளியெனப்படும். வள்ளி: பெருக்குடைய முழுமுதற்செம்பொருள். உடலுயிர்-உடலுள் வாழுமுயிர்-இவ்வாறு பொருளுஞ் சுடுநெருப்பே சுடர் விளக்கெனப் பட்டாற் போல்வன. இருக்கும்: திரிபின்றியிருந்தாங்கிருக்கும். அது: சேணறி சுட்டு. சேண் ஈண்டு மெய்ம் மொழியுள்ளங்கட் கெய்தாத சேய்மை.

இவ்வாறு மதுவொன்றெனவே வெளியுங்காலமும் வேறுள வென்றன் மயக்கமாமென்பது பெறப்படும். 257

**258.** எழுதுகோன் மைதா ளெழிற்பதிப் பேடு
பழுதிலாப் பல்கலைக் கோட்டந்—தொழுதோது
நன்முறைத் திட்டமொடு நல்குரவு தீர்தலிவை
யிம்முறைக் கற்றற் கெழில்

*(கு-ரை)* எழுதுகோல்: மையூற்று முதலாயின. நல்குரவு-வறுமை. நல்குரவுதீர்தல்: கற்குங்காலுங் கற்றுப் புறப்பட்ட பின்பும் வறுமை நீங்குதல். கற்குங் காலத்து வறுமை தீர்தலாவது ஊணுடை முதலாகவேண்டுவன கொடுத்துக் கற்பிக்கப் பெறுதல். கற்றுப் புறப்பட்ட பின்பு வறுமைதீர்தலாவது கட்டாயம் பொருள்வருவாய்த் தொழில் கிடைக்கப் பெறுதல். இம்முறை-இக்காலம். இக்காலத்திற் கல்வி கற்றற்கு எழில்பயப்பன இவை யென்பதாம். 258

**259.** நேரத்தைக் காட்டு மணிக்கோடு நீடுதுனைந்
தூரச்செய் வன்பொறி யூர்திநெடி—தூரச்செய்
சேட்சொலி செய்தித்தாள் வானொலிய லென்றிவையிந்
நாட்டொழிற் செவ்விக்கு நன்று

*(கு-ரை)* நேரம்-பொழுது. மணிக்கோடு: ஆகுபெயர். நீடு: நெடும்பொழுதும் நெடுந்தொலையும். துனைந்து—கடுகி. ஊரச் செய்-ஏறிச் செல்லுதற்பொருட்டுச் செய்யப்படுகின்ற. வன்பொறியூர்தி-வலியபொறி பூட்டியவூர்தி; அவை மோட்டார், புகைவண்டி, மரக்கல முதலாயின. நெடிதூரச் செய்-நெடுந்தொலைக்குச்செல்லச் சொல்லுகின்ற. சேட்சொலி: தொலையிற் சொல்லிய சொல்லையுய்க்குங் கருவிப்பொறி. வானொலியல்: வானொலியைக் கேட்பிக்குங் கருவிப்பொறி. இந்நாட் டொழிற் செவ்வி-இக்காலத்துத் தொழிலாக்கம். 259

260. இடக்கர் குழூக்குறி யெள்ளல் பிதற்ற
லடக்க லுருதற்ற மம்பற்—படக்கான்றல்
ஒற்றுரை சூளுரை யொட்டம் பிணக்கிவை
யற்றுள ராத லழகு

(கு-ரை) இடக்கர்: மறைத்துச் சொல்லற்பாலதனை மறையாது சொல்லுதல். குழூக்குறி: ஒரு குழுவினுள்ளார் பிறரை மறைத்துத் தம்முளுணர்ந்துகோடற் கிட்டு வழங்குஞ் சொற்குறி. பிதற்றுதல்: ஒரு செய்தியைப் பல காற் சொல்லுதல். அற்றம்: பிறரறிய வெளியிடலாகாத செய்தி. அம்பல்-பலரறிந்து கூறல். கான்றல்-கக்குதல்: வெளியிடுதல். அற்றத்தை அடக்கலுருது அம்பற்படக் கான்றலென்க. அம்பற்படுதல்-அம்பலமாதல். ஒற்றுரை: ஒற்றர்போல மறைந்தறிந்துவந்து செய்தி சொல்லுதல். சூளுரை: வஞ்சினமுரைத்தல். ஒட்டல்: பந்தயங் கூறல். பிணக்கு: எல்லார் சொல்லையு மெதிர்த்துக் கூறல். ஒட்டம் பிணக்கென்பன ஆகுபெயர்; அவ்வச்சொல்லையுணர்த்தலின். அற்றுளராதல்: இன்றியிருத்தல். 260

261. ஞாலமெலா மொக்க நனியெரிந்து நீறுக
ஆலமரு மண்ண லடிகடிருக்—கோல
அழற்பிழம்பு பூத்த வதுமாந்தர் தந்நெஞ்
செழப்பொலியும் வெண்ணீற் றெழில்

(கு-ரை) ஒக்க-ஒருங்கு. அது: அம்முழுநீறு. நெஞ்சின்கணெழுதல்: நினைவு கூர்தல். எழ: எழுதற் பொருட்டும் எழுதலானும். வெண்ணீற்றுப்பூச்சழகு பொலிந்து தோன்றுமென்க. அம்மாந்தர்நெற்றியிற் பொலியுமென இசையெச்சம் விரித்துரைக்க. 261

262. சார்பி னளவா முயிரதனாற் றம்பொருட்டாஞ்
சார்பின் வினையைத் தமவென்னுஞ்-சார்பிலெழி
லெவ்வுயிரு மேனை யிறையு மியற்றும
லவ்வினையே தம்மியல்பி னும்

(கு-ரை) அதனால்: சார்பினளவாயிருத்தலால். அதனாற் சார்பின்வினையைத்தமவென்னுமெனவியைக்க. தம-தம்முடையவை: தாஞ்செய்தன. என்னும்: என்று மயங்கியுணரும்.

சார்பினளவா முயிரென்பதற்குத்தாம் பிறவற்றுக்குச் சார்பளவாயிருக்குமுயிர் எனவும் சார்பாகிய வுள்ள முதலாயவற்றினளவாயிருக்கு முயிரெனவும் ஒப்பக் கூற லான் இருபொருளுங் கொள்ளப்படும்.

தமக்குச் சார்பில்லாத அழகுடைய எல்லா வுயிரும் ஏனைக் கடவுளும் வினைமுதலாகி வினை செய்தலில்லாமே தம்மியல்பானே நிகழுமென்க. சார்பாதலும் பொருட்டாதலுமே உயிர்க்கு வினையோ டுளவாமியைபு. 262

263. தன்னுறையு ணின்றொருவன் றன்சென்ற வவ்வழியே
தன்னுறையுண் மீண்டினிது தங்குமெழி—றுன்னு
முலகிய லாற்று னொழுகினேன் பற்று
விலகிவரு மாறு மது

(கு-ரை) உறையுள்-வதியுமிடம். தங்கும்-தங்குவான். ஆறு-வழி: ஒழுக்கம். பற்று விலகுதல்: யானெனதென்னு மிருவகைப் பற்றுந் துறந்து மெய்யுணர்ந்துய்தல்.

செல்லும் வழியே மீளும் வழியாமாறுபோல உலகிய லொழுக்கமே துறவியலொழுக்கமுமாமென்றவாறு அவை முறையே நிகழ்ச்சி யொழுக்கமெனவும் மீட்சி யொழுக்க மெனவும் படும்.

செல்லுங்கால் வழியின்மேன்மேலிடங்களைப் பற்றிக் கொண்டு முடிவின்றிச் செல்லுதலும் மீளுங்கான் மேன் மேலிடங்களை விட்டுவிட்டு வந்து முடிந்திருத்தலும்போல உலகியலொழுக்கம் மேன்மேற் பற்றொடு கூடி முடிவின் றிச் செல்லுதலும் அது துறவியலொழுக்கமாயவழி மேன் மேற்பற்று விட்டுவிட்டு முடிந்திருத்தலுங் கொள்ளப் படும். அது: உலகியலாறு. 263

264. செய்தித்தா ளோதித் தெரிதல் சிறந்தார்சொற்
பெய்திக்கட் கேட்டல் பிழையாமை—எய்தி
வழக்காறு தற்பொழுது வைகுமா றோர்த
லிழுக்காறு கொள்ளாற் கெழில்

(கு-ரை) செய்தித்தாள்: நாடொறுங் கிழமைதொறுந் திங்கடொறும் யாண்டுதொறும் உலகச் செய்தி முதலிய செய்திகளை வெளியிட்டுப் பரப்பும் ஏடுகள். ஓதி-படித்து. சிறந்தார்: கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்தார். சொற் பெய்தி-சொற்பொழிவு. செய்தல் செய்தியாமாறு போலப் பெய்தல் பெய்தியென நின்றது. கேட்டல் பிழை யாமை: பிழையறக் கேட்டல். எய்தி: ஆங்காங்குச் சென் றடைந்து. தற்பொழுது: தான்வாழுங் காலத்தில்: தனது பொழுதென விரியுந் தொகைச்சொல். வைகுமாறு- இருக்கு முறை. ஓர்தல்: உற்றுணர்ந்தொழுகல்.

இழுக்காறு: பொருள்வருவாய் வாழ்க்கையினின்று மிழுக்கிய வழி. இம்மூன்று மெழிலென்க. 264

265. பெரியா ரவரைத் தலைப்படப் பெற்று
ருரிதா விருவ ருழையு—மரிதாகு
மன்பு மருளு மொருங்குடன் றேன்றுத
லென்பு மிளக்கு மெழில்

(கு-ரை) உரிது-உரிமை; உரிதாகத் தோன்றுதலென வியையும். இருவருழையும்-இருவரிடத்தும். அரிதாகு மென்னுமெச்சம் அன்பொடும் அருளொடுந் தனித்தனிக் கூடிப் பொருள்படும். இளக்கும்-இளகச் செய்யும். உருக்கு மென்பதாம். 265

266. மாலை விளக்கு வழிபட் டமைதியுறல்
காலைக் கதிர்விளக்குக் காய்பகற்—காலைப்
பிணியின்றித் தூங்காமை பெண்விழைச்சின்மை
அணியென்ப வாழு மவர்க்கு

(கு-ரை) பகற்காலை-பகற்பொழுது. பிணியின்றித் தூங்குதல் செய்யாமை யென எதிர்மறைக் குறிப்பு வினை யெச்சம் முதனிலையொடு முடிந்தது. வாழுமவர்: நோயும் வறுமையுஞ் சாக்காடுமின்றி நீடு வாழுமவரெனப் பெய ரெச்சம் எதிர்காலத்துக் கண் வந்தது. 266

267. திறன்மான மிவ்விரண்டுஞ் சேர்ந்திகவா தீனு
மிறன்மேவு மேனு மினிது—விறன்மாண்பும்
பொற்பொடு நல்கிப் புகழ்நிறீஇ யோங்குமவை
இற்பிறப் பாளர்க் கெழும்

(கு-ரை) திறல்: அஞ்சாதொழுகுமாண்மை. இக வாது-பிரியாது. இறல்-சாக்காடு. அது வந்து கூடுமேனு மின்பந்தருவதாம். விறல்-வென்றி. விறன்மாண்பு-மாண் புடையவிறல். ஓங்குமவை: உயர்ந்து தோன்றுந் திறலு மானமும். எழும்-உண்டாவனவாம். 267

268. இன்னிசை யின்பமொ டெத்திறத் தின்பமுந்
தன்னியலா யொன்றுபடச் சாருமுயிர்—மன்னிய
நன்னின்பந் தானும் பொதுவுமாய் நிற்பதொரு
பொன்னின்ப மென்பது போன்ம்

(கு-ரை) ஒன்றுபட-ஒன்றுபட்டு; வேறுகாது. மன்னிய: தோற்றக் கேடின்றி நிலைபெற்ற. மன்னிய தன்னின்பமெனவே ஏனையின்ப மெல்லாமன்றுதன வென்னும் வேறுபாடு பெறப்படும். தானும்! தானென வேறுயுயர்ந்தும். பொன்னின்பம்-அழகியவின்பம். பொன்-அழகு. போலும்: அசை. 268

269. கடன்படா வாழ்வே கவினுங் கடன்பட்டுஞ்
செய்வன செய்தலுமோர் செவ்வியதே—யுய்தற்
கிளிவர லின்றி யிரத்தலு மின்னார்க்
களிவர லின்மையு மற்று

(கு-ரை) கவினும்-அழகுபெறும்; வினை முற்று. செவ்வியதே-அழகுடையதே. உய்தற்கு: உயிர் வாழ்தற்பொருட்டு. இன்னார்: பிறர்க்குத் துன்பமிழைப்பவர். அளி-இரக்கம். வரல்-உண்டாதல். அற்று-அவ்வாறே; அவைபோல அழகுடையன என்றவாறு. இன்னார்க்கு: இன்னுதார்மேல். 269

270. பிறப்பொடு கல்வி யவாவச்ச மிந்நாற்
றிறப்படு மூதல்க ளானும்—பெறப்படும்
மக்க ளொழுக்க மதனுல் வனப்புறந்
தக்க தரசுசெயல் சால்பு

(கு-ரை) பிறப்பு: குடிப்பிறப்பு. திறப்படுதல்-கூறுபடுதல். மூதல்கள்-காரணங்கள். மக்கள்: குடிமக்கள். அதனுல்: அவ்வொழுக்கத்தால். வனப்புறத்தக்கது: நாடு குழப்பமின்றி அழகுறத்தக்க முறையை. அரசு தான் செய்தல் அவ்வரசுக்குச் சால்புடையதாமென்க. 270

271. உலகிற் குருடுசெவி டுமைமுத லெச்சம்
பலவு மிலவாக்கும் பண்பா—னிலவின்
மருத்துவ மூண்டுறை யென்றிவை வையந்
திருத்துவ செவ்வி சிறந்து

*(கு-ரை) எச்சம்: உடற் குறைநோய். எச்சம்பலவு மிலவாக்கும் பண்பொடும் மருத்துவத்துறையும் உணவுத் துறையு மென்றிவ்விரண்டுஞ் செவ்வி சிறந்து நிலவுமாயின் அவை வையந் திருத்துவ என முடித்துரைக்க. செவ்வி: வளர்ச்சிப்பருவம்; முன்னேற்றம் சிறந்து- மேம்பட்டு. திருத்துவ; முற்று. திருத்துதல்: அழகுபடுத்தி நன்குருக்குதல். துறையென்பதனை மருத்துவத் துறை யெனவுங் கூட்டுக*

*மருத்துவத்துறையாலும் உணவுத்துறையாலும் அவ் வெச்சமுழுது மிலதாக்கலாம்; இலதாக்கல் வேண்டும்.*

272. பிறர்க்கென வாழ்வார்க்கு வாழ்வார் பிறரும்
பிறர்க்கென வாழாதார் வாழார்-பிறர்க்கென
வாழ்தலும் யாரொடும் நட்புறவு வாய்த்தலும்
வாழ்தலு ளெல்லாம் வனப்பு

*(கு-ரை) அவ்வாழ்தலே வேண்டுவனவெல்லாம் பெற் றிடையூறின்றி எப்பொழுது மினிது வாழ்தலாமாகலின் வாழ்தலுளெல்லாம் வனப்புடையதாகும்.* 272

273. வாய்மையொடு நன்றி மறவாமை யிவ்விரண்டுந்
தூய்மையுட் டுய்மைத் துணையாகும்—நோய்மை
களையு மறிவெல்லாங் காட்டிக் கடவுள்
அளையு மழகுந் தரும்

(கு-ரை) தூய்மைத்துணை-இரட்டைத் தூய்மை. உள்ள முதலியவற்றையெல்லாம் மாசறத்துடைத்தலானே சிறந்த தூய்மைக்குத் துணையாமெனினுமாம். நோய்மை-துன்பமுடைமை. கடவுள். அளையுமழகு: கடவுளோடு அன்பானும் அருளானுங் கலந்துமகிழு மழகு.

274. உகிர்கடித்தல் பல்கான் முகங்கை யுறுதல்
செகில்புடைத்தல் சீழ்க்கை செலவிற்—றுகில்பிடித்தல்
கைந்நொடித்தல் காலாட்டல் கண்சிமிட்ட லென்றின்ன
மெய்வ்வனப்பட் டாக்கு மிடி

(கு-ரை) உகிர்-நகம். உறுதல்-தொடுதல். செகில்—தோள். புடைத்தல்-கொட்டுதல். செலவு-நடை. நடையின்கண் உடுத்ததுகிலைக் கையாற் பற்றிக்கொண்டு நடத்தல். இன்ன-இவைபோல்வன. மெய்-உடல். அட்டு-கெடுத்து. மிடி-வறுமை. மிடி யாக்குமெனமாறுக 274

275. நீர்மை முதியோர்க்கு நீர்க்காவி யாடையே
சீர்மை யழகு சிறப்பிக்கும்—ஓர்மை
யுடையரா யிற்றுறந் துய்ந்தார்க் கழகிற்
றுடைய கவுந்தி யுடை

(கு-ரை) நீர்மை-இனியபண்பு. முதியோர்-முதுமைப் பருவமுடையார். நீர்க்காவியாடை: தண்ணீரிலே தோய்த் துவருதலாற் பழுப்பேறியவுடை. சிறப்பிக்கும்-தனியாகக் காட்டும். ஓர்மை-ஒருமுனைப்பாட்டுள்ளம். அழகிற்று-அழகியது. கவுந்தி: கீளொடு கூடியகச்சணம். 275

276. செய்தற்பண் பற்றவுயிர் செய்கிற்கு முள்ளத்தைச்
செய்வித்தல் செவ்வியுஞ் சீர்க்குமாற்—செய்தற்
குணர்வற்ற வுள்ள முணரு முயிரை
யுணர்வித்தல் பொற்பு முடைத்து

(கு-ரை) செய்கிற்கும்-செயல் செய்யவல்ல. செல்வியுஞ் சீர்க்கும்-அழகும் வாய்க்கும். செய்தற்கு வேண்டு முணர்வற்ற வென்க.

அழகாகச் செய்வித்தலும் அழகாகவுணர்வித்தலு முளவாமாறு கண்டுகொள்க.

உணர்வித்தலும் பொற்புடைத்தென உம்மைமாறுக.

277. உயிர்தன்னை யுண்மையா னோக்குங்காற் றன்மு
னுயிரிலர வுள்ள முடம்பு—வயினுலக
மெல்லாங் கிழியி லெழுதெழி லோவியமா
மல்லா துளவாகா வாம்

(கு-ரை) வயினுலகம்-பலவகையுலகம். வயின்-வகை; இடமுமாம். இடமுடையவுலகமென்க. கிழி-துணி. உளவாகாவென்றது தோற்றமளவாயிருக்குமன்றி இலவாமென்றவாறு. 277

278. உள்ள முணர்வில் பொருளா முயிர்தானுந்
தெள்ளச் செயலில் பொருளிவை—நள்ள
உணர்வுஞ் செயலு மொருங்குடைய தொன்றும்
புணர்வு முடைத்தொரு பொற்பு

(கு-ரை) உள்ளம் உணர்வில் பொருளெனவே செயலுடைப் பொருளென்பது பெறப்படும். உயிர்செயலில் பொருளெனவே உணர்வுடைப் பொருளென்பது பெறப்படும். தெள்ள-ஐயமற. தெள்ளவென்னுங் குறிப்பு வினையெச்சம் இல் என்னும் எதிர் மறைக்குறிப்புப் பெயரெச்சத்தொடு முடியும். இவை: இவ்விரண்டும். நள்ள-செறிய; இது ஒன்றுமென்னும் ஆக்கவினையொடு முடியும். ஒன்றும் புணர்வு-ஒன்றுபோலத் தோன்றும் புணர்வு.

புணர்வு மொருபொற்புடைத் தென்க.

இவ்வொற்றுமைப் புணர்ச்சியும் புணர்ச்சிப் போலியாய் அழகுடைய தொன்றுமென்பது கருத்தாகலிற் புணர்வு மென்னு மும்மை இழிவு சிறப்பு. 278

279. உலகுதா னுற்றவெலா மொன்றேயொன் றெவ்வா
நிலைமைதான் மன்னுயிர்தந் நெஞ்சம்—பலவும்
வியப்பு நயப்பும் விளைத்துப் பிணிக்கும்
வனப்பு மருவற் பொருட்டு

(கு-ரை) தானுற்ற வெலாம்-தான் அடைந்த பொருளெல்லாம். பலவாற்றானுந்தம் முளொன்றேடொன்றெவ்வாது தனித்தனி வேறுபட்டிருக்கு நிலைமை தானென்க.

மருவற் பொருட்டுளதாயிற்றென இசையெச்சம் விரித்து முடிக்க.

மருவல்; கேடின்றாகத் தொடர்ந்து தழுவி நிற்றல்.

280. உயிரினை நோக்கி யுளர்ந்துளர்ந் துள்ளஞ்
செயிரினைப் போக்கித் திருந்தல்—செயிரிலா
முன்னோன தவ்வருண் முன்னிலையி னல்லாம
லென்னோரு மெய்த லெவன்

(கு-ரை) உளர்ந் துளர்ந்து; இடையறு தியங்கி. செயிர்-குற்றம். முன்னோன்-இறைவன். அவ்வருள்-அழகியவருள். என்னோரும்-எத்தகையோரும், எய்தல்-பெறுதல். எவன்-எவ்வாறு; முடியாதென்பது குறிப்பு.

281. கறங்கி னுழலல் கழியத்தற் காண்ட
லுறங்கி விழித்தலே யொக்கும்—மறங்கி
யியங்குமுளந் தன்மு னெழில்காட்டி நிற்ப
மயங்குமுயிர் தன்னை மறந்து

(கு-ரை) கறங்கு-காற்றாடி. கறங்கின்-கறங்குபோல. உழலல்; உயிர் பிறந்திறந்து மேலுங் கீழுமாகச் சுழன்று

திரிந்துவருந்துதல். உயிர் தன்னைத்தான் ஐயந்திரிபின்றி உண்மையாற் கண்டவுடன் அவ்வுழலுதல் கழியும். அங்ஙனங்கழியுமாறு தற்காண்டலென்க.

மறங்கி-மாறுபட்டு:உயிர்க்கு மறுதலையாகி. இயங்குமுளம்-தொழிற்படுமுள்ளம். உள்ளந்தன் னெழில் காட்டுதலாவது ஏனைக்கருவிகளுமுடம்புமாய் முறையானே திரிபடைந்து நுகர்ச்சியாதல். மயங்குமுயிர்: அவ்வுள்ளமே தானாகி யொற்றுமைப்பட்டு நிற்குமுயிர்.

மறந்து கறங்கினுழலலென விற்பூட்டாக்குக. 281

282. இறைவன் வினைவழியே யெவ்வுயிரு முய்க்கு
முறையி னுயிர்ப்பொதுவின் முன்னர்-முறையிற்
காலமொடு கட்டுதல் கட்டாமை தன்னியற்கைக்
கோலமெனக் கொள்ளும் வினை

(கு-ரை) உய்க்கும்-நடாத்துகின்ற. முறை: அவ்விறைவற் கமைந்த வழக்கு. முறையினுலென்க. உயிர்ப்பொதுவெனவே இறைவனுமடங்கும். முன்னர்-எதிரில். முறை: வித்தும் விளைவுமாய் வருந் தொடர்பு வரிசை. காலத் தோடமைந்திருந்தெனவிரிக்க. கோலம்: அழகிய தோற்றம்: வினை கொள்ளுமென முடியும். 282

283. நீராவி நெய்யாவி யூர்திவளன் கோக்களரி
காரார்மின் மாடங் கலைக்கோட்டம்—ஊர்காவல்
பாரார்க்குஞ் செய்தி யுசாமன்றம் பல்லெழிலோ
டோரரங் காடியுமே யூர்க்கு

(கு-ரை) நீராவியூர்தி நெய்யாவி யூர்தியென விரிக்க. நீராவியூர்தி: மரக்கலந் தொடரொழுகை முதலாயின. அவற்றின் பலவேறுவகைப் பெருக்கம்.

கோக்களரி-வேத்தியல் வினைக்களம். கார்-முகில். காரார் மாடம் மின்மாடமெனக் கூட்டுக. காரார்மாடம்-முகிலைப் பொருந்தவுயர்ந்த மாடியில்லம். மின்மாடம்-மின்சார விளக்குடைய மாடம். கலைக்கோட்டம்: நாட்டுக் கல்லூரி. வளாகக் கல்லூரிகளுமுட்படச் சேரிக் கல்லூரி முதல் பெருமுதுகல்லூரி காறுமுள்ளனவும் ஏட்டு நிலையங்களுமாம். ஊர்காவன் மன்றம் பாரார்க்குஞ் செய்தி மன்றமென மன்றமென்பதனை அவ்விரண்டனொடுங் கூட்டுக. பார் ஆர்க்குஞ் செய்திமன்றம்: வானொலி நிலையம், அஞ்சற் களரி, செய்தித்தாள் வெளியீட்டகம், செய்தித்தாள் விற்பனையிட முதலாயின. ஆர்க்கும்-முழங்கும்.

உசா மன்றம்: வழக்குக் கேட்டுத் தீர்ப்பளிக்குமன்றம், ஊராட்சி மன்ற முதலாயின.

பஃறொழில்: பல தொழிற் களம்; இசை யெச்சம்.

ஊர் ஆர் அங்காடி: ஊர்முழுதும் வந்தொலிக்கும் பலவேறு விற்பனைக் கடை திரண்டிருக்குமிடம்.

ஏர்-அழகு: அழகுசெய்வன. ஊர்க்கு ஏரென முடியும். 283

**284. இன்பமே யன்றி யிளையாடன் மாமையெழில்**
**துன்பமுந் தோற்றுந் தொழிற்றுகும்—அன்பன்**
**செறிக்கு முளம்பெறினுந் தேமொழி காதல்**
**குறிக்கு மளவுமக் கோற்கு**

(கு-ரை) இளையாடன் மாமையெழில் இன்பமேயன்றி அன்பன் செறிக்கு முளம்பெறினுந் தேமொழி காதல் குறிக்கு மளவு மக்கோற்குத் துன்பமுந் தோற்றுந் தொழிற்றெனக் கூட்டி முடிக்க. கோன்-தலைவன். அத் தலைவன்; தொழிற்று-தொழிலுடையது. அவளுடைய

காதற் குறிப்பைக் குறித்துணராமையால் அவளை அணுக முடியாத வருத்தம் அவற்குண்டாவதாம். மாமை: இள மங்கைப்பருவத்துக் கதிர்ப்பு. செறிக்குமுளம்-அடக்கு முள்ளம். தேமொழி: அன்மொழித்தொகை. ஆல்: அசை. 284

285. துஞ்சாமை தூங்கற்கட் டேங்காமை யாதொன்று
மஞ்சாமை யாது மவாவாமை—எஞ்சாமை
யாவு முயிரொருதா ளுதலிவை தற்பேறு
மேவும் விழுமியோர் நோக்கு

(கு-ரை) துஞ்சாமை-சாவாமை. தனியுயிர்க்குக்கேடு செயற்பாலனவும் அது கேடுறுதலுமெஞ்ஞான்று மின்மை யின் அஞ்சாமை உண்டாகும். தனியுயிர்க்குத் தன்னினு மின்பமாவதொன்றுமின்றித் தானே கழிபேரின்பமாத லின் யாது மவாவாமை யுளதாம். எஞ்சாமை-குறையா மல். உயிரொருதான்-உயிர்தானென்றே யுளதாயது. எஞ்சாமை யாவுமாதலென வினையும். தற்பேறு-தன் னைத்தான் பெறுதல். நோக்கு-அழகு. இவை நோக்கென முடிக்க. 285

286. இரண்டாவ தொன்று மிலதென்று கண்டாற்
கிரண்டாவ தன்றி யிருந்த—திரண்டாய
நானீ யதுவென்னு மூன்றுந் திரிபின்றித்
தானே யெனவாந் தகை

(கு-ரை) கண்டாற்கு: மெய்யுணர்வு தலைப்பட்டு நுகர்வு காட்சியிற் கண்டானுக்கு, கண்டாற்குத் திரிபின்றி இரண்டாய நான், நீ, அது வென்னு மூன்றுந்தானேயா மெனவமையு மழகு இரண்டாவதன்றியிருந்தது. திரிபு: புடைபெயர்தலும் வேறுதலும் பிறிதொடு சேர்தலு மெனவிவை. தகை-அழகு. 286

287. வெள்ளையர்தம் பண்பாடு மேதக வையமெலாம்
வெள்ளையொளி போர்த்து மிளிர்வதென-வெள்ளையராற்
புத்தெழில் கொள்ளப் புனைவித்தா னிவ்வுலகை
முத்தொழில் செய்யு முதல்

*(கு-ரை)* *வெள்ளையர்-அயுரொப்பர்.* **மேதக-மேம்பா**
*டுற்றிருத்தலான். வெள்ளையொளி-வெள்ளையர் புகழ்.* **புகழ்**
*வெளி தென்ப. வெண்சுதையொளியென வு*
*மொலித்தது. மிளிர்வதென-விளங்குகின்றதென உலகங்*
*கொண்டாடுமாறு. மிளிர்வதென இவ்வுலகைப்புனைவித்தா*
*னென்க. புத்தெழில் கொள்ளப்புனைதல் செய்வித்தான்*

288. எவ்வகை யின்னலையு மெற்றுபு நொக்குத
லவ்வகை யஞ்சா தமைவுறுதன்—மெய்வ்வகை
யோர்ந்தொருவ லென்றிவற் றொன்றுடைமை
சார்ந்தபிறப் பாளர் தகை [தெய்வவருள்

*(கு-ரை)* *எற்றுபு-தடுத்துதைத்துத்தள்ளி. நொக்கு*
*தல்-முற்றுக அழித்தல். அமைவுறுதல்: இன்னலைத்*
*தடுத்தல் செய்யாது பொறுத் தின்பத்தோ டொப்ப*
*விருத்தல். மெய்வ்வகை:உண்மைப் பொருளின் பொது*
*வியல் சிறப்பியல்கள். ஓர்ந்து: ஐயந்திரிபறியாமை நீங்க*
*ஆராய்ந்து. ஒருவல்: இன்னவெல்லாம் பொய்யென்று*
*கண்டு உயிர் தன்னுண்மை நோக்கி நிற்றல். இவற்று: இம்*
*மூன்று வழிகளுள்ளும். தகை-அழகு.* 288

289. மகன்றுறலி யல்லது மன்னவ னுயின்
மகன்றகவு நோக்கி வணங்கன்—மகன்றனைப்
பெற்றான் கடமையப் பெற்றியறப் பெற்றனு
மிற்றீர்ந்து நோற்ற லெழில்

*(கு-ரை) அல்லது-அன்றி; குறிப்பு வினையெச்சம். தகவு-தகுதி. அப்பெற்றியற: அங்ஙனம் வணங்கவும் வணங்கப்படவும் நேர்தலுறு நிலைமை தவிர்தற்கு,*

*மகனைப் பெற்றான் தன்மகன் துறவியாயினும் அல்லது முடிமன்னவனாயினுந்தன்மகன்றகுதி கருதி அவனை வணங்கல் கடமையென்க. இல்-மனை. 289*

**290.** நன்மகனை வாய்த்தீன்ற நற்றாயை யந்நல்லா
டன்மகனுந் தாள்பணிதல் சாலவெழின்-மன்மகனே
யாயினும் பற்றற்ற வந்தணனே யாயினுந்
தாயினு மேலல்லன் றான்

*(கு-ரை) வாய்த்து: வயிறுவாய்த்து. நற்றாய்-பெற்றதாய். நல்லாள்-பெண். மன்மகன்-மன்னனாகிய ஆடவன், அந்தணன்-முனிவன்.*

*மன்மகனேயாயினும் அந்தணனேயாயினும் நற்றாயை அவளுடைய மகனும் அடிபணிதல் சால வழகுபயப்பதாம்; என்னை? கடவுளருட்படப் பிறரெல்லார்க்கு மேலாயினுந் தான் தன்றாயினு மேலாகானாகலானென்க. 290*

**291.** அழகே யெனினு மதற்கியை பின்றே
லழகு மழகல்ல தாகுந்—துழவியடு
நல்லாவின் பாலு நவைப்படுந் தூய்மைய
தல்லாத கொள்கலத்திற் றற்று

*(கு-ரை) அதற்கு: அவ்வழகிற்கு. இயைபு-பொருத்தமானசார்பு. நவைப்படும்-குற்றப்படும். கொள்கலத்திற்று-கொள்கலத்தின்கண்ணது. நல்லாவின் பாலுங் கொள்கலத்திற்று நவைப்படும். அற்று-அதுபோல்வது. அழகல்லதாகும். அவ்வாறாதல் அற்றென எழுவாய் விரித்து முடிக்க. 291*

292\. நினைத்தலொரு வர்க்கொருவ ராடி நிழலி
னனைத்துமெதிர்த் தோற்ற மதனு-லெனைத்தானும்
பொற்பின்றி யார்க்கானும் பொல்லாங்கு சூழ்வாரை
யற்பின்றி யிவ்வுலகு மற்று

*(கு-ரை) ஆடிநிழலின்-கண்ணுடி நிழல்போல. எனைத் தானும்-எவ்வளவாயினும். அற்பின்றி-அன்பின்றி; வலித் தல். அற்று: அவ்வாறு பொல்லாங்கு சூழும்.*

ஒருவர்க்கொருவர் நினைத்தலனைத்தும் ஆடி நிழல் போலத்தம்முளெதிர்த்தோற்றமென்க. சூழ்தல்-கருதுதல்

293\. விளக்கொளிக் காட்சி விழைவுகூர் விட்டில்
விளக்கொளி வீழ்ந்துயிர் வீடும்—விளக்கொளி
யன்ன வழகின்மே லார்வங் குறுகாம
லுன்ன லுயர்ந்தார்க் குரித்து

*(கு-ரை) வீடும்-சாம். குறுகாமல்-அணுகாமல். உன் னல்-கருதுதல். 293*

294\. மாக்கள் விலங்கு மலிதரு காட்டூடு
தூக்க மொழிந்து தொடர்த்துயரம்—போக்க
ஒளிந்து மொதுங்கியு மோட்டியு மாய்த்துந்
நளிந்தும் பிழைத்த னலன்

*(கு-ரை) மாக்களாகிய விலங்கு. மலிதரு-மிக்க. காட் டூடு-காட்டினூடு. மாக்கள் வாழும் நாடு விலங்கு வாழுங் காடெனப்பட்டது. தூக்கமொழிந்து-விழிப்புற்று: அறி யாமையுமறதியு நீட்டிப்பு மின்றி யென்பதுகருத்து. துய ரத் தொடர்-துன்பத் தொடர்ச்சி. ஒளிந்தும்-மறைந்தும். நளிதல்-செறிதல். நளிந்தும்: உறவும் நட்புஞ் செய்தும். பிழைத்தல்-தப்பி வாழ்தல். நலன்-அழகு. 294*

295. எத்தொழிற்க ணெஞ்ஞான்றும் யாவ னறம்பேணு
மத்தொழிற்க ணன்னுற் கறமுதவும்-அத்தொழிலோ
நற்புகழைத் தந்து நனிஞாலம் பேணுதகு
பொற்புடைத்தாய் நல்கும் பொருள்

(கு-ரை) ஞாலம் நனி பேணுதகு பொற்பு-உலகம் மிகவும் விரும்பிப் போற்றத்தகுமழகு.

பொருள் நல்குமெனமாறுக. பொருள்: கைப்பொருள். கைப்பொருளைக் கொடுக்குமென்க.

ஓகாரம் சிறப்போகாரம். 295

296. எல்லா வுயிரு மியற்கை வினைமுறையிற்
செல்லாநின் றுய்தலோ திண்ணிது—வல்லானி
னேற்றுனு மாங்குயிரை யேவுமெனின் யாரையும்
போற்றுமை தூற்றுமை பொற்பு

(கு-ரை) திண்ணிது-உண்மையாயது: இயற்கையில் அமைந்து கிடந்தது. வல் ஆனினேற்றன்-வலிய காளையூர்தியுடைய கடவுள். ஆங்கு-அவ்வாறு. ஏவுதல்: வினைமுறையிற் செலுத்தியுய்வித்தல். போற்றுதல்: பலரறியப் புகழ்ந்துரைத்தல். தூற்றுதல்: பலரறியப் பழித்துக் கூறுதல். ஓகாரம்: தெரிநிலை. 296

297. நாட்கடனு மேழு நசைக்கடனு நற்கடனு
மாட்கடனும் நட்பி னமர்கடனு—மூட்கடனுங்
கைக்கடனும் வட்டிக் கடனுங் கடவாமே
யுய்க்கலுமோ ரேர்கோ ளுடைத்து

(கு-ரை) நாட்கடனுவன நாடொறுமொருதலையாகச் செயற்பால வைகறைத் துயிலெழன் முதலாயின.

ஏழ்நசைக் கடனாவன தென்புலத்தார் முதலாய ஐவர்க்கும் வேந்துக்கும் எறும்பு, நாய், காக்கை முதலிய அஃறிணையுயிர்க்கு மிறுக்கற்பாலன. இவை பயன் விழைந்து செய்வனவாதலின் நசைக் கடனெனப்படும்.

நற்கடனுய்த்தலாவன. ஒப்புரவு மீகையும்.

ஆட்கடனுய்த்தலாவது ஆற்றாதார்க் கீதல். ஆற்றுவார்க் கீதல் பொலிகடனுய்த்தலெனப்படும். ஆண்கடன் ஆட்கடனெனவும் ஊண்கடன் ஊட்கடனெனவும் வலித்தலாயின ஊண்கடன்: செஞ்சோற்றுக் கடன் முதலாயின.

கைக்கடன்: வட்டியும் உறுதியெழுத்து மில்லாத கடன். ஏர்கோள்-அழகு கொள்ளுதல். 297

**298. இம்பர்ச் சுழலு மிசையன் றுயிர்வேண்டா**
**ரம்பொற் கழல்யாத் தணிவகுத்—தும்பர்**
**வியப்ப வுடைவாளர் வெஞ்சோட்டி யேந்தி**
**நயப்ப நடைகற்ற னன்று**

(கு-ரை) இம்பர்-இவ்வுலகத்துக்கண். இசை-புகழ். அன்று-அன்றி. இசையன் றுயிர்வேண்டார்: போர்ப் படை மள்ளர். அ-அழகு. பொன்-பொலிவு. அம்பொன் என இன வொற்றுமிக்கபுணர்ச்சி. கழல்: காலணி. கழல் யாத்தல் போர்க்குச் செய்த ஏனை மெய்க்கோலமெல்லாந் தழீ இயிற்று. உம்பர்-துறக்கவாழ்நர். உடைவாளர்: உடைவாளுடையராய்: முற்றெச்சம். சோட்டி-துப் பாக்கி; சுடுதலுடையதென்னும் பொருட்டு.

சோட்டியை யேந்தி அணிவகுத்து நடை கற்றலை நன்று நயப்ப வெனக் கூட்டுக. நயப்பவென்பதற்கு உலகத்து மக்களென எழுவாய் விரித்துக் கொள்க. நயப்ப-விரும்புவர். நன்று-மிக. நயப்பவெனவே அழகுடைய தென்றவாறாயிற்று. 298

299. முனிவர் புலவர் முதியர் சிறாஅ
ரினிய வறம்பெண்டி ரேற்றாத்—தனியர்
பிணிய ரிரவலர் பார்ப்பாரைப் பேண
லணியென் றுரைப்பர்நல் லாட்கு

(கு-ரை) ஏற்றா-ஏற்றோடுள்ள ஆவினம். தனியர்: துணையற்ற எளியர். பார்ப்பார்: வெறியறி சிறப்பின் வேலன் முதலாயினோராய் மக்கட்குக் கோயில் வழிபாடு மணவினை முதலாயின நடாத்திக் காணிக்கை பெற்று வாழ்வோர்.

நல்லாள் என்பதனை "நல்லாளிலாத குடி" (முப்பால். குடிசெயல்வகை.) "அறிவார்யார் நல்லாள் பிறக்குங் குடி" (நான்மணி. 4.) என்புழிப்போலக் கொள்க. நல்ல ஆளென்க. 299

300. முன்னிலைத் தோற்ற முழுதுமுயிர் சான்றாக
முன்னிலை யுள்ள முயல்வதே—முன்னிலை
யுள்ள மொடுங்க வுலகொடு துன்பொடுங்கு
முள்ள துயிரெழிலே யூங்கு

(கு-ரை) முன்னிலைத்தோற்ற முழுதுமென்றது உடல், கருவி, நிலந், துய்ப்பென்றிவற்றின் பரப்பெல்லாமடங்கிய முற்றத்தினை.

முன்னிலைத்தோற்ற முழுதுமென்பது உயிர்சான்றாக உள்ள முயலுமாறேயாமென முடிக்க. முன்னிலையுள்ளம்-எதிரிலுள்ளதாகியவுள்ளம். உள்ளத்து முயற்சியாவது நினைவு. நினைவல்லது உலகுந்துன்பமுமில்லை.

ஊங்கு: அவ்வொடுக்கங்களின்பின். ஊங்கு இருந்தவாறிருப்ப துயிரெழிலேயா மென்க.

உலகம்: நனவுங் கனவும் பிறவும். நனவு கடவுளது நினைவு. கனவு உயிரது நினைவு. கனவில் வழி நனவுமில்லையாம். 300

301. அடக்கமொடு கல்வி யருளுடைமை வாய்மை
தொடக்குமன் பஞ்சாமை தூய்மை—நடக்கு
மொருதனி மேவ லுழைப்பிவையொன் பானுந்
தருமறிவின் றெய்வவெழிற் சார்பு

(கு-ரை) தொடக்குமன்பு-பிணிக்குமன்பு. தூய்மை: தண்ணீர் முதலியவற்றானே உடம்பு முதலியன எச்சிலு மழுக்குந் தொடக்குமிலனாதல்.

நடக்குமொருதனிமேவல்: ஒருவனாகித் தனித்து நடந்து நெடுநல்வழிச் செலவு மேற்கொண்டு திரிதல்.

உழைப்பு: ஒருவன் றனக்கு வேண்டுவனவற்றைப் பிறவழியாற் பெறாது தனது தொழின் முயற்சியானே பெற்றுக்கொள்ளல்.

ஒன்பானும் அறிவின் றெய்வவெழிற்சார்பு தருமென முடிக்க. இஃதிரட்டுற மொழிதல். இஃது ஒன்பானுஞ் சார்பினைத்தருமெனவும் ஒன்பானையுஞ் சார்புதருமெனவுந் தடுமாறி நிற்கும்.

அறிவின்றெய்வம்: மெய்யுணர்வு காறுமேன்மேலாகு மறிவுக்குச் சிறந்தகடவுள்.

சார்பு: உயிரின்கண் அத்தெய்வம் வந்தேறிநின்றொன் றுபடுதலுந் துணையாதலுமாம்.

அத்தெய்வந்துணையாய்நின் றொன்பானையுந் தருமெனவும் அவ்வொன்பானால் அத்தெய்வம் அவ்வுயிரின்கண் வந்தேறி யொன்றிநிற்குமெனவு முணர்ந்துகொள்க.

அத்தெய்வச் சார்புடையார்க்குத் தெய்வ அழகுண்டாகும்.

தெய்வந் துணையாதலாவது உள்ளத்துள் உணர்வளவாக எதிர்ப்பட்டு வழிபாடேற்றுவருதலாம்.

அறிவின்றெய்வம் ஒருவர்மேல் வந்தேறிநின்றுயிரோடொன்றி நிற்குமிடத்து அவர்க்கு மெய்யுணர்வெழும்.

எண்ணொடு பிரிந்து தனித்தனிச்சென்று கூடி எண்ணுப் பொருடந்து நின்றது.

உம்மை முற்றும்மை. 301

302. உயிருடைய போலுமெனு மோவியமும் வார்ப்புஞ்
செயிரியர்தங் கோலச் சிறப்புஞ்—செயிரில்
விழைதகுசெம் பொன்மணியின் மேதக்கவேனு
மிழையணியிற் சாஅ மெழில்

(கு-ரை) உயிருடைய போலுமெனும்-உயிருடையன போலுமென மயங்கத்தகுகின்ற. வார்ப்பு-சிற்பம். செயிரியர்-கூத்தர். அடைஓவியத்துக்கும் வார்ப்புக்கும் பொது. கோலச்சிறப்பு-சிறந்தஆண் பெண் செயற்கைத்தோற்றம். செயிர்-குற்றம். இல்-இல்லாத. பொன்மணி:உம்மைத் தொகை; ஒரு சொன்னடைத்தாய் ஐந்தாம் வேற்றுமையாயிற்று.

ஓவியமும் வார்ப்புங் கோலச் சிறப்பும் எழில் சாமெனவியைக்க.

இழையணியின் என்ற குறிப்பான் ஆண்பால் பெண்பாலமைப்போவியமும் வார்ப்புங்கோலச்சிறப்புமென்பது பெறப்படும்.

அம்மூன்றும் எத்துணைச் சிறப்பினவாயினும் இழை யணிந்து தோன்றுமாயின் எழில் சாமென்க.

இழையெனவருதலின் மேதக்கன இழையென்பது பெறப்படும். இழை; அணிகலமும் பூணூல் போல்வனவும்.

303. வேள்பாரி வையாவிக் கோப்பெரும் பேகனென
நீள்பாரி னின்று நிலவுபுக—ழாள்வார்
வறிதுமெதிர் நோக்காது வள்ளன்மை பூண்டார்
அறிமடமு மன்னோர்க்கே யைது

(கு-ரை) வேள்பாரி முல்லைக்குத் தேரளித்தான். வையாவிக் கோப்பெரும்பேகன் மயிற்குப் போர்வை யளித்தான். என-போல. பாரின்-உலகில். ஆள்வார்- உடையராவார். வறிதும்-சிறிதும். எதிர்: இம்மையினு மறுமையினுந் தமக்குக் கிடைக்குமூதியம். அறிமடம்- அறிந்தும் அறியாமை. உம்மை; இழிவுசிறப்பு.

அன்னோர்க்கு: அவ்வள்ளல்கட்கு; அவர்க்கே யன்றிப் பிறர்க்காகா தென்பது கருத்து. ஐது-அழகியது. ஏகாரம் பிரிநிலை.

ஆள்வார், பூண்டார் என்னும் வினைப்பெயர் ஒரு பொருட்பல்பெயராய் ஆரும் வேற்றுமையேற்று அறிம டத்தொடு முடியும். 303

304. அதிர்க்குந் துயர மணைந்தக்கா லூக்கி
யெதிர்த்த லெதிர்த லிகத்தல்—கதிர்க்குமிம்
மூன்றனு ளொன்று மொழித்து முசியாமை
யான்றவர்க் கீனு மழகு

(கு-ரை) அதிர்க்கும்-நடுங்குவிக்கும். ஊக்கி-ஊக்கமு டையராய். எதிர்த்தல்: சூழ்ச்சிகளானுங் கருவிகளானு

அத்துன்பத்தைத் தடுத்து நீக்கல். எதிர்தல்: அத்துன் பங்களையெல்லாமுடன்பட்டுத்தடா தேற்றுக் கொள்ளு தல். இகத்தல்: அவ்விரண்டுமின்றி ஒருவன் அவற்றோடு தனக்குச் சிறிது மியைபின்மையை மெய்யுணர்வான் உள்ளவா றுணர்ந்து அவற்றைவிட்டு நீங்கித்தன்னியல் பினிற்றல்.

கதிர்க்கும்-மேலிட்டு விளங்குகின்ற. ஒழித்து: பகை, பிணி, வறுமை யென்பனவற்றான் வருந்துயரங்களை யொழித்து.

முசியாமை-உள்ளம் வாடாதிருத்தல்.

அழுகீனுமென்க. 304

305. தற்காப்புக் காகுந் துணைவலியுந் தன்வலியும்
இற்காப்புக் கின்றி யமையாவாய்ப்-பொற்காப்பும்
ஏய்ந்தொருவன் வாழ்க்கை யெழில்பெறச் செய்யுமிகல்
காய்ந்தெனவீண் டெய்தல் கடன்

(கு-ரை) இற்காப்புக்கு-தன் உயர் குடியைப் பாது காத்தற்கு. பொற்காப்பு-பொருளைப் பாதுகாத்தல். பொருள்: ஊணுடையுறையுண் முதலாய வுடைமைகள்.

துணைவலியுந் தன்வலியும் இகல்காய்ந்து இன்றியமை யாவாய் ஏய்ந்து செய்யுமென ஈண் டெய்தல் கடனென முடியும். ஏய்ந்து-பொருந்தி. ஒருவன் வாழ்க்கையை அழகு பெறச் செய்யுமென்க. இகல்-பகைவர். ஈண்டு-இவ்வுலகத்து. எய்தல்: அவ்விரு வலிமைகளையு மடைந் திருத்தல். கடன்-இன்றியமையாதது; மக்களெல்லார்க் குங் கடனென்க. என: என்று கருதி. செய்யும்: முற்று.

306. பிறப்பானே யன்றி யிணைவிழைச்சுப் பேணு
மறப்பானு மற்றை யுயிர்கள்—சிறப்பாய
மாந்தர் பிறப்பு வகையிலர் போந்த
வினையெழிலா ளுகுவர் மேல்

*(கு-ரை) இணைவிழைச்சு: ஆண் பெண் இடக்கர்ப் புணர்ச்சி. பேணு-விரும்பாவாம். மறப்பானும் பேணு வென்க; மறந்தும் விரும்பாவென்றவாறு.*

*புள், விலங்கு முதலாய வுயிரெல்லாம் இயல்பாகவே தத்தமுட் பிறப்பு வேற்றுமையானே பிறப்பு விராய்ப் புணர்ச்சி கொள்ளவிழையாமை மரபாயிற்று. அஃதின் மையின் மாந்தர் தம்முட் பிறப்புத் தடையிலராய்த் தம் முள் எவ்வினத்தாடவரும் எவ்வினத்து மகளிரொடும் புணர்ந் தின்பந் துய்த்தலு மகப்பெறுதலு மொல்லுமாக லின் மாந்தர் பிறப்பு வகையானன்றி அழகிய வினைவகை யான் மேலாகுவரென்க. செய்துபோந்தவென்க. பிறப்பு வகை: மேல் கீழ் வேற்றுமை. மேலாகுவரென மாறுக. தம்முட் கீழாகாது மேலாகுவர்.*

*வினை: ஒழுக்கமுந் தொழிலும்.* **306**

307. எத்துணைத் துன்பமு மேற்றிது துன்பமென
வத்துணைத் துன்பமு மவ்வப்போழ்-தொத்துநனி
யுண்ணேக்கு மொட்ப முடையார்க்குத் துன்பமு
மெண்ணேக்க மீர்க்கு மெழிற்று.

*(கு-ரை) ஏற்று: வரவேற்று. இது துன்பமென: இது துன்பமென்று சுட்டித் தம் முன்னர் வைத்துக் கண்டு. அவ்வப்போழ்து: வேறு வேறு துன்பந் தோன்றுகின்ற நேரந்தொறும்.*

ஒத்து: மாறுதொருபெற்றிப்பட்டு. நனி-மிகவும். உண்ணேக்கி நிற்றலுடையார்-உள்ளத்தில் அத்துன்பத்தையே பார்த்துக்கொண்டிருத்த லுடையார்.

எண்ணேக்கம்-நினைக்குங் காட்சி: நினைத்துப்பார்க்கும் பார்வையை.

துன்பமு மெழிற்றெ ன உம்மை இறந்தது தழீஇயிற்று; இன்பமேயன்றித் துன்பமுமெனக் கொள்ள நிற்றலின்.

எழிற்று-அழகுடையது. 307

308\. உள்ள மொடுங்க வுலகொடுங்கு முள்ள
மொடுங்கா வழியே யுலகுண்-டொடுங்காத
துன்பமுண் டுள்ளந் துடிப்பற்றுத் தூய்தாயி
னின்பமுண் டாக்கு மெழிற்று

(கு-ரை) உள்ள மொடுங்குதல்: உள்ளமுளப்பாடற்று வாளா கிடத்தல். உலகொடுங்குதல்: உலகங் காட்சிப் படாதொழிதல். உண்டு: காட்சிப்படுவதாம்.

உலகு: நனவுலகுங் கனவுலகு மயக்கவுலகும்.

ஒடுங்காதவுள்ளந் துன்பமாகலின் உள்ளமொடுங்கா வழி உலகுமுளதாம்; அதனெடு துன்பமு மொடுங்காதாம், துன்ப முள்ளத்தது திரிபாகும்.

துடிப்பற்று: இடையருத அசைவற்று. தூய்தாயின்-திரிபில்லதாயின்.

அவ்வுள்ளம் இன்பமாமெனக்கண் டுயிரா னுகாப்படு மழகுடையதாமென்க.

ஏகாரந்தேற்றம். 308

309. கூட்டாண்மைக் கெல்லா முலகப் பொதுமொழிதந்
நாட்டாண்மைக் கவ்வவர் நாட்டுமொழி—வேட்டாண்மை
மாந்தர் மொழிப்பூசல் வையாது தங்கொற்ற
மேந்த லெவர்க்கு மெழில்

(கு-ரை) கூட்டாண்மை: தம்முட் டொடர்ந்துள்ள பலநாடு தம்முளொன்றுகூடித் தமது பொதுவினாட்சி நடாத்தலும் உலகப் பல நாடுந் தம்முளிணைப்பு வைத்து வழங்குதலுமாம். நாட்டாண்மை-நாடாளலுடைமை. வேட்டு-அவாவி. ஆண்மை மாந்தர்-அஞ்சாமையுடைய மற மக்கள். மொழிப்பூசல்-மொழிப் பொருட்டுச் செய்யும் போராட்டம். வையாது-கருதாமல். கொற்றம்-அரசியல். ஏந்தல்-மேற்கொண்டுய்த்தல். எவர்க்கும்: உலக மக்களெல்லார்க்கும்.

உலகப் பொது மொழியையும் நாட்டு மொழியையும் வேட்டெனவியையும்.

இவ்விரு மொழியுமே கட்டாயமொழியாகல் வேண்டும். ஏனைமொழி வேட்கை மொழியாயிருக்கலாம். 309

310. மக்கட் டொகை பெருகு மக்களெல் லார்க்குமிணை
யொக்க வுரிய துலகெல்லா—மிக்க
விடந்தொறும் யாருங் குடிபுகுதல் கூர்க்கு
மடம்பட லன்று வனப்பு

(கு-ரை) பெருகும்-பெருகுகின்றது. இணையொக்க-நிகரொப்ப. மிக்க: இன்னுங் குடிபுகாதெஞ்சிய. கூர்க்கும்-வெகுள்கின்ற. கூர்த்தல்: குடியேறுவார் குடியேறுதலைத்தாம் வெறுத்தொழிதலும் அவர் குடியேறுதலைப் பிறர் வெறுத்து விலக்குதலுமாம். மடம் படல்-அறியாமைப்படுதல். வனப்பன்றென மாறுக.

உலகெல்லா மென்றதன்பின் அதனுலெண்ப திசை யெச்சம். 310

311. நோய்நாடி நோய்முத ஞடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்புறச் செய்வழி—நோயார்க்
கருத்தியொடு தாய்தந்தை யையனண் பாதன்
மருத்துவ நூல் வல்லார் வனப்பு.

(கு-ரை) முதல்-காரணம். வாய்-வழி. வாய்ப்புறச் செய்தல்-தப்பாமற் செய்தல்-அருத்தி-அன்பு. அருத்தியொடு: ஒடுக்கருவிப் பொருட்டு; ஊசியொடு குயின்ற தூசும்பட்டு மென்புழிப்போல. அருத்தியா லென்றவாறு. ஐயன்-உடன்பிறப்பாளன். நண்பு: நண்பன்.

தாய் தந்தை யையனண்பு: செவ்வெண்; என்றிந் நால்வருமாதலெனத் தொகைச் சொல்விரிக்க. உயர்திணை யும்மைத்தொகையாயிற் பலரீற்றதாதல் வேண்டும்.

312. துய்த்தலுந் தூக்கமும் யாக்கைத் தொழிலுமள
வொத்தன வாதலுமோ ரொண்கவின்-அத்தகைய
தம்முளொவ் வாதுறழ்தல் சாருமேற் சாருமால்
விம்முறுநோய் மேன்மேன் மிக

(கு-ரை) துய்த்தல்: உணவுண்ணுதலும் ஐம்புலனுகர்தலும். அத்தகைய: வினைப்பெயர்; அத்தன்மையுடைய மூன்றுமென்றவாறு. உறழ்தல்: மிகுதலுங் குறைதலும். விம்முதல்-அழுதல். விம்முறுநோய்-அழுதலைச் செய்யு நோய். 312

313. பாராளு மன்றக் கிளைஞர்த் தெரிவுசெயு
மூராளர் மன்ற லுடையாராய்ச்—சீராக
வோதினராய் மன்றிற் கடுந்தெற்ற முற்றிலரா
யேதிலரு மாத லெழில்

(கு-ரை) கிளைஞர்-உறுப்பாகுநர். மன்றல்-கடிமணம். சீராக-திருத்தமாக. ஓதினராய்-படித்தவராய். மன்று: உசாமன்று. தெற்றம்-தண்டனை. ஏதிலர்-அயலார். ஏதிலராதல்: குழுச்சார்புநோக்கா தயலாராதல். 313

314. சுற்றந் தொழிலொழுக்க மெய்ப்பினில் வைப்பெனச்
சொற்ற விவைநான்குந் துன்னுதல்—பெற்ற
குடிவாழ்க்கை தீங்கின்றிக் குன்றுது நிற்றற்
கடியாகி மன்னு மழகு

(கு-ரை) துன்னுதல் அடியாகி மன்னுமழகென வினையும்.

எய்ப்பினில் வைப்பு: நோயானு முதுமையானுந் துறவுள்ளத்தானு மிளைத்துத் தொழில் கைவிட்டபொழுது சுற்றத்துக்குதவுதற் பொருட்டுப் பாதுகாத்து வைத்திருக்கும் பொருள்வைப்பு.

துன்னுதல்-கூடுதல். குடிவாழ்க்கை-குடும்பவாழ்க்கை. தீங்கு: வறுமை, பகை, பழியென்பன. அடியாகி-காரணமாகி. மன்னும்-நிலைபெறுகின்ற. 314

315. ஆர்வமொ டூக்க முயற்சி யடைவுநான்
கீர்நலந் தீங்கென் றிரண்டினு-நேர்வனவே
யாயினு நற்பா லழகியவா மல்லவை
நோயினு நோவு தரும்

(கு-ரை) அடைவு: முயன்றடையற் பாலதனை யடைதல். ஈர்நலம்-ஈரிய நன்மை; ஈரிய-குளிர்ந்த: இனியவென்றவாறு.

நலந் தீங்கென் றிரண்டன்கண்ணும் ஆர்வம், ஊக்கம், முயற்சி, அடைவென்னுமிந்நான்கு முறையானெப்ப

நிகழ்வனவேயாயினும் அவற்றுள் நன்மைப்பகுதியாகிய ஆர்வமுதலாய நான்கு மழகியனவாம். ஏனைத்தீமைப் பாற்பட்டனவாகிய ஆர்வமுதலிய நான்கும் ஒருவர்க்கு நோயிற் காட்டினுந் துன்பம் பயக்குமென்க. 315

316. யாடு குதிரைமான் யானைநாய் புள்ளின
மாடு வளர்க்கின் மகவேபோற்—கேடு
பனிவெயின் மாரி படர்காத்து நோய்தீர்த்
தினிதூட்டி யுய்த்த லெழில்

(கு-ரை) மாரி-மழை. கேட்டினையும் பனிமுதலியவற்றானுறுந் துன்பத்தையுந் தடுத்தென்க. படர்-துன்பம். காத்து-தடுத்து. கேடு பகையாலுண்டாவது.

இனிதுண்பித்து இனிதுய்த்தலெனக் கூட்டுக. இனிதுண்பித்து-இனியவுணவினையூட்டி. இனிதுய்த்தல்-துன்பமின்றுகத் தொழிற்கணடாத்துதல். 316

317. ஏடு முறியாம லேடுமறுச் செய்யாம
லேடு நிலத்தி லிடாமன்மற்—றேடு
பிடிக்கின் வழாது பிறர்க்கீயா தோம்பி
வடிக்குமே டோதல் வனப்பு

(கு-ரை) ஏடு-புத்தகம். முறித்தல்: வளைத்தலுங் கிழித்தலும். மறுச்செய்யாமல்-அழுக்கும் புள்ளியு முண்டாக்காமல். நிலத்திடாமல்; வெறுநிலத்தில் வையாமல். வழாது: தவறிவிழாமலும் ஒழுங்கின்றிப் பிடியாமலும். பிறர்க்கீயாது: பிறர்க்குப் படிக்கக்கொடாமல். கொடுக்க வேண்டுமாயின் வேறு புத்தகம் வாங்கிக் கொடுத்தல் வேண்டும். வடிக்குமேடு-திருந்தப்பதிப்பித்த புத்தகம். ஓதல்-படித்தல். 317

318. அன்பினீ ராடி யகந்தூய்மை யாக்கிமற்
றின்பமார் நல்லொழுக்க மேன்றுடுத்து-நன்பொருட்
பல்கலை பூசி யுழைப்புப் பணிபூண்டு
வெல்கவின் மேற்கொள்வா ருண்டு

*(கு-ரை) நீராடியென்பது முதலியவினைகளான் அன்பு முதலாயின புனன் முதலியனவாகப் பிழம்பு பிறிதாதலணியாம். கலை-கல்வி.*

*உழைப்பு-வாழ்க்கைத் தொழின் முயற்சி. பணி-அணிகலன். வெல்கவின்: பிறரழகினை வெல்லுமழகு. மேற்கொள்வார்: தம்மிடத்துச் செய்துகொள்வார்.*

*உண்டு: ஐம்பான் மூவிடப் பொதுவினைக் குறிப்பு முற்று: ஈண்டுப் பலர்பாற்படர்க்கைமேனின்றது; உளரென்றவாறு.* **318**

319. மனைவிளக்கி நீர்தெளித்து மாலைவிளக் கேற்றி
நனைமலர்தூய் நல்லுளமோ டில்லம்—புனைகடவு
ணோக்கம் புரிகடமை நோன்றன் மனைவாழ்வார்க்
காக்கம் பயக்கு மழகு

*(கு-ரை) விளக்கி: அலகிட்டுத்துடைத்து. மாலைவிளக்கு: மாலைநேரத்து விளக்கு, மாலை சூட்டிய விளக்கென இரட்டுற மொழிதல். நனைமலர்-அரும்புமலரும்; குளிர்ந்தமலருமாம். நல்லுளம்: கவலையுந் தீய நினைவுமில்லாதவுள்ளம். தூய்-தூவி. இல்லம் புனைகடவுள்-இல்லத்தை அழகு செய்யுந் தெய்வம். நோக்கம்: நோக்கனோக்கம்: நினைவுகொள்ளுதல். புரிகடமை-செய்யுங்கடன். நோன்றல்-மேற்கொண்டுவிடாமை. ஆக்கம்-மேன்மேலுயர்வு; செல்வமுமாம்.* **319**

**320. தமக்கியலுந் தோறுந் தமித்துறைத லோவா**
**தெமக்கிறைதா ளோமோமென் றெண்ண-றமக்கு**
**முடியுமள வெல்லாந்தம் மூச்சடக்கன் மூன்றுங்**
**கொடிதொரீஇப் பொற்புறூஉங் கொட்பு**

*(கு-ரை) இயலுந்தோறும்: வாய்ப்புக் கிடைக்குந் தோறும். தமித்துறைதல்: யாரொடுங் கூடாது ஓரிடத் துத்தனித்துத் தங்குதல். எமக்கிறைதாள்-எமக்கிறைவ னுயினனது திருவடி. ஓம்: இறைவனதியற்பெயர்.ஓமோம்: அடுக்கு இடைவிடாமை மேல் வந்தது. கொடிது-தீதினின் றும். ஒரீஇ-நீக்கி. பொற்பு-அழகு. உறூஉம்: மிகுவிக்கும். கொட்பு-கொள்கை. ஒருவர்க் கிம்மூன்றுங் கொடிதொரீ இப்பொற்புறூஉங் கொட்புக்களாமென்க. பொற்புறூ உம்: நல்வினையினுகுமழகை மிகுவிக்குமென்க.*

*இனிக்' கொடிதென்ற திருவினைத் தொகுதியை யெனவும் பொற்பென்றது அறியாமை ஐயந்திரிபினீங் கிய அறிவினழகினை யெனவுங் கொளினுமாம். 320*

**321. உணர்வுப் பிழம்பா முயிர்யாண்டு முள்ள**
**துணர்வு பிறிதெதிர்ப்பா டன்றின்-றுணர்வுதான்**
**முன்னைத்தாக் கோதலின் முன்னுத் தனிமையே**
**தன்னைத்தா னேக்குந் தகை**

*பிழம்பு: திரளும் வடிவுமாம். யாண்டுமுள்ளது: எவ் விடத்துமெக்காலத்துமுள்ளது: அதனுற் புடைபெயர்ச்சி யில்லதென்றவாறு. எனவே உணர்தலென்பதுதன்னின் வேருயதெதிர்ப்படுதலேயன்றிப் பிறிதின்றென்க; அசை வில்லதாகலின். அன்று-அன்றி. தாக்கு-எதிர்ப்படுதல்; "யானை வெரூஉம் புலிதாக் குறின்" என்புழிப்போல. (முப்பால். ஊக்கமுடைமை.) ஓதல்-ஒழிதல். "ஓஒதல் வேண்டும்" என்புழிப் போல. (முப்பால். வினைத் தூய்மை.) முன்னு: யாதொன்றனையும் நினையாத.*

தகை-அழகு. தனித்திருத்தலே தன்னைத்தானேக்குதலல்லது அஃதொருதொழிலன்றென்றவாறு. செயலாயின் நிறைவு பொய்க்கும். 321

322. சார்பினே டன்றித் தமித்துளதன் றிவ்வுள்ளஞ்
சார்பினற் றன்றிரியுந் தன்மைத்துச்-சார்புதான்
றூயதெனிற் றூய்து துகளிற்றே லற்றேயா
மாயவருட் சார்புடைமை யைது

(கு-ரை) சார்பாவன ஏனை ஐம்புலன் முதலாய உலகக் கூறுபாடெல்லாம். உள்ளம் அவற்றேடெல்லா மியைந் தன்றித்தனித்திருப்பதன்று; அதனல் அவற்றுவழிப்பட்டு அவற்றுக்கேற்பத் திரிபுபெறுந் தன்மையுடையதுள்ளம். தூயசார்பு தூய்தல்லாத சார்பெனச் சார்பிரு வகைப்படும். துகளிற்று-குற்றமுடையது. துகள்-அழுக்கு: குற்றம். அற்றாகும்: உள்ளந்தானும் அத்தன்மையதாகும்: குற்றமுடையதாகு மென்பதாம். ஆயவருள்-உயர்ந்த அருள்: திருவருள். ஐது-அழகியது. ஐ-அழகு.

திருவருட் சார்புடைமையாவது திருவருளாகிய சார்பினை நோக்கி நிற்றல். 322

323. ஓருயிர் தான்றன்னை யோர்ந்து தெளிதலு
மாருயி ரெல்லாந்தா னதலால்-ஆருயி
ரெல்லாமாய் நிற்கு மெழிற்செம் பொருளொன்றி
னல்லாதாய் நில்லா தது

(கு-ரை) ஓர்ந்து-ஒருமுனைப்பட்டாராய்ந்து. ஆருயிர்-அரியவுயிர்; கருவிக்ட்குப் புலனகாத வுயிரென்றவாறும். ஆருயிர் நிறைந்த வுயிரென்றுமாம். செம்பொருள்: ஒரு ஞான்றுந் திரிபின்றி இருந்தாங்கேயிருக்கும் பொருள்.

அஃதாவது வள்ளியென்னும் வடுநீங்கு சிறப்பின் முதற்பொருள். அது: தான்றன்னையோர்ந்து தெளிந்தவுயிர். அது எழிற் செம்பொருளினின்றும் வேறுயிராது. அல்லா தாய்-வேறாய்.

எனவே அதுவேதானா யொன்றாயிருக்குமென்பதாம்.

**324.** அல்லும் பகலு மழகே புரிந்திட்டுப்
புல்லுந் திறத்திற் புகழ்பலவுஞ்-சொல்லும்
பழகியடிப் பட்டவருட் பாடலர் தம் பொற்
பழகியசிற் றம்பலவ னன்பு

(கு-ரை) புரிந்திட்டு-விரும்பி நின்று. புல்லுந் திறத்தின்: அவ்வழகுடையானைக் கூடிக் கலந்துகளிக்கும் வகையால். தொழும்பர்-அடியார்.

அருட்பாடற்றொண்டரது பொற்பாவது அழகிய சிற்றம்பலமுடையான்பால் அவர்க்குண்டாய அன்பாமென முடிக்க. 324

**325.** தனது நனவினுறுந் தன்னுண்மைக் காட்சி
கனவினு மன்றியே காணுங்-கனவொழிந்
தாழுந் துயிலினு மத்துயிலி னப்பாலும்
வாழும் வனப்பே வனப்பு

(கு-ரை) ஆழும்-அழுந்தும். தன்னுண்மைக் காட்சி வாழ்தலாகிய அழகே அழகு. 325

**326.** அவாவிறொ டச்சம் பொருளைய மூன்றன்
குவாலினைச் செற்றுக் குமைப்பத்-தவாதுள
னுள்ளுத லெல்லா மொருங்கொழிந் தொள்ளிதிற்
றெள்ளுத லெய்துந் திரு

(கு-ரை) குவால்-கூட்டம். செற்று-தடுத்து. குமைப்ப-மிகடுக்க. தவாது-கெடாது. உளன் தவாதுள்ளுதலென்க. ஒள்ளிதின்-ஒளியுடையதாக. தெள்ளுதல்-தெளிதல். திரு: தெய்வ அழகு. தெள்ளுதல் திரு எய்து மெனமாறுக.

குமைத்தலால் ஒருங்கொழிந்தென வியைக்க-உளந் தெள்ளுதலென்க. 326

327. இறையருள் பெற்ற மிமையோர்வா னீத்தார்
துறையறந் தொல்லுலகு தூயோர்—குறையற
யாவரும் வாழ்க வெனவாழ்த்தல் யாவர்க்கு
மாய்வருந் தூய வழகு

(கு-ரை) இறை அருள்-இறைவனுந் திருவருளும். பெற்றம்-ஆவுமானேறும். வான்-மழை. துறையறம்-அறத்துறை. தூயோர்-அகத்தும் புறததுங் குற்றமில்லார்தார். ஆய்வருமழகு-உண்டாகிவளரு மழகுபயப்பது. 327

அழகியது முற்றும்

திருச்சிற்றம்பலம்

ஓம்

ஓம்

# செய்யு ளெடுப்பு

## அகர முதல்


| பாட்டு | மருங்கெண் |
|---|---|
| அகவை | 84 |
| அஞ்சாது | 62 |
| அஞ்சாமை | 72 |
| அடக்கமொடு | 121 |
| அடக்கமொழுக் | 100 |
| அடிமையாள் | 36 |
| அடைக்கலங் | 73 |
| அணியிழை | 50 |
| அதிர்க்குந் | 123 |
| அயற்சொற் | 23 |
| அருள் செய் | 9 |
| அல்லும் | 134 |
| அவாவினை | 134 |
| அழகற் | 79 |
| அழகிலவும் | 41 |
| அழகுடையார் | 7 |
| அழகே நயக்கும் | 48 |
| அழகே யெனினு | 116 |
| அழகொடு | 77 |
| அறம்புரிதற் | 16 |
| அறனு | 16 |
| அறிவும் | 75 |
| அறிவொடு | 99 |
| அன்பரு | 11 |
| அன்பினீ | 131 |
| அன்புக்கு | 40 |
| அன்பு நா | 48 |
| அன்பும் | 28 |
| ஆக்குவோற் | 36 |
| ஆசிரிய | 23 |
| ஆடவர்க்குப் | 10 |
| ஆடவர்க்கு வாழ்க்கை | 80 |
| ஆட்கிக் | 39 |
| ஆர்வமொ | 129 |
| ஆவுதங் | 37 |
| ஆள்வினை | 61 |
| இகலெதிர் | 60 |
| இடக்கர் | 103 |
| இடங் கழி | 30 |
| இடம்பொரு | 68 |
| இணங்கிக் | 33 |
| இம்மை | 72 |
| இம்பர்ச் | 119 |
| இயங்குந | 94 |
| இயலெழுத்து | 24 |

| பாட்டு | மருங்கெண் |
|---|---|
| இயல்பெழி | 84 |
| இயற்கைப் | 52 |
| இயற்கை யழகு | 4 |
| இயற்கை யழகு | 51 |
| இயற்கையோ | 90 |
| இரண்டாவ | 114 |
| இல்லதில் | 5 |
| இல்லமெரிப்பதூவும் | 92 |
| இல்லா | 59 |
| இல்லெதிர் | 60 |
| இளமைக்க ணூல் | 68 |
| இளமைக்க ணேய் | 68 |
| இளமைக்கழகு | 9 |
| இளமை முதுமை | 89 |
| இறையருள் | 135 |
| இறைவன் | 112 |
| இன்ப மிழிவு | 73 |
| இன்பமுந் | 44 |
| இன்பமே | 113 |
| இன்பம் | 70 |
| இன்றி | 3 |
| இன்னிசை | 106 |
| ஈன்றிளைப் | 58 |
| உகிர் கடித்தல் | 109 |
| உடலழகிற் | 44 |
| உடற் கழகு | 11 |
| உணர்வுப் | 132 |
| உண்ட | 83 |
| உண்டாட் | 97 |
| உண்ணுட | 71 |
| உண்மை | 67 |
| உண்மை | 88 |

| பாட்டு | மருங்கெண் |
|---|---|
| உயிரினை | 111 |
| உயிருடைய | 122 |
| உயிரொன் | 4 |
| உயிர்தன்னை | 110 |
| உயிர்ப்பு | 55 |
| உலகுதா | 111 |
| உலகுமுயிரு | 6 |
| உலகிற் | 108 |
| உள்பொருளே | 28 |
| உள்ளங் | 81 |
| உள்ளமுணர்வில் | 110 |
| உள்ளமொடுங்க | 126 |
| உள்ளம் | 80 |
| உழப்புடையார் | 70 |
| உழவர் | 14 |
| உழையவர் | 96 |
| ஊட்டந் | 32 |
| ஊர்ப்புறம் | 57 |
| எண்ண | 75 |
| எதிர்வார்ச் | 5 |
| எத்திறத் | 95 |
| எத்துணைத் | 125 |
| எத்துணையுஞ் | 57 |
| எத்தொழிற்க | 118 |
| எப்பிறப்பே | 64 |
| எப்பெற்றி | 26 |
| எப்பொருளாயினும் | 2 |
| எப்பொருள் | 77 |
| எம்மொழியி | 29 |
| எருவற்கட் | 101 |
| எல்லாமுணர்வோனு | 55 |
| எல்லார்க்கு | 63 |

| பாட்டு | மருங்கெண் | பாட்டு | மருங்கெண் |
|---|---|---|---|
| எல்லா வுயிரினையுந் | 88 | கலையுணர்விற் | 50 |
| எல்லாவுயிரு | 118 | கல்லார்க்குங் | 92 |
| எல்லாவுயிரு | 19 | கல்லுத் | 22 |
| எவ்வகை | 115 | கல்வியறிவொழுக்கம் | 69 |
| எழுதுகோன் | 102 | கல்வியறிவொழுக்கங் | 55 |
| எழுதுதல் | 72 | கல்வியை | 45 |
| எழுத்துக் | 46 | கல்வியொடு | 61 |
| எனைப்பொருள் | 61 | கல்வியொடு | 51 |
| என்பு | 91 | கவினிறை | 25 |
| ஏடு பொறிக்கு | 76 | கள்ளுங் | 36 |
| ஏடுமுறியாம | 130 | கள்ளுணல் | 53 |
| ஏழினு | 2 | கறங்கி | 111 |
| ஏனையழ | 63 | காதலொடு | 76 |
| ஏனையுயிர்க் | 55 | காதன் | 27 |
| ஐம்பொறியு | 47 | காதற் | 17 |
| ஒய்யா | 78 | காதிற் | 26 |
| ஒருவர்மற் | 78 | காம | 100 |
| ஒருவன் செய் | 86 | காலமறிந்து | 65 |
| ஒளியுடைய | 83 | காலமுங் | 19 |
| ஒறுத்தற் | 31 | காலுறை | 95 |
| ஒன்றினென் | 1 | காளைக்குஞ் | 58 |
| ஒன்றே | 93 | கிள்ளை | 91 |
| ஓருயிர் | 133 | குடம்பை | 82 |
| ஓவிய | 47 | குட்டியுங் | 84 |
| கங்குற் | 42 | குத்து | 20 |
| கடவுளைப் | 8 | குயில் கூங்காக் | 54 |
| கடவுளொடு | 101 | குருடனுடைப் | 65 |
| கடவுள்பாற் | 81 | குற்றங் | 99 |
| கடன்படா | 107 | கூட்டாண்மை | 127 |
| கட்டுப்பா | 25 | கேட்டலுங் | 90 |
| கண்ணுத | 43 | கைக்குடை | 70 |
| கண்ணோட்டங் | 45 | கொடுப்ப | 35 |

| பாட்டு | மருங்கெண் |
|---|---|
| கோயில் | 87 |
| கோல்செம்மை | 69 |
| சார்பினளவா | 104 |
| சார்பினோ | 133 |
| சிறுநோக்கு | 98 |
| சுருக்கம் | 53 |
| சுருட்டுப் | 12 |
| சுழன்றுமேர்ப் | 54 |
| சுற்றந் | 129 |
| செய்தற்பண் | 109 |
| செய்தித்தா | 105 |
| செய்யு | 53 |
| செல்வப் | 63 |
| செவ்விதகு | 17 |
| செவ்வியமையாச் | 74 |
| சேரியும் | 65 |
| சொல்லுச் | 66 |
| சொற்செறிவு | 25 |
| சொற்பொழி | 21 |
| ஞாலமெலா | 103 |
| தங்கொற்ற | 49 |
| தந்தைதாய் | 15 |
| தமக்கியலுங் | 132 |
| தமக்குப் | 74 |
| தற்காப்புக் | 124 |
| தனது | 134 |
| தன்பொருட் | 34 |
| தன்னுடைய | 87 |
| தன்னுறைய | 104 |
| தன்னைத்தா | 49 |
| திங்கட் | 52 |
| திருமறு | 17 |

| பாட்டு | மருங்கெண் |
|---|---|
| திறன்மான | 106 |
| தீவிய | 50 |
| துஞ்சாமை | 114 |
| துஞ்சினார் | 58 |
| துய்த்தாலுந் | 128 |
| துறவிக்கென் | 43 |
| துறவுங் | 15 |
| துனியுங் | 17 |
| தூக்கொடு | 38 |
| தூங்குமுயிர் | 94 |
| தொகச்சொல்லி | 21 |
| நரியொடு | 72 |
| நல்லது | 14 |
| நல்லிசைச் | 26 |
| நன்மகனை | 116 |
| நாடுகெழு | 27 |
| நாட்கடனு | 118 |
| நாட்டுக் | 14 |
| நாட்டுத் | 78 |
| நாட்பட்ட | 86 |
| நிலப்படை | 98 |
| நிலைக்களம் | 37 |
| நினைதலொடு | 71 |
| நினைத்தலொரு | 117 |
| நீராடிக் | 33 |
| நீராவி | 112 |
| நீர்மை | 109 |
| நெற்றிக் | 30 |
| நேரத்தை | 102 |
| நோய்நாடி | 128 |
| நோற்றற் | 44 |
| படைக்கலஞ் | 45 |

| பாட்டு | மருங்கெண் | பாட்டு | மருங்கெண் |
|---|---|---|---|
| பண்டு | 49 | பெரியா | 105 |
| பயனில | 62 | பெருமைக் | 35 |
| பயின்ருர்க்குத் | 57 | பெரும்பொழு | 77 |
| பல்லுலகு | 99 | பேரழகு | 65 |
| பற்றென்று | 97 | பொறுமை | 41 |
| பாயிருள் | 6 | மகன்றுறவி | 115 |
| பாராளு | 128 | மகிழ்ச்சி | 100 |
| பாரினுயிர்க் | 15 | மக்கட்டொகை | 127 |
| பார்ப்படிமை | 39 | மக்கட் பிறப்புரிமை | 31 |
| பிணியின்மை | 48 | மக்க ளடிப்படை | 32 |
| பிரிந்ததங் | 82 | மக்க ளுடற்கண் | 33 |
| பிறப்பானே | 125 | மக்களெலா | 83 |
| பிறப்புப் | 29 | மங்கைப் | 73 |
| பிறப்புரிமை | 27 | மடிமை | 74 |
| பிறப்பொடு | 107 | மருகி | 69 |
| பிறர்க்குப் | 42 | மருத்துவர் | 79 |
| பிறர்க்கென | 108 | மனைபுல | 85 |
| புதியநா | 34 | மனையாட்டி | 16 |
| புதுமணம் | 31 | மனைவிளக்கி | 131 |
| புத்தம் | 41 | மாக்கள் | 117 |
| புலரிப் | 8 | மாலைவிளக்கு | 106 |
| புலரியங் | 94 | மிடிநோய் | 39 |
| புலரியம் | 7 | முகத்திற் | 12 |
| புலவிக் | 30 | முச்சாரார் | 52 |
| புலன்வழியே | 93 | முதுமைக் | 43 |
| புல்லலு | 71 | முதுமையஞ் | 37 |
| பெண்டாட்டி | 64 | முனிவர் | 120 |
| பெண்மூர்க் | 73 | முன்னிலை | 120 |
| பெண்ணேவல் | 60 | மூக்குச் | 12 |
| பெண்மையுங் | 59 | மேலுலக | 62 |
| பெரிது | 66 | மொழிக்கழகு | 20 |
| பெரியர்தம் | 76 | யாடு | 130 |

| பாட்டு | மருங்கெண் | பாட்டு | மருங்கெண் |
|---|---|---|---|
| யாண்டு | 66 | வாழ்க்கைக் | 13 |
| வயற்கழகு | 93 | வானவரும் | 18 |
| வரவெதிர் | 64 | விலங்கும் | 18 |
| வரியெழுத் | 56 | விளக்கொளி | 117 |
| வலியா | 96 | விழைவு | 35 |
| வல்லாற்கு | 59 | வெள்ளையர்தம் | 115 |
| வழக்குத் | 13 | வேட்கையும் | 54 |
| வழியியங்கு | 96 | வேட்டங் | 74 |
| வாய்மைமக்கழகு | 10 | வேண்டுமா | 67 |
| வாய்மை பயிற்சி | 79 | வேத | 22 |
| வாய்மையொடு | 108 | வேள் பாரி | 123 |
| வாளா | 80 | வைகறைப் | 6 |
| வாழ | 85 | வைகறையாமந் | 7 |


| பிழை | மருங்கெண் | திருத்தம் |
|---|---|---|
| கொற்ற | 99 | கொற்றமு |
| யாய | 69 | யாய் |
| நிற்பான் நிலை நிற்க | 23 | நிற்பான் - நிலை நிற்க |
| எவ்ளிடத்தும் | 53 | எவ்விடத்தும் |
| செய்யுளுறுப்பு | 53 | செய்யுளுறுப்பு |
| கொள்ளுமிழை | 53 | கொள்ளுமிழை |
| வீடுமெற்றுய்தல் | 62 | வீடுபெற்றுய்தல் |
| செம்பெர்ருளாய் | 63 | செம்பொருளாய் |
| சிர்த்தன்று | 65 | சீர்த்தன்று |
| கொப்பு | 132 | கொட்பு |